

விருதுகளை வென்று குவித்த மத்தியூஸ்

பக்கம் 18

உதயன்

சுடர்: 29 கதிர்: 283 வள்ளுவர் ஆண்டு: 2045 ஆவணி 20, வெள்ளி 05.09.2014

stay connected with uthayan.print uthayanprint Uthayan - A lively National Tamil Daily

பக்கங்கள்
யாழ். - 20/=
வன்னி - 20/=

தெளிவான வானிலை
காற்றுவீச்சு: தென்மேற்குக்காற்று km/h
ஈரப்பதம்: 48%
காற்றழுத்தம்: 1008 hPa
வெளிச்சத் தெளிவு: மிக நன்று
சூரியோதயம்: 05:23
சூரியஅஸ்தமனம்: 18:04



ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பினரின் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருக்கும் போரோ புதூர் பௌத்த விகாரையை பாதுகாக்க கூடிய அக்கறை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி நேற்றுமுன்தினம் இராவணா பலய அமைப்பு பேரணி நடத்தியது. பேரணியின் முடிவில் இந்தோனேஷிய தூதரகத்தில் அதுகுறித்த மனுவைக் கையளித்தது. அப்போது தூதரகத்தின் பாதுகாப்புக் கடமையில் இருந்த பொலிஸ் உத்தியோகத்தர் இராவணா பலய அமைப்பினருக்கு வில்லாக வளைந்து வணக்கம் செலுத்துகின்றார். (படம்: ஏபி)

## கிடைக்கும் உதவிகளை கொச்சைப்படுத்தாதீர்

### அரசுடன் இணைந்திருப்போரிடம் கோருகின்றார் வடக்கு முதலமைச்சர்



யாழ்ப்பாணம், செப்.5
போரால் பாதிக்கப்பட்டவர்களுக்குப் பல உதவிகள் தேவையாகவுள்ளன. அந்தவகையில் அமெரிக்க மக்கள் வழங்கும் உதவிகளை எவரும் கொச்சைப்படுத்தாதீர்கள். அரசுடன் இணைந்திருப்போர் இதுதொடர்பில் அவதானமாக இருக்க வேண்டும் - இவ்வாறு தெரிவித்துள்ளார் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன்.
யு.எஸ். எயிட் அமைப்பால் 25.3 மில்லியன் ரூபா நிதிச் செலவில் மேற்கொள்ளப்

22 ஆம் பக்கம் பார்க்க

# பேச்சுக்குத் தயார்

## சர்வதேசத்தின் கண்காணிப்பின் கீழேயே இரா.சம்பந்தன் அழுத்தமாகத் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், செப். 5
"இலங்கை அரசுடனான பேச்சுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தயாராக இருக்கின்றது. இந்தப் பேச்சு சர்வதேச - மூன்றாம் தரப்பின் - கண்காணிப்பில் நடைபெறுவதையே வரவேற்கின்றோம். பேச்சு ஆக்கபூர்வமானதாகவும், சில வாரங்களுக்குள்ளேயே இதனூடாகத் தீர்வு எட்டப்படக் கூடியதாகவும் இருக்க வேண்டும்" - இவ்வாறு அழுத்தமாகத் தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன்.
"நீண்ட கால - காலவரையற்ற பேச்சில் நாங்கள் ஈடுபடத் தயாரில்லை. சர்வதேசத்துக்கு காண்பிப்பதற்காக எங்களுடன் அரசு பேச்சு நடத்தக் கூடாது. பேச்சு ஆக்கபூர்வமானதாக ஒரு சர்வதேச பங்களிப்புடன் நடைபெற வேண்டும்"- என்றும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.
இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியைத் தமிழ்த் தேசியக்

22 ஆம் பக்கம் பார்க்க

### அ' புரத்தில் 10 பஸ்கள் மீது தாக்குதல்

யாழ்ப்பாணம், செப்.5
கொழும்பில் இருந்து வடக்கு நோக்கிப் பயணித்த தனியாருக்குச் சொந்தமான 10 பஸ்கள் மீது நேற்றுமுன்தினம் இரவு அநுராதபுரம் 60 ஆம் கட்டைப் பகுதியில் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. தாக்குதலால் பஸ்களின் கண்ணாடிகள் உடைந்ததோடு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பயணி ஒருவரும் காயமடைந்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.
இந்தச் சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று நொச்சியாகம பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
நேற்றுமுன்தினம் இரவு யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிப்

22 ஆம் பக்கம் பார்க்க

பிந்திய தகவல்



யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்ற மூன்று பஸ்கள் மீது எழுதுமட்டுவாழ் பகுதியில் நேற்றுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இரவு 9.30 மணியவில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று கூறப்படுகின்றது.

## அரசின் அனுமதியின்றி விக்கி மோடியை சந்திக்க முடியாது

### இப்படிக் கூறுகின்றார் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல



யாழ்ப்பாணம், செப். 05
வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியைச் சந்திப்பதாயின் இலங்கை அரசின் அனுமதியைப் பெற்றே செல்ல முடியும் என்று தெரிவித்துள்ளார் ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல.
நேற்று நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர்

22 ஆம் பக்கம் பார்க்க

## சட்டவிரோத மீன்பிடி; 12 பேருக்கு அபராதம்

முல்லைத்தீவு,செப்.5
முல்லைத்தீவு நாயாறு கடற்பரப்பில் வெளிச்சத்தைப் பயன்படுத்திசுருக்கு வலைகளை கொண்டு மீன்பிடித்த வெளிமாவட்டங்களைச் சேர்ந்த 12 பேருக்கு 36 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளதுடன் 28 லட்சம் பெறுமதியான மீன்பிடி உபகரணங்களும் அரச உடைமையாக்கப்பட்டுள்ளன.
நாயாறு கடற்பரப்பில் திருகோணமலை புல்மோட்டை உள்ளிட்ட வெளிமாவட்டங்களைச் சேர்ந்த

22 ஆம் பக்கம் பார்க்க

### அரச ஊழியரை தேர்தல் பரப்புரைக்கு விடுவிக்க வேண்டாம்



யாழ்ப்பாணம், செப்.5
ஊவா மாகாண சபைத் தேர்தலின் பரப்புரை நடவடிக்கைகளுக்காக எந்தவொரு அரச ஊழியரையும் விடுவிக்க வேண்

20 ஆம் பக்கம் பார்க்க

## ஊவா பயணமாகின்றனர் சமுர்த்தி உத்தியோகத்தர்கள்

யாழ்ப்பாணம், செப். 05
ஊவா மாகாணசபைத் தேர்தலுக்கு பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் ஊழியர்களைப் பயன்படுத்த வேண்டாம் என்று தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு முன்பாக நேற்றுத் தெரிவித்துள்ள நிலையிலும், யாழ். மாவட்டத்திலிருந்து 146 சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களை ஊவா மாகாணத்துக்கு இன்று மாலை அழைத்துச் செல்வதற்குரிய ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.
'திவிநெகும' திணைக்களத்தின் யாழ்.மாவட்ட உத்தியோகத்தர் ரகுநாதனால் இந்த ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இன்று மாலை 5 மணிக்கு பண்ணைப் பகுதியில் அமைந்துள்ள சமுர்த்தி மகா சங்கத்துக்கு ஊழியர்களை வருமாறு தொலைபேசி மூலமான அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.
பெரும்பாலான ஊழியர்கள்

22 ஆம் பக்கம் பார்க்க

## காரைநகர் சிறுமிகள் வன்கொடுமை; 7 சிப்பாய்களின் ரத்த மாதிரிகள் சோதனைக்கு

### யாழ்ப்பாணம் சிறுவர் நீதிமன்றத்தின் உத்தரவுக்கு அமைவாக

யாழ்ப்பாணம், செப். 5
காரைநகரில் சிறுமிகள் இருவர் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கில், சந்தேக நபர்களான 7 கடற்படைச் சிப்பாய்களின் இரத்த மாதிரிகளைப் பரிசோதனைக்கு உட்படுத்துமாறு யாழ்.சிறுவர் நீதிமன்றம் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளது. அத்துடன் குறித்த வழக்கைச் சிறப்பாகக் கொண்டு நடத்துவதற்கு பொலிஸார் உரிய முறைப்படி நடந்துகொள்ளவில்லை என்றும் நீதிமன்றம் சுட்டிக்காட்டியுள்ளது.
இந்த வழக்கு யாழ்.சிறுவர் நீதிமன்றில் நீதிவான் ஜீவராணி கறுப்பையா முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே நீதிவான் மேற்கண்டவாறு உத்தரவிட்டுள்ளார்.
விடுமுறையில் சென்றிருந்த கடற்படைச்சிப்பாய்கள் இருவரையும் பொலிஸார் நீதிமன்றில் முற்படுத்தத் தவறியிருந்தனர். அத்துடன் பொலிஸ் அறிக்கையும் சரியான முறையில் தாக்கல் செய்யப்படவில்லை. அதனைத் திருத்துமாறு உரிய விசாரணை மேற்கொள்ளுமாறும் பொலிஸாருக்கு நீதிமன்று உத்தரவிட்டதோடு, பொலிஸார் கவனக்குறைவாக நடந்து கொள்வதால் அடுத்த தவணையின் போதுஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவுக்குப் பொறுப்பான உதவிப் பொலிஸ் அத்தியட்சகரை நீதிமன்றில் முன்னிலையாகுமாறும் சிறுவர் நீதிமன்று கடந்த தவணை பணித்திருந்தது.
தவிர அவர்கள் இருவரும் விடுமுறையில் இருந்த

20 ஆம் பக்கம் பார்க்க

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# போரின் பின்னான பிரச்சினையை கருத்தில் எடுக்கவில்லை அரசு

## தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சின் செயலாளர் தெரிவிப்பு

கொழும்பு, செப்.5
போரின் பின்னரான சமூகப் பிரச்சினைகள் குறித்து அரசு உரிய கவனம் செலுத்தவில்லை என்று தெரிவித்துள்ளார் தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சின் செயலாளர் மல்காந்தி விக்ரமசிங்க.

வறுமை ஆய்வு மத்திய நிலையத்தால் நடத்தப்பட்ட நிகழ்வு ஒன்றில் பங்கேற்று உரையாற்றியபோது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இதுகுறித்து அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

**“ போரின் பின்னர் அரசு பிரதானமாக உட்கட்டுமான வசதிகளை மேம்படுத்துவதிலேயே அதிகளவு சிரத்தை காட்டி வருகின்றது. சமூகம் சார் பிரச்சினைகள் குறித்து கவனம் எடுக்கவில்லை.**

"போரின் பின்னர் அரசு பிரதானமாக உட்கட்டுமான வசதிகளை மேம்படுத்துவதிலேயே அதிகளவு சிரத்தை காட்டி வருகின்றது. ஆயினும் சமூகம் சார் பிரச்சினைகளுக்கு காத்திரமான தீர்வுத் திட்டங்கள் முன்வைக்கப்பட வேண்டியது அவசியமானது.

நீதி, கல்வி, சுகாதாரம் மற்றும் பாதுகாப்பான சூழ்நிலை போன்றன தொடர்பில் தேசிய செயற் திட்டமொன்று வகுக்கப்பட்டு நடைமுறைப்படுத்த வேண்டியது அவசியமானது. இங்கு கொள்கை நடைமுறையாக்கத்தில் பல்வேறு குறைபாடுகள் காணப்படுகின்றன."- என்று தெரிவித்துள்ளார். (ற)



தொலைத்தொடர்புகள், தகவல் தொழில்நுட்பவியல் பிரதியமைச்சராக அண்மையில் நியமிக்கப்பட்ட ஜனநாயக மக்கள் காங்கிரஸின் தலைவரான பிரபா கணேஷன், தனது கடமைகளை கொழும்பிலுள்ள அமைச்சில் வைத்து, அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய முன்னிலையில் நேற்றுப் பொறுப்பேற்றுகொண்டார்.

## கள்ள நோட்டுடன் பெண் கைது

வவுனியா, செப்.5
மதவாச்சியில் 5 ஆயிரம் ரூபா கள்ள நோட்டு வைத்திருந்த பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர் முல்லைத்தீவைச் சேர்ந்தவர் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

குறித்த பெண் வவுனியா பஸ் நிலையத்தில் இருந்து நேற்று முன்தினம் பஸ்ஸில் பயணித்துள்ளார். பஸ் மதவாச்சியில் நிறுத்தப்பட்டபோது, அங்கிருந்த பழ வியாபாரியிடம் 5 ஆயிரம் ரூபா நோட்டொன்றைக் கொடுத்துள்ளார். அது கள்ள நோட்டு என்பதை அறிந்துகொண்ட பழ வியாபாரி பொலிஸாருக்குத் தகவல் கொடுத்தார். அதையடுத்தே பொலிஸார் குறித்த பெண்ணைக் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர் விரைவில் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ற-402)





கடந்த திங்கட்கிழமை தனது 92 ஆவது வயதில் காலமான இலங்கையின் பிரபல தொழிற்சங்கத் தலைவரும், இடதுசாரிக் கட்சியின் ஸ்தாபகரும், வர்த்தக ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளருமான காலஞ்சென்ற பிலிப்ஸ் பாலதம்புவின் உடலுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் அஞ்சலி செலுத்தினார்.

## சிறுபான்மையினர் மீதான அடக்குமுறைக்கு உதாரணம்

### பூசைக்கு விதித்த தடை குறித்து முன்னேஸ்வரம் தலைமைப் பூசகர் கருத்து

கொழும்பு, செப்.5
இலங்கையில் சிறுபான்மையினர் தொடர்ச்சியாக நெருக்கடிகளை எதிர்கொள்கின்றனர். ஆலய பூசைகளுக்கும் அரசிடம் அனுமதி பெற வேண்டும் என்று கூறப்படுவது மிகுந்த மன வேதனையைத் தருகின்றது."- இவ்வாறு தெரிவித்துள்ளார் முன்னேஸ்வரம் பத்திரகாளி அம்மன் ஆலய தலைமைப் பூசகர்.

முன்னேஸ்வரம் ஆலயத்தில் ஆண்டுதோறும் நடைபெறும் மிருக பலி பூசை கடந்த சில ஆண்டுகளாக சிங்கள கடும்போக்காளர்களின் எதிர்ப்புக்கு உள்ளாகியிருக்கிறது. அவர்களால் அது தொடர்பாக நீதிமன்றில் தொடரப்பட்ட வழக்கில், மிருகபலி பூசையை நடத்த வேண்டுமாயின் முன் அனுமதி பெற வேண்டும் என்று நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவிக்கும்போதே தலைமை பூசாரி காளிமுத்து சிவபாத சுந்தரம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,



"முன்னேஸ்வர ஆலய வளாகம், பௌத்த மக்களின் புனித பூமி என்றும், அங்கு பௌத்த மதத்துக்கு விரோதமான வகையில் எவ்வித நிகழ்வுகளும் இடம்பெறக் கூடாது என்றும் பிக்குமார் கூறுகின்றனர். ஆலயத்தில் மிருகபலி பூசைகளை நடத்த வேண்டுமாயின் பிரதேச சபையிடம் முறையான அனுமதிப் பத்திரம் பெற்ற பின்னரே நடத்த முடியும் என உயர்நீதிமன்றம் கூறியுள்ளது. எமது மத வழிபாடுகளை முன்னெடுக்க மற்றவர்களின் அனுமதி பெற்றுத் தான் செய்ய வேண்டும் என்பது, இலங்கையில் சிறுபான்மையினர் எதிர்கொள்ளும் நெருக்கடிகளுக்கும், சவால்களுக்கும் ஒரு உதாரணம்"- என்று தெரிவித்துள்ளார். (ற)

## ஐ.நா. விசாரணைக் குழு முன் சாட்சியமளிக்க அஞ்சமாட்டேன்

### முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா கூறுகின்றார்

கொழும்பு, செப்.5
ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தால் போர்க் குற்றங்கள் தொடர்பில் மேற்கொள்ளப்படும் விசாரணைகளில் சாட்சியமளிக்க அஞ்சப் போவதில்லை என்று தெரிவித்துள்ளார் முன்னாள் இராணுவத் தளபதியும், ஜனநாயகக் கட்சியின் தலைவருமான சரத் பொன்சேகா.

சர்வதேச ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

"வெள்ளைக் கொடியுடன் சரணடைந்த எந்தவொரு தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினரையும் சுட்டுக் கொலை செய்யுமாறு நான் உத்தரவிடவில்லை.

சாட்சியமளிக்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டால் அஞ்சாமல் சாட்சியமளிக்க நான் தயார். ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் விசாரணைக்குழுவின் முன்னிலையில் சாட்சியமளிக்கும் தரப்பினருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அரசு எச்சரிக்கை விடுத்துள்ளது. ஆயினும் அந்த எச்சரிக்கைகளுக்கு அஞ்சப் போவதில்லை."- என்று தெரிவித்துள்ளார். (ற)

## செல்வச் சந்நிதி சுற்றாடலில் புகையூட்டல்



வடமராட்சி, செப்.5
தொண்டைமானாறு செல்வச் சந்நிதி கோயில் சுற்றாடலில் டெங்குத் தொற்றைத் தடுக்கும் நோக்கில் அடிக்கடி புகையூட்டல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று தெரிவித்துள்ளது பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு.

செல்வச் சந்நிதி ஆலயப் பெருந் திருவிழா தற்போது நடைபெற்று வரும் நிலையிலேயே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

புகையூட்டலுக்குத் தேவையான பெற்றோல், மண்ணெண்ணெய், வகைகளை செல்வச் சந்நிதி கோயில் நிர்வாகம் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கு வழங்கி வருகின்றது என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-173)

## அமெரிக்க நுழைவிசைவு நடைமுறையில் மாற்றம்

கொழும்பு, செப்.5
குடிபெயர்வு சாராத நுழைவிசைவுக்கான (விசா) புதிய இணையத்தள நடைமுறை ஒன்றை கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரகம் எதிர்வரும் 7ஆம் திகதி முதல் செயற்படுத்தவுள்ளது. விண்ணப்பதாரிகளுக்கு மிகவும் இலகுவான, வசதியான நடைமுறைகளுடன் இந்த புதிய செயல்முறை வடிவமைக்கப்பட்டுள்ளது. உலகம் முழுவதிலும் உள்ள பல்வேறு அமெரிக்க தூதரகங்களில் இந்த செயல்முறை நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இதுகுறித்து அமெரிக்கத் தூதரகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

"புதிய நடைமுறை குறித்த மேலதிக தகவல்களுக்காக எதிர்வரும் 8ஆம் திகதி திங்கள் முதல் வெள்ளி வரை காலை 8 மணியிலிருந்து இரவு 8 மணிவரை (இலங்கை நேரப்படி) 94-11-7703703 என்ற இலவச தொலைபேசி சேவையினை தொடர்பு கொள்ள முடியும்.

இந்த மாற்றங்கள், புதிய திட்டமிடலுக்கான இணைய முகவரி மற்றும் பொது நுழைவிசைவுத் தகவல்களை எமது தூதரகத்தின் www.srilanka.usembassy.gov என்ற இணையத் தளத்தில் பெற்றுக் கொள்ள முடியும். "- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

## மீனவரின் படகுகளைக் கைப்பற்றுமாறு இலங்கைக்கு ஆலோசனை கூறவில்லை

### திடீர் 'பல்டி' அடித்தார் சுப்பிரமணியன் சுவாமி

சென்னை, செப்.5
தமிழக மீனவர்களின் படகுகளைக் கைப்பற்றுமாறு இலங்கை அரசுக்கு தான் ஆலோசனை வழங்கவில்லை என்று திடீர் 'பல்டி' அடித்துள்ளார் பா.ஜ.க. தலைவர் சுப்பிரமணியன் சுவாமி.

கைது செய்யப்படும் தமிழக மீனவர்களை விடுவித்து விட்டு, அவர்களது படகுகளைப் பறி முதல் செய்யுமாறு நானே இலங்கை அரசுக்கு ஆலோசனை கூறினேன் - என்று தனியார் தொலைக்காட்சி அலைவரிசை ஒன்றுக்கு அண்மையில் தெரிவித்திருந்தார் சுப்பிரமணியன் சுவாமி.

சுவாமியின் இந்தக் கருத்தால் தமிழகத்தில் பெரும் கொந்தளிப்பு ஏற்பட்டது. அவருக்கு எதிராகப் போராட்டங்கள் நடத்தப்பட்டதுடன், இது தொடர்பில் தமிழக முதலமைச்சரும் பிரதமர் நரேந்திர மோடிக்கு கடிதம் எழுதியிருந்தார்.

இந்தநிலையிலேயே தான் அவ்வாறு கூறவில்லை என்று தெரிவித்துள்ளார் சுப்பிரமணியன் சுவாமி. இதுகுறித்து அவர் விளக்கமளிக்கும்போது,

"'ஜெயலலிதா திரைத்துறையைச் சேர்ந்தவர். அவர் எழுதி வைக்கப்பட்ட ஸ்கிரிப்டைத்தான் படிப்பார். நான் அப்படி எல்லாம் சொல்லவில்லை. நான் மீனவர்கள் நலனுக்காகத்தான் செயல்படுகிறேன். அதனால் பலருக்கு என்னைப் பிடிக்கவில்லை" என்றார்.

அப்போது குறுக்கிட்ட செய்தியாளர்கள், "நீங்கள்தான் மீன்பிடி படகுகளை விடுவிக்க வேண்டாம் என்று ராஜபக்ஷவிடம் கூறியதாக சொல்லி இருக் கிறீர்களே?" என்று கேட்டபோது, "இல்லை... இல்லை... ராஜபக்ஷதான் மீன்பிடி படகுகளை விடுவிக்க முடியாது என சொன்னார்"- என்று கூறியுள்ளார் சுப்பிர மணியன் சுவாமி. (ற)

# உதயன்

விலை ரூபா 20/-

கிளாசிக்

சுடர் : 29 வள்ளுவர் ஆண்டு: 2045 ஆவணி 20 வெள்ளி (05.09.2014) UTHAYAN - A lively National Tamil Daily கதிர் 283


### மூன்றாவது தடவையும் ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்க

# மஹிந்தவுக்கு அரசு முழு ஆதரவு

கொழும்பு, செப். 5

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மூன்றாவது தட வையாகவும் ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்க முடியாது என சர்ச்சை எழுந்துள்ள நிலையில், அவர் மூன்றாவது தடவையாகவும் போட்டியிட முடியும் என அரசு தனது நிலைப்பாட்டை நேற்று உறுதி செய்தது.

அதேநேரத்தில், "அரசியல் தீர்வுத் திட்ட விவகாரம் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இந்தியப் பிரதமர் மோடியிடம் எவ்வாறான கோரிக்கைகளை முன்வைத்தாலும் இலங்கை குறித்த இந்திய மத்திய அரசின் வெளிநாட்டுக் கொள்கைகள் ஒருபோதும் மாற்றமடையா" என்றும் இலங்கை அரசு நம்பிக்கை வெளியிட்டது.

அமைச்சரவையின் முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடக விலாளர் மாநாடு நேற்று அரச தகவல் திணைக் களத்தில் நடைபெற்றது.

இதன்போதே அமைச்சரவையின் பேச்சாளரும் அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல மேற்கண்டவாறு அறிவித்தார்.

அமைச்சரவையின் முடிவுகளை (22ஆம் பக்கம் பார்க்க)

# முஸ்லிம்களையும் அரவணைத்தே

# தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வு

## கூட்டமைப்பின் நிலைப்பாடு அதுவே என்கிறார் மாவை



கொழும்பு, செப்ரெம்பர்.5

**"இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வுப் பயணத்தில் முஸ்லிம் சமூகத்தையும் அரவணைத்துக்கொண்டு இலக்கை அடைவதே தமிழ் மக்களின் பிரதிநிதிகளான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் நிலைப்பாடாகும். இந்த நிலைப்பாட்டிலிருந்து நாம் ஒருபோதும் பின்வாங்கமாட்டோம். இதனை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியுடனான சந்திப்பின்போதும் நாம் தெளிவாக எடுத்துரைத்தோம்."**

**- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா நேற்று 'உதயனி'டம் தெரிவித்தார்.** (22ஆம் பக்கம் பார்க்க)

## பூசை செய்வதற்கான தடையை நீக்கியது யாழ்.மேல் நீதிமன்றம்

### ஈ.பி.டி.பி ஜெகனின் தாயாருக்கும் கோயில் நிர்வாகத்துக்குமான வழக்கில்

யாழ்ப்பாணம், செப். 5

அராலியில் பிள்ளையார் கோயில் 6 மாத காலங்களாக பூசை எதுவுமின்றி இருந்த நிலையில் அங்கு பூசை செய்வதற்கு யாழ்.மேல்நீதிமன்று அனுமதி வழங்கியுள்ளதோடு அங்கு பாதுகாப்பு தேவைப்படின் வட்டுக்கோட்டைப் பொலிஸ் பொறுப்பதிகாரி அதனைக் கவனிக்க வேண்டும் என்றும் கூறியுள்ளது.

குறித்த கோயிலில் அமைதிக்குப் பங்கம் விளைவிக்கும் வகையில் நடந்து கொண்டதாகக் கூறிப் பொலிஸார் ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட அமைப்பாளரான குகேந்திரனின் (ஜெகன்) தாயாரையும், கோயில் நிர்வா (22ஆம் பக்கம் பார்க்க)

## தொற்றா நோய்கள் தொடர்பில் மன்னாரில் மருத்துவ சோதனை

மன்னார், செப். 5

நாடளாவிய ரீதியில் தொற்றா நோய் தொடர்பில் மருத்துவப் பரிசோதனை மேற்கொள்ளும் வேலைத்திட்டத்துக்கு அமைவாக மன்னார் மாவட்டத்தில் நேற்றுப் பரிசோதனை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மன்னார் சுகாதாரத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் மாவட்டம் தழுவிய ரீதியில் இந்தப் பரிசோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இதற்கமைவாக நேற்றுப் பண்டிவிரிச்சான் பிரதேச வைத்தியசாலையில் இந்தப் பரிசோதனை நடவடிக்கைகள் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

மன்னார் மாவட்ட தொற்றா நோய் பிரிவின் வைத்திய அதிகாரி அ.அன்ரன் சிசில் தலைமையில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் மற்றும் குடும்ப நல உத்தியோகத்தர்கள் இந்தப் பரிசோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

தொற்றா நோய் தொடர்பிலான இந்த மருத்துவப் பரிசோதனை முகாமில் பெரிய பண்டிவிரிச்சான், சின்னப் பண்டிவிரிச்சான் மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் பங்குபற்றி வருவதுடன் உத்தியோகத்தர்களால் பொதுமக்களுக்கு ஆலோசனைகளும் வழங்கப்பட்டு வருகின்றன. (த-14)

## கிழக்குப் பல்கலை மாணவருக்கு மதுபானம் கொடுத்து பகிடிவதை

### வந்தாறுமூலையில் நேற்றுமுன்தினம் சம்பவம்

களுவாஞ்சிக்குடி, செப். 5

கிழக்குப் பல்கலைக் கழகத்தின் கலைப்பீட முதலாம் ஆண்டு மாணவர்கள் மூவர் மதுபானம் கொடுத்து மோசமான பகிடிவதைக்குள்ளாக்கப்பட்ட நிலையில் உடல் நிலை பாதிக்கப்பட்டு மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகக் காத்தான்குடிப் பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு புன்னைச் சோலை காளிகோயில் வீதியைச் சேர்ந்த சிறிதரன் சபேஷ்கரன், 1ஆம் குறுக்கு ரயில்நிலைய வீதி, மாமாங்கம், மட்டக்களப்பைச் சேர்ந்த ரவீந்திரன் விஜிகரன், 2ஆம் குறுக்கு கூழாவடி, மட்டக்களப்பைச் சேர்ந்த ராஜேந்திரன் தனஞ்சயன் ஆகிய மூன்று மாணவர்களுமே பகிடிவதைக்குள்ளான நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் 10ஆம் விடுதியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் புதன்கிழமை காலை தங்களை வந்தாறுமூலையிலிருந்து கல்லடிக்கு அழைத்துச் சென்ற கலைப்பிரிவின் 2ஆம் வருட மாணவர்கள் 8 பேர், கல்லடியிலுள்ள தனியார் வீடொன்றில் வைத்து முழுநாளும் பகிடிவதை என்ற பெயரில் தங்களைச் சித்திரவதை செய்ததாகப் பாதிக்கப்பட்ட மாணவர்கள் பொலிஸ் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளனர்.

தங்களிடமிருந்தே பலாத்காரமாக மதுவுக்குப் பணம் அபகரித்து அதனைக் கொண்டு மது வாங்கிக் குடித்து கும்மாளமடித்து தமக்கும் மதுவைப் பருக்கியதாகவும், தம்மைக் கடுமையாகத் தாக்கியதாகவும் சித்திரவதைக்குள்ளான மாணவர்கள் பொலிஸ் வாக்குமூலத்தில் மேலும் கூறியுள்ளனர்.

இந்தச் சம்பவம் குறித்து காத்தான்குடிப் பொலிஸார் தீவிர விசாரணையில் ஈடுபட்டுள்ளனர். (த-32)

## சங்கத்தில் திருட்டு மூவர் கைதாகி விளக்கமறியலில்

யாழ்ப்பாணம், செப். 5

ஊர்காவற்றுறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் இருந்து சுமார் 15 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களைத் திருடிய குற்றச்சாட்டில் இரண்டு ஆண்களையும் அவற்றில் ஒரு பகுதியை விலைக்கு வாங்கிய குற்றச்சாட்டில் பெண் ஒருவரையும் கைது செய்து விளக்கமறியலில் வைத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த சனிக்கிழமை இரவு இந்தத் திருட்டு இடம்பெற்றது. (22ஆம் பக்கம் பார்க்க)

## அனுமதியின்றி குடிதண்ணீர் அடைத்தவருக்கு அபராதம்

யாழ்ப்பாணம், செப். 5

வவுனியாவில் உணவு அதிகாரியின் அனுமதிப்பத்திரம் இன்றி குடிநீரைப் போத்தலில் அடைத்து விற்பனை செய்தவருக்கு வவுனியா நீதிமன்று நேற்று 5 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது.

வவுனியா தோணிக்கல் பகுதியில் வீட்டுடன் இணைந்துள்ள நிறுவனம் ஒன்றிலேயே (20ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்.மாவட்ட புதிய நிர்வாகிகள்

கொழும்புத்துறை, செப்.5

இலங்கை தமிழரசுக் கட்சியின் யாழ்.மாவட்டக் கிளை புதிய நிர்வாகிகள் தெரிவுக் கூட்டம் கட்சியின் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமாகிய மாவை சேனாதிராசா தலைமையில் நேற்று முன்தினம் புதன்கிழமை கட்சி அலுவலகத்தில் நடைபெற்றது.

தெரிவு செய்யப்பட்ட நிர்வாகிகள் விவரம் வருமாறு:-

தலைவர்-பொ.கனகசபாபதி, உப தலைவர்கள்-சொலமன், சூ.சிறில், இ.பரமேஸ்வரமூர்த்தி, ச.தங்கராசா, செயலாளர் - சூ. செ.குலநாயகம், உப செயலாளர் - க.அருந்தவபாலன், பொருளாளர் - அ.குகபாலன் ஆகியோரும், தொகுதி ரீதியாக மூவர் என்ற அடிப்படையில் 30பேர் நிர்வாக உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

இன்று முதல் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை வரை வவுனியாவில் தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாடு நடைபெறவுள்ள நிலையில் வடக்கு - கிழக்கு மற்றும் வெளிமாவட்டங்களின் (22ஆம் பக்கம் பார்க்க)

## தமிழரசுக் கட்சித் தேசிய மாநாடு வவுனியாவில் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப். 5

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் 15 ஆவது தேசிய மாநாடு வவுனியாவில் இன்று மாலை 4 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

இன்றிலிருந்து மூன்று தினங்களுக்குத் தொடர்ச்சியாக தேசிய மாநாடு நடைபெறவுள்ளது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் 15ஆவது தேசிய மாநாட்டின் முதல் நாளான இன்று மாலை 4 மணிக்கு கட்சியின் மத்திய குழு உறுப்பினர்களின் கூட்டம் இடம்பெறவுள்ளது. வவுனியா நகர சபையின் கலாசார மண்டபத்தில் இது இடம்பெறவுள்ளது.

நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்குத் தமிழரசுக் கட்சியின் புதிய நிர்வாகத் தெரிவு வவுனியா நகர சபையின் கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. அன்று மாலை 2 மணிக்குக் கட்சியின் இளைஞரணி மாநாடு நடைபெறவுள்ளது.

நாளை மறுநாள் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்குக் கட்சியின் பேராளர் மாநாடு நடைபெறவுள்ளது. அன்று மாலை 2 மணிக்குக் கட்சியின் தேசிய மாநாடு இடம்பெற வுள்ளது.

(த-5)

# ஊனமுற்றோருக்கான அரச கலை விழாவை முன்னிட்டு போட்டிகள்

யாழ்ப்பாணம், செப்.5
ஊனமுற்றவர்களுக்கான அரச கலை விழா 2014 ஆம் ஆண்டில் இடம்பெற இருப்பதை அடுத்து இரு சுற்றுப் போட்டிகளாக மாவட்ட தேசிய மட்டப் போட்டிகளாக நடத்தப் படவுள்ளதாக கலாசார அலுவல்கள் பணிப்பாளர் விஜித் கணுகல அறிவித்துள்ளார்.

மாவட்ட போட்டிகள் எதிர்வரும் ஒக்ரோபர் 10 ஆம் திகதிக்கு முன் இறுதி செய்யப்பட்டு ஒக்ரோபர் 15 ஆம் திகதிக்கு முன்பாக அதன் பெறுபேறுகளை கலாசார திணைக் களத்திடம் ஒப்படைக்குமாறு மாவட்ட செயலர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

போட்டித் துறைகளின் எண்ணிக்கை 16 ஆகும். போட்டிக் கான விண்ணப்பப் படிவங்களையும் போட்டி தொடர்பான விவரங்கள் நிபந்தனைகளை பிரதேச செயலக கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்களிடம் பெற்றுக்கொள்ள முடியும். போட்டிகள் 18 வயதுக்குக் கீழ்ப்பட்டோர், 18 வயதுக்கு மேற்பட்டோர் என இருவகையாக இடம்பெறும். போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டும். விண்ணப்ப தாரிகள் தமது விண்ணப்பங்களைக் குறிப்பிட்ட திகதிக்கு முன்னதாக பிரதேச செயலகங்களில் கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்களிடம் ஒப்படைக்கலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-7)

கண்ணீர் அஞ்சலி
எமது பாடசாலை அதிபர் திருமதி பாலராணி ஸ்ரீதரன்
அவர்களின் அன்புச் சகோதரி
திருமதி தங்கராணி ஆறுமுகம்
கடந்த 03.09.2014 சிவபதடைந்தார். அவர்களின் மறைவால் துயரடைந்திருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
பாடசாலை சமூகம்,
யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி, வதிரி, கரவெட்டி.
(49762) (12.3.6)


முதலாம் ஆண்டு நினைவஞ்சலி
தேவராசா புஸ்பதேவி
(குஞ்சக்கா)
மலர்வு 17.10.1951
உதிர்வு 15.09.2013
ஓராண்டு சென்றாலும் எம் இதயங்களில் என்றும் நிலைத்திருக்கும் அன்புத் தெய்வம்
குடும்பத்தினர், உறவினர்கள்.
செட்டித்தெரு, பருத்தித்துறை.



கண்ணீர் அஞ்சலி
எமது கிளிநொச்சி மாவட்ட ஆயுள்வேத வைத்திய சாலையில் கடமையாற்றும் வைத்தியர்களான
Dr. திருமதி கலைச்செல்வி துசியந்தனின் தாயாரும்,
Dr. துசியந்தனின் மாமியும் ஆகிய
திருமதி ஆறுமுகம் தங்கராணி
கடந்த 03.09.2014 சிவபதமடைந்தார். அவர்களின் மறைவால் துயரடைந்திருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
பொறுப்பதிகாரி, வைத்தியர்கள், அலுவலர்கள், பணியாளர்கள்,
மாவட்ட ஆயுள்வேத வைத்தியசாலை, கிளிநொச்சி
(51732) (10.6)



ஓராண்டு நினைவஞ்சலி
மலர்வு 26.05.1934
உதிர்வு 17.08.2013



திருமதி சவுந்தரம் வேலுப்பிள்ளை
திதி: ஆவணி வளர்பிறை ஏகாதசி (05.09.2014)
முன்னைத் தவப்பயனால் எம் அன்னையென எம்மை
உந்தன் உதிரத்தில் உற்பவித்து உறுதுணையாய்
என்னுடைய செல்வங்களெனச் சீராட்டிப் பாராட்டி
உன்னியுன்னி வாழ்த்தி நிதம் கண்ணுறங்காத் தவமிருந்து
இன்னும் சிறப்படைந்து நல்வாழ்வு வாழ்கவென்று
எண்ணும் எம் அம்மா எங்குற்றாய் ஆண்டு இன்று ஒன்று போயுள்ளதே
அம்மா உங்கள் ஆத்ம சாந்திக்காய் நிதம்
கண்ணிறைந்த தெய்வத்தாள் பணிந்தேத்திப் போற்றுகின்றோம்.
இல. 19, செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (51716, 51721)(45.6.3)
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளை.

## உணவகங்கள் சிலவற்றில் சுகாதாரம் பேணவில்லை

### குருநகர் மக்கள் விசனம்

குருநகர், செப்.5
குருநகர் இயங்கி வரும் தேநீர் மற்றும் உணவுப் பொருள்கள் விற்பனை செய்யும் நிலையங்கள் சில உணவுப் பொருள்களைப் பொதுமக்களுக்கு விற்பனை செய்யும்போது உரிய சுகாதார முறைகளைக் கடைப்பிடிப்பதில்லை என்று உணவுப் பொருள்களை கொள்வனவு செய்வோர் விசனம் தெரிவித்தனர்.

உணவுச் சாலைகளில் விற்பனை செய்யப்படும் அப்பம், இடியப்பம், பற்றீஸ், றோல் மற்றும் மிதிவெடி என்பவைகளை உரிய லஞ்சிற்றில் சுற்றாமல் பத்திரிகைத் தாள்களில் மட்டும் சுற்றி வழங்கப்பட்டு வருவதைக் காணக் கூடிய தாகவுள்ளது. இதனால் அந்தப் பத்திரிகைத்தாள்களில் உள்ள காபன்களில் இந்த உணவுப் பொருள்களை வாங்குவோருக்கு நோய் உருவாக்கக்கூடிய சந்தர்ப்பம் உருவாகலாம். இது குறித்த அறிவூட்டலை அந்தக்கடை உரிமையாளர்களுக்கு சுகாதாரப் பகுதியினர் மேற்கொள்ள வேண்டும் என்று அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டது. மேலும் சில தேநீர்க் கடைகளில் லஞ்சீற் கைவசம் இருந்தும் இதைக் கடைக்காரர்கள் பயன்படுத்துவதில்லை என்றும் பொது மக்கள் தெரிவித்தனர். (வ-51)

## பயனாளிகளுக்கு உலர் உணவுப் பொருள்கள்

ஒட்டுசுட்டான், செப்.5
இடர்களால் பாதிக்கப்பட்டோருக்கும், ஆதரவற்ற பெண்களைத் தலைவர்களாகக் கொண்ட குடும்பங்களுக்கும் மாதாந்தம் வழங்கப்படும் உலர் உணவுப் பொருள்கள் ஒட்டுசுட்டான் புஸ்பராணி தொண்டு நிறுவனத்தில் நேற்று முன்தினம் 3 மணிக்கு வழங்கப்பட்டன. அவற்றை நிறுவன தலைவி சிறிதரன் பவிதா 44 பயனாளிகளுக்கு வழங்கினார். (வ-500)

## நல்லூர் சங்கிலியன் மன்றத்தால் மூக்குக் கண்ணாடிகள்

யாழ்ப்பாணம், செப்.5
நல்லூர் சங்கிலியன் மன்றம் அதன் இந்த வருடத்துக்கான சமூக நல உதவித் திட்டத்தின் கீழ் இலவச மூக்குக் கண்ணாடிகளை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளது.

எதிர்வரும் 8 ஆம் திகதி திங்கட் கிழமை பி.ப. 2 மணிக்கு நல்லூர் சங்கிலியன் மன்றத்தில் மூக்குக் கண்ணாடிகள் பெறுவதற்காக வருவோரின் கண் பரிசோதனையின் பின்னர் இலவச மூக்குக் கண்ணாடி வழங்கப்படும் என்றும் இதில் கலந்து கொண்டு பயனடையுமாறும் சங்கிலியன் மன்றத்தினர் அறிவித்துள்ளனர். (வ-7)

## பவளவிழா

கிளிநொச்சி முருகானந்தாக் கல்லூரியின் பவளவிழா எதிர்வரும் 8 ஆம் திகதி திங்கட் கிழமை மாலை 4.30 மணிக்கு கல்லூரியின் திறந்த வெளியரங்கில் நடைபெறவுள்ளது.

கல்லூரியின் பழைய மாணவரும், பொறியியலாளருமான ந.கிருஷ்ணரூபன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் முதன்மை விருந்தினராக வட மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார். (வ-18)

31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்
தோற்றம் 15 . 06 . 1931
மறைவு 06 . 08 . 2014



அமரர் இராசையா தங்கலட்சுமி
எமது குடும்பத்தலைவி அவர்களின் 31ஆம் நாள் ஆத்ம சாந்திக்கிரியைகள் இன்று (05.09.2014) வெள்ளிக்கிழமை மு.ப. 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது.
அவ்வேளை தாங்களும் தங்கள் குடும்ப சமேதரராய் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்தித்து தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து, கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.
160/1, கண்டிவீதி, மாம்பழம் சந்தி, அரியாலை. யாழ்ப்பாணம்.
குடும்பத்தினர்
தொ.பே. 021 2211 052
(51724)(10.6.3)

கண்ணீர் அஞ்சலி
நேற்று (04.09.2014) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்துள்ள
எமது அங்கத்தவர் சிரேஷ்ட விரிவுரையாளர் குருக்கள்
சிறீபதி ஐயா கிருஷ்ணானந்த சர்மாவின்
பிரிவால் துயருற்று இருக்கும் அவருடைய குடும்பத்தினருக்கு யாழ்ப்பாணப் பல்கலைக் கழக ஆசிரியர் சங்கம் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, அவருடைய ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
(51725) (12.3.6)
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம்.

கண்ணீர் அஞ்சலி
எமது பாடசாலையின்
சங்கீத பாட ஆசிரியர்
செல்வி க.செல்வமலர்
அவர்களின்
பாசமிகு தாயார்
திருமதி
தங்கம்மா கந்தையா



அவர்களின் மறைவிற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஆசிரியர் நலன்புரி கழகம்
யா/மிருசுவில் அ.த.க பாடசாலை
(47266)(7.3)

31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பு
தோற்றம் 08 . 06 . 1938
மறைவு 06 . 08 . 2014



லயன் வேலுப்பிள்ளை சுந்தரலிங்கம் J.P.
கடந்த 06.08.2014 புதன்கிழமை சிவப்பேறு பெற்ற எமது அன்புத் தந்தையின் வீட்டுக்கிருத்தியம் இன்று (05.09.2014) வெள்ளிக்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற்று தொடர்ந்து முற்பகல் 11.30 மணியளவில் சட்டநாதர் கோயிலடி நல்லூரில் அமைந்துள்ள தீவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
(இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொண்டு வருகை தரவும்)
59/1, மருதடி வீதி,
யாழ்ப்பாணம்.
C21 222 7286, C21 222 5638
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## அறக்கட்டளை பரிசளிப்பு நிகழ்வு

சுழிபுரம், செப்.5
பண்ணாகம்பண்டிதர் அ.ஆறுமுகம் அற்புதமலர் நினைவாக வைப்பிடப்பட்ட பணத்தின் அறக்கட்டளை பரிசளிப்பு நிகழ்வு எதிர்வரும் ஞாயிறு பி.ப.3 மணிக்கு பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலய மண்டபத்தில் அறக்கட்டளைத் தலைவர் எந்திரி த.துரைலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது. எட்டுப் பாடசாலைகளில் கடந்த ஆண்டு 5ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள், சர்வகலாசாலைக்கு செல்வதற்கு தகுதி அடைந்தவர்கள் ஆகியோருக்கு பரிசில் வழங்கப்படவுள்ளது.
கடந்த ஆண்டு சில தவிர்க்க முடியாத காரணங்களால் பரிசு வழங்கல் நடைபெறவில்லை. இந்த ஆண்டு சென்ற ஆண்டு சித்தி பெற்றவர்களுக்கும் சேர்த்து மொத்தமாக 70 இற்கு மேற்பட்ட மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படவுள்ளன.
அறக்கட்டளைக் குழுவினர் சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபருக்கு பரிசில் பெறும் மாணவர்களை அனுப்பி வைக்குமாறு வேண்டியுள்ளனர்.
அமரர் பண்டிதர் அ.ஆறுமுகம் வாழும் காலத்தில் ரூபா 5 லட்சம் பணத்தை வங்கியில் வைப்பில் வைத்து வருடம் தோறும் கிடைக்கும் வட்டிப் பணத்தை பரிசாக வழங்க ஒரு குழுவை நியமித்து செயற்பட வைத்துள்ளார். (வ-28)



கோப்பாய் நீர்வேலி பிரதேச வயல்களில் பெரும்போக நெற்செய்கைக்கான ஆயத்த பணிகளில் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர். (வ-17)

## கந்தபுராண யுத்தகாண்ட செய்யுள் உரைநூல் பதிப்பாக வெளியீடு

சுழிபுரம், செப்.5
கந்தபுராண யுத்தகாண்ட செய்யுள் உரை நூலை மீண்டும் அச்சிட்டு இரண்டாவது பதிப்பாக வெளியிட வுள்ளனர் வழக்கம்பரை பஜனைச் சபையினர்.
கந்தசஷ்டி நாள்களுக்கு முன்பாக முருகன் கோயில் ஆலயங்களில், மடாலயங்களில் நடைபெறும் புராணப் படன படிப்பின் போது படிப்பவர்களுக்கு குறித்த நூலை வழங்க பஜனைச் சபையினர் ஏற்பாடு செய்துள்ளனர். (வ-28)

## உணவகங்கள் 875 இலும் உணவுத்தர பரிசோதனை

குருநகர்,செப்.5
யாழ்.மாவட்டத்தில் 875 உணவு கையாளும் நிலையங்கள் இயங்கி வருகின்றன. அவை அனைத் திலும் 2013 காலப்பகுதியில் உணவுத் தரம் குறித்து சுகாதாரப் பரிசோதனைகள் அதிகாரிகளால் மேற்கொள்ளப் பட்டுள்ளன என்று யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் வெளியிடப்பட்ட புள்ளி விவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
யாழ். மாவட்டத்தில் 62 உணவு தயாரிப்பு நிலையங்கள், 111 வெதுப்பகங்கள், 395 ஹோட்டல் மற்றும் றெஸ்ரோறன்கள், 224 தேநீர் சாலைகள், 32 குளிர் சாதன விற்பனை நிலையங்கள், 51 குளிர்களி தயாரிப்பு நிலையங்கள் ஆகியன இயங்கி வருகின்றன. (வ-51)

## ஆண்டு நிறைவும் கலை விழாவும்

காரைநகர், செப்.5
காரைநகர் களபூமி கலையகத்தின் ஆண்டுநிறைவுவிழாவும் கலைவிழாவும் நாளை சனிக்கிழமை மாலை 4 மணிக்கு கலையக மண்டபத்தில் தலைவர் சி.கபிலன் தலைமையில் நடைபெறும்.
நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக முன்னாள் இலங்கை வங்கி முகாமையாளர் எஸ். சிவபாதம் மற்றும் சட்டத்தரணி திருமதி சாந்தகுமாரி சிவபாதம் ஆகியோர் பிரதம விருந்தினர்களாகவும் காரைநகர் மணிவாசகர் சபைத்தலைவரும் காரைநகர் இந்துக்கல்லூரியின் ஓய்வு நிலை அதிபருமான பண்டிதர் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்ள உள்ளனர். (வ-250)

## தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாண தொகுதிக் கிளை நிர்வாகம் தெரிவு

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாணத் தொகுதிக்கான கிளையின் நிர்வாகிகள் தெரிவு கடந்த ஞாயிற்றுக் கிழமை நிர்வாகச் செயலாளர் குலநாயகம் தலைமையில் நடைபெற்றது. தலைவராக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சொலமன் சூ.சிறிலும், செயலாளராக வடமாகாண சபை உறுப்பினர் இ.ஆனல்ட்டும், பொருளாளராக தி.மைக்கலும், உபதலைவராக யாழ். மாநகரசபை முன்னாள் உறுப்பினர் இ.மேரியம்மாவும் உப செயலாளராக எமில் பிரபாவும் தெரிவு செய்யப்பட்டனர். 10 பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது. (வ-135)

## உரமானியம் பெறுவோர் பதிவு செய்யலாம்

அளவெட்டி தெற்கு விவசாய சம்மேளனத்துக்கு உட்பட்ட விவசாயிகளுக்கான காலபோக நெல் விதைப்புக்கான உர மானியம் பெறுவோர் அதற்கான பதிவுகளை மேற்கொண்டு வருகின்றனர். பதிவுகளை இதுவரை மேற் கொள்ளாதவர்கள் 'நாளை சனிக்கிழமை ஜே/219 கிராம சேவையாளர் அலுவலகத்தில் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணி வரை பதிவுகளை மேற்கொள்ளு மாறு சம்மேளனத் தலைவர் தெரிவித்துள்ளார். (வ-36)

## சமய சந்நிதிகளில்...

அளவெட்டி, செப்.5
மாகியப்பிட்டிஸ்ரீதெட்சணகையிலாய சிவன் ஆலய அலங்காரத் திருவிழாவின் தேர்த்திருவிழா நேற்று நடைபெற்றது. இன்று முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத் திருவிழா நடைபெறவுள்ளது. (வ-36)

* * *

சரசாலை நுணுவில் சிதம்பர விநாயகர் ஆலய மணவாளக் கோலம் நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு அஷ்டோத்தரசத சங்காபிஷேகத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. தொடர்ந்து நண்பகல் 12 மணிக்கு விசேட பூசை நடைபெறும். அன்றைய தினம் மாலை 4.30 மணிக்கு பஞ்சமுகார்ச்சனை நடைபெற்று சுவாமி வீதியுலாவும் நடைபெறும். (வ-ரி)

சேவை நலன் பாராட்டி வாழ்த்துகின்றோம்



ஆறுமுகம் ஞானவேல் B.Sc.
(மாவட்ட அலுவலர் சமூகசேவை திணைக்களம், யாழ்ப்பாணம்)
சமூகசேவை துறையினிலே வெள்ளிவிழாவும் பிறந்த நாள்
அகவையிலே மணிவிழாவும் காணும் இளைப்பாறும்
எங்கள் அன்புக்குரிய மாவட்ட உத்தியோகத்தர்
ஆறுமுகம் ஞானவேல்
ஐயா ஒரே நாளில் இருவிழாக் காணும்
இந்நாளில் தங்கள் சேவையும் ஆயுளும் நிலைத்து
நீடூழி வாழ்கவென உளமார வாழ்த்துகின்றோம்.
Congratulations
தங்கள் சேவையால் உயர்ந்து நிற்கும்
Best Wishes
யாழ் விழிப்புலனற்றோர் சங்க நிர்வாகிகளும்,
அங்கத்தவர்களும்.
(51706)(7.6.3)

மணிவிழா நாயகனை
மனமுவந்து வாழ்த்துகிறோம்



ஆறுமுகம் ஞானவேல்
(B.Sc), மாவட்ட உத்தியோகத்தர்,
சமூகசேவைகள் திணைக்களம், யாழ்ப்பாணம்]
Congratulations
சேவைக்கால விவரம்:
சமூகசேவை அலுவலர்-


| | |
|---|---|
| உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் - நெடுங்கேணி | - 09.11.1989 - 26.12.1990 |
| கச்சேரி - முல்லைத்தீவு | - 27.12.1990 - 31.01.1993 |
| பிரதேச செயலகம் - துணுக்காய் | - 01.02.1993 - 18.05.1999 |
| பிரதேச செயலகம் - வவுனியா | - 19.05.1999 - 30.03.2001 |
| பிரதேச செயலகம் - சாவகச்சேரி | - 09.04.2001 - 18.05.2006 |
| பிரதேச செயலகம் - பருத்தித்துறை | - 19.05.2006 - 29.02.2008 |
| மாவட்ட சமூகசேவைகள் அலுவலகம், யாழ்ப்பாணம் | - 01.03.2008 - 04.09.2014 |

ஆண்டுகள் அறுபதில் ஓய்வில்லா சேவையின் பின்
ஓய்வுபெறும் ஞானியே திணைக்களம் சார் சேவைகளில்
திளைத்திருந்த வேளைகளில் சற்றேனும் சளைத்திடாது
நீர் ஆற்றிய பணிகள் தேசிய மட்டத்தில் திணைக்களத்தை
மிளிர வைத்தது. நன்றியுடன் சிலநிமிடம் எங்கள் நினைவுகளில்

ஓய்வு முடிவல்ல உடல் ஓயும்வரை உம்பணி வேண்டி நிற்கும்
உறவுகளின் உதவியுடன் குடும்பத்தின் குதூகலமும்
குட்டிக் குட்டியாய் வேண்டாம் - நிறைகுடமாய் திகழட்டும்
மட்டற்ற மகிழ்ச்சியுடன் மனையாளுடன் வாழ்க! வாழ்க!
Best Wishes

வாழ்த்துவோர்:
சமூக சேவை உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்
மாவட்ட சமூக சேவைகள் அலுவலகம் - யாழ்ப்பாணம்.
(51603)(12.3.6)

வேலணை வடக்கு இலந்தை வனப்பதி
ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய மஹோற்சவ
தேர்த்திருவிழா - 2014



வேலணை இலந்தை வனப்பதி உறை ஸ்ரீ சித்தி
விநாயகரே உன் கடைக்கண்ணருளால்
பாதகரையும் பக்குவமாய் பார்த்தருள வேண்டி நின்
பாதம் பணிகின்றோம் மஹோற்சவ நன்நாள்களிலே
வேழமுகத்தோனே முதல் வணக்கம் நிந்தனுக்கே
கார்மேகம் கனிந்திடவே கருணை காட்டிடுவீர்
ஆணழகன் முருகனுக்கு அண்ணனானவரே
மண்ணை ஆள வைத்திடுவாய் நின் அன்பர்களையே.
- தெல்லியூர்த் தேவி

மேற்படி ஆலய வருடாந்த மஹோற்சவம்
28.08.2014 வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 11 தினங்கள் நடைபெறுகின்றன. இந்த உற்சவத்தில் நாளை (06.09.2014) சனிக்கிழமை மு.ப. 10 மணிக்கு இரதோற்சவமும் 07ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளன என்பதை அடியார்களுக்கு அறியத் தருவதுடன் உற்சவம் நிறைவடைந்த பின்னர் அன்னதான நிகழ்வும் இடம்பெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
தேர்த்திருவிழா உபயகாரர்கள்
(51647)(7.6.3)

# நட்டாங்கண்டல் மருத்துவமனைக்கு மருந்துப் பொருள்கள் உதவியளிப்பு

முல்லைத்தீவு, செப்.5


முல்லைத்தீவு நட்டாங்கண்டல் பொது வைத்திய சாலையில் நடமாடும் மருத்துவ சேவையும் 5லட்சம் ரூபா பெறுமதியான மருந்து பொருள்கள் கையளிப்பு நிகழ்வும் கடந்த 2 ஆம் திகதி இடம் பெற்றன.

மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் ந.பிருந்தாகரன் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில் சிறைச்சாலை மற்றும் புனர்வாழ்வு மறுசீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீர பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு வைத்தியசாலைக் கான 5 லட்சம் ரூபா பெறு மதியான மருந்துப் பொருள்களை மல்லாவி சுகாதார வைத்திய அதிகாரி அரபாத்திடம் கையளித்து நடமாடும் வைத்திய சேவையையும் ஆரம்பித்து வைத்தார்.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் குனைஸ் பாறுக் மின் பிறப்பாக்கி அறைப் புனரமைப்புக்கு 30 ஆயிரம் ரூபா காசோலையும் வழங்கினார்.

இந்த நடமாடும் சேவையில் கண், வெளி நோயாளர் மருத்துவம், அங்கவீனமனோருக்கான மருத்துவம், இரத்த தானம் போன்ற மருத்துவ சேவைகளும் இடம் பெற்றன. இதில் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன், பிரதேச செயலாளர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர். (த-435)





அமரர் தர்மலிங்கம் தேவராஜா (இளங்கோ) ஞாபகார்த்தமாக பஸ் தரிப்பு நிலையம் திருநாவற்குளம் பாரவூர்தி தரிப்பு நிலையத்தில் திறந்து வைக்கப்பட்டது. திருமதி சோதிமதி நகுலேஸ்வரப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இந்த வைபவத்தில் வடக்கு மாகாண சபை உறுப்பினரும் புளொட் தலைவருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் இதனைத் திறந்து வைத்தார். (த-402)

# முல்லைத்தீவு ஆசிரியர் இடமாற்றம் விதிமுறை மீறல் என்கிறது சங்கம்

முல்லைத்தீவு, செப்.5

ஆசிரியர் இடமாற்றங்கள் எதுவும் வருடத்தின் இடைநடுவில் செய்யக்கூடாது என ஜனாதிபதி விடுத்த உத்தரவையும் மீறி, இலங்கை அரசஸ்தாபன விதிக் கோவையையும், கல்வி அமைச்சின் 2007/20 இலக்க சுற்றறிக்கையும் மீறி முல்லைத்தீவுக் கல்வி வலயத்தில் ஆசிரியர் இடமாற்றங்கள் மேற் கொள்ளப்பட்டுள்ளதாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் குற்றஞ்சுமத்தியுள்ளது.

இது தொடர்பில் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

முல்லைத்தீவு கல்வி வலயம் போர்க் காலத்தில் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட கல்வி வலயம் மட்டுமன்றி அங்குள்ள அதிபர்களும், ஆசிரியர்களும் கடுமையான பாதிப்புக்களுக்கு உள்ளானவர்கள்.

அங்கு குழப்பமானதொரு இடமாற்றத்தை நடைமுறைப் படுத்தி மாணவர்களின் கல்வி பாதிப்படைய இடமளிக்க வேண்டாம் என்றும் அந்த இடமாற்றங்களை உடனடியாக நிறுத்துமாறும் சங்கம் கோரிக்கை விடுத்துள்து.

அதனை ஏற்றுக் கொண்ட கல்வி அமைச்சின் செயலாளர் உடனடியாக நிறுத்துவதாக உறுதியளித்துள்ளார்.

முல்லைத்தீவுக் கல்வி வலயத்தில் இருந்து இதுவரை மூன்று கல்விப் பணிப்பாளர்கள் இடமாற்றம் மற்றும் இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர். அதற்குப் பதிலாகக் கல்வி நிர்வாக சேவையின் மூன் றாம் தரத்தில் உள்ள ஒருவர் தற்போது கடமையில் உள் ளார்.

ஆசிரியர் இடமாற்றத்துக்கு விண்ணப்பம் செலுத்தச் சென்ற ஆசிரியர்களின் விண்ணப்பங்களைச் சில அதிபர்களும், வலயக் கல்விப் பணிப்பாளர்களும் ஏற்க மறுத்து ஆசிரியர்களைத் திருப்பி அனுப்பியுள்ளதாகவும் முறைப்பாடுகள் கிடைத்துள்ளமை பற்றி கல்வி அமைச்சு செயலாளரிடம் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பங்கள் கொடுப்பதற்கு தகுதியுள்ள அனைவரது விண்ணப்பங்களையும் ஏற்றுக் கொள்வதற்கான அறிவுறுத்தல்களை தாம் வழங்குவதாகவும் அவர் கூறியுள்ளார் என்று சங்கம் மேலும் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் கல்வி அமைச்சுச் செயலாளர் சத்திய சீலனுடன் தொடர்பு கொள்ள முடியவில்லை. (த-4)

# 84 குடும்பங்களுக்கு கால்நடை உதவிகள்

கிளிநொச்சி, செப்.5

கிளிநொச்சி இராமநாதபுரம் புதுக்காட்டுப்பகுதியில் 84 குடும்பங்களுக்கு இலகு கடன் அடிப்படையில் கால் நடை வளர்ப்புக்கான உத வித் திட்டங்கள் வழங்கப்பட வுள்ளன.

இராமநாதபுரம் புதுக் காட்டுப் பகுதியில் பண்ணையாளர்களை மேம்படுத்தும் வகையில் மக்கள் வங்கியின் ஊடாக இலகுகடன் அடிப்படையில் கால்நடைகளைப் பெற்றுக் கொடுக்கும் வகையில் 84 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு அதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு கால் நடைகளை வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதென கால் நடை அபிவிருத்திச் சங்கம் தெரிவித்துள்ளது. (த-55)


## Provincial Directorate of Health Services, Northern Province.
## Procurement of Medical Equipment

The Chairman, Department Procurement Committee (DPC) on behalf of the Provincial Directorate of Health Services now invites bidders for supply of Medical Equipment.

**Bid No-NP/H/MEDI-HDU-I/14**

| S.No. | Items | Qty |
|---|---|---|
| 1. | Multipart Monitor (Basic) | 15 |
| 2. | Multipara Monitor (Main Stream Capno) | 3 |
| 3. | Infusion Pump | 20 |
| 4. | Portable Ultrasound Scanner | 1 |
| 5. | Transport Ventilator | 1 |
| 6. | ECG Recorder | 3 |
| 7. | Sucker pediatric | 3 |
| 8. | Oxygen Concentrator | 9 |
| 9. | Haematocrit centrifuge | 2 |

**Bid No-NP/H/MEDI-HDU-II/14**

| S.No. | Items | Qty |
|---|---|---|
| 1. | BP apparatus Digital (Adult) | 19 |
| 2. | BP apparatus Digital (Pediatric) | 4 |
| 3. | Ophthalmoscope | 2 |
| 4. | Auroscope | 2 |
| 5. | X-tray illuminator | 9 |
| 6. | Adjustable Beds | 17 |
| 7. | Adjustable Beds PEDIATRIC | 5 |
| 8. | Weighing Scale | 11 |
| 9. | Adult weighing - Beam type | 4 |
| 10. | Pediatric Weighing - Beam Type | 2 |

1. Interested eligible bidders may obtain further information from the Provincial Directorate of Health Services, Northern Province (021 222 0812) and inspect the bidding documents at the address given below during office hours.
2. Bid documents will be issued from 09.09.2014 till 29.09.2014 during 09.00 hours to 15.00 hours on working days, upon payment of non refundable fee of Rs. 1000/= for each document, submission of approved copy of Business Registration, request made on their letter head and "Application to get Bid Documents" available in this Department. The mode of payment will be cash.
3. Bid should be handed over to the below address or deposited in the tender box available at chief Accountant's Room on or before the closing time of bids 10.00 hours of 30th September 2014. Bids will be opened immediately after the closing of the bids in the presence of the bidders or their representatives.

**Dr (Mrs.) S.R Jude** Chairman-DPC
Provincial Directorate of Health Services
Health Village,
Pannai,
Jaffna.

(C/15695)(10.6.3)

பணி வெற்றிடம்
வெளி இடங்களுக்குச் சென்று சஞ்சிகைகள் விற்பனை செய்யக்கூடியவர் தேவை.
இடம்: யாழ், கிளிநொச்சி
தொ.பே: 075 204 5004
(51711) (4.6.3)

EPSON epson printer ink
(low price high quality)
epson INK - 100ML
L800 - 1650/-
L100/110 - 950/-
WF7011 - 950/-
STYLUS PHOTO -1390 - 1400/-
L110 SUPLIMATION INK - 1000/-
PM 245 CARTRIDGE - 1500/-
MOORTHY DIGITAL COLOUR LAB
62/20, STANLY ROAD, JAFFNA.
0212221358

திருவன்னை கன்னாதிட்டி
அருள்மிகு காளியம்பாள் தேவஸ்தானம் ஜய வருடம்(2014)
கேதாரகௌரி விரதம்
விரதாரம்பம்-03.10.2014 வெள்ளிக்கிழமை
விரதபூர்த்தி-23.10.2014 வியாழக்கிழமை
விரதகாரர்கள் தங்கள் பெயர் நட்சத்திரங்களை பூரணை தினமாகிய 08.09.2014 திங்கட்கிழமை முதல் கோயில் திறந்து இருக்கும் நேரங்களில் பதிவு செய்து கொள்ளலாம்.
தேவஸ்தானம்.
(51720) (4.6.3)

IELTS
Hurry Up-Classes start from September 6th, 2014
VENUE : Jaffna-Point Pedro Road, Puttur
(Just Opposite to Sri Somas Kanda College)
ROYSIR (Senior Lecturer, Colombo)
* Assured Band Scores with Latest Materials & Informations
* TIPS & Guidance that you will value
* Individual Attention
* Complete in 6 weeks
Contact : 077 323 3181, 075 041 6757, 075 534 1201
(51649)(7.6.3)



துருக்கியின் இஸ்தான்புல் நகரிலுள்ள ஒரு முக்கிய நெடுஞ்சாலையிலுள்ள பாதசாரிகள் செல்லும் பாலத்துடன் எண்ணெய்த் தாங்கி ஒன்று நேற்று முன்தினம் மோதியதால் அந்தப் பாலம் உடைந்தது. இதன்போது பாலத்தினூடாகப் பயணித்த பொதுமக்கள் இருவர் உயிரிழந்துள்ளனர். மேலும் பலர் காயமடைந்தனர். உடைந்த பாலத்தில் அகப்பட்ட எண்ணெய் தாங்கியை அப்புறப்படுத்தும் பணிகள் இடம்பெற்று வருகின்றன. (வ)

## சாள்ஸ்-டயனா திருமண கேக் ரூ.82,500 ஏலத்தில் விற்பனை

வொஷிங்டன், செப்.5

இளவரசர் சாள்ஸ்-டயானா திருமண கேக் துண்டின் விலை ரூ. 82 ஆயிரத்து 500 ரூபாவுக்கு ஏலம் போயுள்ளது.

கடந்த 1981 ஆம் ஆண்டு நடைபெற்ற இளவரசர் சாள்ஸ் - இளவரசி டயனாவின் திருமண கேக்கின் ஒரு துண்டு 33 வருடங்களுக்குப் பின்னர் 1,375 டொலர்களுக்கு (ரூ. 82,500) ஏலத்தில் விற்பனையாகி உள்ளது.



இந்த கேக் தற்போதும் அதன் அசல் வெள்ளை மற்றும் சில்வர் நிறப் பெட்டியில் உள்ளது. இது சமீபத்தில் அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸிலுள்ள நேட்டி சான்டர்ஸ் ஏல நிறுவனத்தால் ஒன்லைனில் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

அந்த பெட்டிக்குள் ஓர் அட்டையில், 'வேல்ஸ் இளவரசர், இளவரசியின் அன்பு வாழ்த்துக்களுடன்'என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அசல் பெட்டியில் அசல் மெழுகுத் தாளில் சுற்றப்பட்ட நிலையில் இருந்தாலும் இந்த கேக் துண்டை சாப்பிட முயல்வது நல்ல யோசனை அல்ல என ஏல நிறுவனத்தின் பேச்சாளர் சாம் ஹெலர் தெரிவித்துள்ளார். (வ)

## ஐ.நாவின் பாதுகாப்புச் சபை கூட்டம் செப்ரெம்பர் 25 இல்

வொஷிங்டன். செப்.5

ஈராக்கில் சன்னி முஸ்லிம் பிரிவைச் சேர்ந்தஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் ஈராக்கின் ஒரு பகுதியையும் சிரியாவின் ஒரு பகுதியையும், தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டு அதற்கு இஸ்லாமிய நாடு என்று அறிவித்துள்ளனர்.

இந்தநிலையில் ஐ.நாவின் பாதுகாப்புச் சபைக் கூட்டம் எதிர்வரும் 25 ஆம் திகதி கூடுகிறது. இந்த கூட்டத்துக்கு அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாதலைமைதாங்குகிறார். ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் அச்சுறுத்தலுக்கு இந்தக்கூட்டத்தில் ஒபாமா தீர்வு காண்பார் என்று அமெரிக்க அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (வ)

# ஊடகவியலாளர் கொலையை கண்டு அஞ்சப் போவதில்லை

## அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா காட்டம்

டல்லின். செப்.5

அமெரிக்க ஊடகவியலாளர் ஸ்டீவன் சொட்லொஃப் இஸ்லாமிய தேசம் என்ற'அமைப்பைச் சேர்ந்த தீவிரவாதிகளால் தலைவெட்டிக் கொல்லப்பட்டிருப்பதை அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா கண்டித்துள்ளார்.

எஸ்டோனியா சென்றுள்ள ஒபாமா, அந்தநாட்டின் தலைநகர் டல்லின் நகரில் இருந்து கருத்து வெளியிட்டபோதே இவ்வாறு கூறியுள்ளார்.

இதன்போது அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்;

கொலையாளிகளின் நடவடிக்கை கண்டு அமெரிக்கா அஞ்சப்போவதில்லை.

தன்னை இஸ்லாமிய தேசம் என்று அழைத்துக்கொள்கின்ற அமைப்பை நிர்மூலமாக்க அமெரிக்கா முடிவாக உள்ளது.



சொட்லொப் கொல்லப்பட்டதைக் காட்டும் காணொலியில் 'ரிட்டிஷ் பணயக் கைதி ஒருவரையும் கொல்லப் போவதாகப் பயங்கரவாதிகள் எச்சரித்திருக்கும் நிலையில், பிரிட்டனில் நெருக்கடி நிர்வாகத்துக்கு பொறுப்பான உயர் மட்ட கோப்ரா குழு அவசரக் கூட்டத்தை நடத்தியுள்ளது.

பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூனும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு அடுத்தகட்ட நடவடிக்கை குறித்து விவாதித்துள்ளார்.

வேறு சில அமெரிக்கப் பிரஜைகளும்கூட இஸ்லாமிய தேச ஆயுததாரிகளின் பிடியில் இருக்கலாம் என்று நம்பப்படுவதாக அமெரிக்க ராஜாங்கத்துறை சார்பாகப் பேசவல்லவர் தெரிவித்துள்ளார்.

ஜேம்ஸ் ஃபொலி என்ற வேறொரு அமெரிக்க ஊடகவியலாளரும் கடந்த மாதம் இதே பாணியில் இஸ்லாமிய தேசத்தவரால் கொல்லப்பட்டிருந்தார் என்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

ஃபொலீ கொல்லப்பட்டதைக் காட்டிய காணொலியில் 31 வயதான சொட்லொப்பும் காண்பிக்கப்பட்டிருந்தார்.

கடந்த வருடம் ஒகஸ்ட் மாதம் சிரியாவின் வட பகுதியில் வைத்து அவர் கடத்தப்பட்டிருந்தார்.

ஜேம்ஸ் ஃபொலி கொல்லப்பட்ட காணொலியில் பேசியிருந்தவரைப் போல சொட்லொப் கொலை காணொலியில் முகமூடி அணிந்திருந்த நபர் பிரிட்டன்காரர் பாணியில் ஆங்கிலம் பேசியிருந்தார்.

இரண்டு காணொலியில் வருவதுமே ஒரே ஆள்தான் என்று தாங்கள் கருதுவதாக பிரிட்டன் வெளியுறவு அமைச்சர் ஃபிலிப் ஹம்மண்ட் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் அண்மையவான் தாக்குதல்களால் வட ஈராக்கில் முன்னேற முடியாமல் போனதை அடுத்து இஸ்லாமிய தேச அமைப்பினர் கோபத்தில் இந்த அமெரிக்க ஊடகவியலாளர்களைக் கொன்றிருப்பதாகத் தெரிகிறது. அமெரிக்க விமானங்களை தாக்க வல்லமையில்லாத நிலையில், வேறு விதமான தகவல் போரை நடத்துவதற்காக அவர்கள் இவ்வாறான குரூரமான காரியத்தில் இறங்கியுள்ளதாக நிபுணர்கள் கூறுகின்றனர். (வ)

# ரஷ்யா-உக்ரேன் இடையே போர் நிறுத்த உடன்பாடு

கிழக்கு உக்ரைன் பகுதியில் போர் நிறுத்தம் மேற்கொள்ள ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் - உக்ரைன் ஜனாதிபதி பெட்ரோ போரோஷென்கோ இடையே உடன்பாடு ஏற்பட்டுள்ளது. ரஷ்ய ஜனாதிபதியுடன் மேற்கொண்ட தொலைபேசி கலந்துரையாடலின் போது இந்த இணக்கப்பாட்டை எட்டியுள்ளதாக உக்ரேன் ஜனாதிபதி பெட்ரோ பேர்சென்கோ குறிப்பிட்டுள்ளார்.

சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுப்பது தொடர்பில் இரண்டு நாட்டுத் தலைவர்களும் பரஸ்பர புரிந்துணர்வை எட்டியுள்ளனர்.


இதேவேளை - ரஷ்யா - உக்



ரேன் ஆகிய நாடுகளுக்கு இடையிலான நெருக்கடிகள் பற்றி எஸ்தோனியா, லத்வியா, லித்துவேனியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த தலைவர்களுடன் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா பேச்சு நடத்தியிருந்தார்.

இந்தப்பேச்சின் பின்னணியில் உக்ரேனின் கிழக்கு பிராந்தியத்தில் நிரந்தர போர் நிறுத்தம் குறித்த தகவல்கள் வெளியாகியுள்ளன. எஸ்தோனியா, லத்வியா, லித்துவேனியா ஆகிய நாடுகள் சோவியத் ஒன்றியத்தில் இருந்து பிரிந்து சென்ற நாடுகளாகும். இந்த நாடுகள் 2004 ஆம் ஆண்டு நேட்டோவில் இணைந்தன என்பது குறிப்பிடத்தக்கது. (வ)

## ஆந்திராவுக்கு புதிய தலைநகர் அறிவித்தார் சந்திரபாபு நாயுடு



ஆந்திர மாநிலத்துக்குப் புதிய தலைநகரம் விஜயவாடா பகுதியில் அமைக்கப்படும் என்று ஆந்திர சட்டசபையில் ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு அறிவித்துள்ளார்.

புதிய தலைநகரைத் தெரிவு செய்யும் பணி இழுபறியில் உள்ள நிலையில் கர்னூலை தலைநகராக அறிவிக்கக் கோரி ராயலசீமாவில் முழு அடைப்புப் போராட்டம் நடத்தப்பட்டது.

அதே கோரிக்கையை வலியுறுத்தி கர்னூல் மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் முழு கடை அடைப்புப் போராட்டம் நடைபெற்றது.

இந்நிலையில், ஆந்திர மாநிலத்துக்குப் புதிய தலைநகரம் விஜயவாடா பகுதியில் அமையும் என்று ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு அறிவித்துள்ளார். (வ)



ஜம்மு - காஷ்மீரில் பெய்துவரும் அடைமழையால் ஜீலம் நதி பெருக்கெடுத்துள்ளது. இதனால் அங்குள்ள மக்கள் பெரு வெள்ளத்தின் மத்தியில் சிரமத்துடன் பயணம் மேற்கொள்கின்றனர். (வ)

## ஜம்மு - காஷ்மீரில் கனமழை வெள்ளத்தில் சிக்கி 10 பேர் சாவு

ஜம்மு, செப்.5

ஜம்மு - காஷ்மீரில் கன மழை காரணமாக ஜீலம் நதியில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கில் சிக்கி 10 பேர் உயிரிழந்ததாக வெள்ள மீட்புப் பணியில் ஈடுபட்ட பாதுகாப்பு அதி காரிகள் தெரிவித்துள்ளனர். இதேவேளை சனிக்கிழமை வரை கனமழை நீடிக்கும் என்று வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.

காஷ்மீரில் கடந்த சில தினங்களாக கனமழை பெய்து வருகிறது. இதனால் பூஞ்ச், பத்காம் உள்ளிட்ட மாவட்டங்களில் திடீர் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. இதில் சிக்கி உயிரிழந்த 8 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. மேலும் இருவர் ஆங்காங்கே ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. வெள்ளம் பாதிக்கப்பட்ட பகுதிகளில் இராணுவ வீரர்கள் மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

சனிக்கிழமை வரை தொடர் மழை பெய்யும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால் பல மாவட்டங்களில் பாடசாலைகளுக்கு விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது.

குல்காம், அனந்த்நாக், புல்வாமா, பாராமுல்லா, ஷோபியன், ஸ்ரீநகர், பூஞ்ச், ஜம்மு, கத்துவா மற்றும் சம்பா மாவட்டங்களில் வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப் பட்டுள்ளது. மேலும், ஸ்ரீநகரில் ஜீலம் நதியில் அபாய கட்டத்துக்கு மேல் 4 அடி அதிகரித்து தண்ணீர் பாய்வதால் வெள்ளப் பெருக்கு ஏற்படும் அபாயம் உள்ளதால் அதன் சுற்று வட்டார கிராமங்களில் உள்ள மக்கள் வெளியேறும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை ஜம்மு காஷ்மீரில் 50 பேருடன் பயணித்துக் கொண்டிருந்த பஸ் வெள்ளத்தில் மூழ்கியுள்ளது. இதில் பலர் உயிரிழந்துள்ளதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன. (வ)

## தோசம் நீங்க வெறி நாயை திருமணம் செய்த பெண்



சென்னை, செப்.5

இந்தியாவில் இளம் பெண் ஒருவர் கெட்ட தோசங்களை போக்குவதற்காக வெறி பிடித்த நாயை திருமணம் செய்து கொண்டுள்ளது அனைவரையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

இந்தியாவின் கிழக்கு பகுதியைச் சேர்ந்த மங்கிலி (வயது 18) என்ற பெண்ணுக்கு கெட்ட தோசங்கள் இருப்பதால், திருமணம் செய்து கொண்டால் அவரின் கணவருக்கு அழிவு என்றும் குடும்பத்தில் குழப்பம் நடக்கும் எனவும் ஜாதகத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் அதை அடுத்து கிராமத்தில் உள்ள முதியவர்களின் அறிவுரைப்படி குறித்த பெண், நாய் ஒன்றை திருமணம் செய்து கொண்டால் தோசம் கழிந்து விடும் என்பதால், இவரது குடும்பத்தினர் மற்றும் கிராம மக்கள் முன்னிலையில் சேறு என்ற நாயுடன் திருமணம் செய்து கொண்டுள்ளார்.

நாயை திருமணம் செய்து கொள்ள சிறிதும் விரும்பாத மங்கிலி, தனது தோசங்கள் கழிந்து விடும் என்ற நம்பிக்கையில் திருமணம் செய்து கொண்டுள்ளார்.

தற்போது அவரின் தோசங்கள் நாய்க்குச் சென்று விடும் என்பதால் பின்னர் இவர் திருமணம் செய்து கொண்டால் நன்றாக வாழ்வார் என்று அந்தப்பகுதி மக்கள் நம்புகின்றனர். (வ)

## கோவையில் பிடிபட்ட வெள்ளைக் காகம்

கோவை, செப்.5

கோவை சரவணம்பட்டி பகுதியில் பிடிபட்ட வெள்ளைக் காகத்தை வனவளதுறையினர் கூண்டில் வைத்துப் பராமரித்து வருகின்றனர். சரவணம்பட்டி பஸ் நிறுத்தப் பகுதியில் வெள்ளைக் காகம் இருப்பதாக அந்தப்பகுதி பொது மக்கள், வனவளத்துறைக்கு தகவல் தெரிவித்தனர்.

இதையடுத்து, அங்கு சென்ற வனத்துறையினர் வெள்ளைக் காகத்தை மீட்டு, வட கோவையில் உள்ள வனவள அலுவலகத்துக்கு கொண்டு வந்தனர். ஒரு மாதமேயான



வெள்ளைக் காகத்துக்குச் சரியாக இறக்கைகள் வளராததால் அதனால் பறக்க முடியவில்லை. இதனால், வனவள அலுவலகத்தில் கூண்டில் வைத்துப் பராமரிக்க வனவளத் துறையினர் முடிவு செய்துள்ளனர். இறக்கைகள் வளர்ந்து பறக்கும் நிலைக்கு வந்தவுடன் பறக்கவிடப்படும் என்று கோவை வனவள சேகர் தெரிவித்தார். நிற மாற்றம் காரணமாக அந்தக் காகம் வெள்ளை நிறத்தில் இருப்பதாக வனவளத் துறையினர் தெரிவித்தனர். இது போன்ற அதிசய வெள்ளை நிற காகங்கள் கொல்லிமலை அல்லது பச்சமலையில் அதிகம் காணப்படுகின்றன. வழி மாறிய ஒரு சில காகங்கள் இது போன்று ஊருக்குள் வருவது இயல்பு என்றார். (வ)

## இந்தியாவில் ஆஸி.பிரதமர்

ஆஸ்திரேலியப் பிரதமர் டோனி அபோட், இரண்டு நாள் பயணமாக இந்தியாவுக்குச் சென்றுள்ளார். நேற்றுக் காலை அவருக்கு விமான நிலையத்தில் சிறப்பான வரவேற்புக் கொடுக்கப்பட்டது.

இந்த பயணத்தின் போது, வர்த்தகம் மற்றும் ராஜீய உறவுகள் குறித்து அவர் இந்திய தலைவர்களுடன் பேச்சு நடத்த உள்ளார். இந்தப் பயணத்தின்போது, அணுசக்தி குறித்த முக்கிய உடன்பாடு கையெழுத்தாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (வ)

## இந்தியாவில் அல்கொய்தா கிளை; மத்திய உளவுத்துறை எச்சரிக்கை

டில்லி, செப்.5

அல்கொய்தா பயங்கரவாத அமைப்பின் கிளை இந்தியாவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக வெளியான காணொலித் தகவலைத் தொடர்ந்து அனைத்து மாநிலங்களையும் உஷார்படுத்தி உள்ள மத்திய உளவுத்துறை அமைச்சகம், காணொலியின் உண்மைத்தன்மை குறித்து ஆராயுமாறு புலனாய்வுத் துறையை கேட்டுக்கொண்டுள்ளது.

ஜிஹாதிஸ்டுகளுக்கான இணையத்தளத்தில் இது தொடர்பாக வெளியாகி உள்ள 55 நிமிடங்கள் கொண்ட காணொலி ஒன்றில் பேசியுள்ள அல்கொய்தா தலைவர் அய்மான் அல் ஜவஹிரி, அல்கொய்தா அமைப்பின் கிளை இந்தியாவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், இந்தியாவில் இஸ்லாமிய ஆட்சியும், ஜிகாத் கொடியும் ஏற்றிவைக்கப்படும் என்றும் கூறியுள்ளார்.

இதனிடையே மேற்கூறிய காணொலித் தகவலைத் தொடர்ந்து, அனைத்து மாநிலங்களையும் மத்திய உள்துறை அமைச்சகம் உஷார்ப்படுத்தி உள்ளது, அதேசமயம் இதுகுறித்து விசாரணை நடத்துமாறும், இந்தக் காணொலியின் உண்மைத் தன்மை குறித்து ஆராயுமாறும் புலனாய்வுத் துறையை கேட்டுக் கொண்டுள்ளது.

இதுதொடர்பாக உளவுத்துறை வட்டாரங்கள் கூறுகையில், இது எதிர்பாராத ஒன்று அல்ல; அல்கொய்தா தனது தளங்களை ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பிடம் இழந்து வருவதால், இத்தகைய அறிவிப்பை வெளியிட்டுள்ளது. இருப்பினும் ஜவஹரியின் அறிவிப்பில் அஸ்ஸாம், குஜராத், அகமதாபாத், பர்மா ஆகிய மத பதற்றங்கள் நிறைந்த இடங்கள் குறிப்பிடப்பட்டுள்ளதற்கு ஐ.எஸ். ஐ.எஸ் அமைப்புடன் ஏற்பட்டுள்ள போட்டி, அந்த அமைப்பின்பக்கம்சாயும் இளைஞர்களை தங்கள் பக்கம் ஈர்ப்பதற்காகத் தான் என்று தெரிவித்துள்ளன. (வ)



அரச சாஹித்திய விருது வழங்கும் விழா ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நேற்றுமுன்தினம் பிற்பகல் கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. அமெரிக்காவின் ஹவாய் பல்கலைக்கழக பேராசிரியர் விமல் திஸாநாயக்க, தெளிவத்தை ஜோசப், கார்மிலர் ஆகியோர் வாழ்நாளில் ஒரேயொரு முறை வழங்கப்படும் 'சாஹித்திய ரத்ன' விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். அத்துடன் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் 2013ஆம் ஆண்டு இலக்கியத்துறையில் தமது ஆளுமைகளை வெளிப்படுத்திய மேலும் பல சிரேஷ்ட எழுத்தாளர்கள் இந்த விழாவில் சாஹித்திய விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

## ஆசிரியர் பற்றாக்குறை நிவர்த்தி செய்யப்படும்

கொழும்பு, செப்.5
பாடசாலைகளில் நிலவிவரும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று தெரிவித்துள்ளார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

பசறை - லுனுகல- இராமகிருஷ்ணா மகா வித்தியாலயத்தின் விஞ்ஞான ஆய்வு கூடத் திறப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"பாடசாலைகளுக்குத் தேவையான ஆசிரியர்களை வழங்க வேண்டியது அரசின் பொறுப்பு. உயர்தர வகுப்புகளுக்கு நிலவும் ஆசிரியர் இடைவெளி இந்த ஆண்டு இறுதிக்குள் நிவர்த்தி செய்யப்படும்"- என்றும் அவர் அங்கு மேலும் குறிப்பிட்டுள்ளார். (ற)

## போலி கடனட்டையில் மதுபானம்: 17ஆம் திகதிவரை விளக்கமறியல்

கொழும்பு, செப்.5
போலி கடனட்டைகளை பயன்படுத்தி 69 லட்சம் ரூபா பெறுமதியுடைய ஐந்து வெளிநாட்டு மதுபான போத்தல்களை கொள்வனவு செய்த சம்பவத்தில் சந்தேகத்தின் பேரில் கைதான மலேஷிய பிரசைகள் நால்வரும் எதிர்வரும் 17ஆம் திகதி வரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் நால்வரும் கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று முற்படுத்தப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை அதில் ஒரு சந்தேகநபர் எச்.ஐ.வி. தொற்றுக்கு இலக்காகியுள்ளார் என்று தெரியவந்துள்ளது.

அதனால் குறித்த சந்தேகநபருக்கு சிறைச்சாலை மருத்துவ மனையின் பிரத்தியேக பிரிவில் சிகிச்சை வழங்குமாறு கோட்டை நீதிவான் நீதிமன்ற நீதிபதி திலின கமகே உத்தரவு பிறப்பித்துள்ளார். (ற)

# ஊவா வன்முறைகளுக்கு பொலிஸாரும் உடந்தை

## குற்றஞ்சாட்டுகின்றது 'பவ்ரல்' அமைப்பு



கொழும்பு, செப்.5
ஊவா மாகாணத்தில் தேர்தல் விதி முறைகள் மற்றும் தேர்தல் வன்முறைச் சம்பவங்களைக் கட்டுப்படுத்துவதற்குப் பொலிஸார் உரிய நடவடிக்கை எடுப்பதற்குத் தவறியுள்ளனர் என்று குற்றஞ்சாட்டியுள்ளது பவ்ரல் அமைப்பு.

பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஒரு சில வேட்பாளர்களுக்குச் சார்பாகச் செயற்பட்டு வருகின்றனர் என்றும் அந்த அமைப்பு மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள அந்த அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி,

"தேர்தல் வன்முறைகளைக் கட்டுப்படுத்த பொலிஸ் மா அதிபரும், தேர்தல் ஆணையாளரும் நடவடிக்கை எடுத்துள்ள போதும், அவை பொலிஸ் உத்தியோகத்தர்களால் நடைமுறைப்படுத்தப்படுவதில்லை"- என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியுள்ளதாவது,

"குறிப்பாக மொனராகலை மாவட்டத்தில் கடுமையான வன்முறைகள் மற்றும் தேர்தல் விதி மீறல்கள் இடம்பெற்று வருகின்றன.

அரச அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் அதிகளவில் தேர்தல் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர். அரசியல் தலைமைகளின் உத்தரவை மீறிச் செயற்பட்டால் பாதக நிலைமைகள் ஏற்படக் கூடுமென்ற அச்சம் காரணமாக, அரச அதிகாரிகள் பக்கச்சார்பாக செயற்பட்டு வருகின்றனர்.

பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் போன்ற புத்திஜீவிகள் இந்த அரசியல் அழுத்தங்கள் குறித்து எதிர்ப்பை வெளியிடாமை அதிருப்தி அளிக்கின்றது. அரசின் அபிவிருத்தித் திட்டங்களைக் கொண்டு ஆளும் கட்சி வேட்பாளர்கள் பரப்புரைகளில் ஈடுபட்டு வருவது ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல. வேட்பாளர்களின் நன்மதிப்பை உயர்த்தும் வகையில் அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படுவதை ஏற்றுக் கொள்ள முடியாது"- என்று தெரிவித்துள்ளார். (ற)

## வாஸ் குணவர்த்தன வீட்டுக்கு மர்மப் பொதி

கொழும்பு, செப்.5
முன்னாள் பிரதி பொலிஸ் மா அதிபரும், பம்பலப்பிட்டிய கோடீஸ்வரர் சியாம் மொஹமட் கொலை வழக்கின் பிரதான சந்தேகநபருமான வாஸ் குணவர்த்தனவின் வீட்டுக்கு குண்டு செயலிழக்கும் பிரிவினர் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

அவருடைய வீட்டு வாசலில் மர்ம பொதியொன்று கிடந்ததையடுத்தே அந்தப் பிரிவினர் அங்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவித்தனர். (ற)

## ஐ.தே.கவினர் இடையே மோதல்: ஒருவர் காயம்

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்கள் இரு தரப்பினருக்கிடையே மொனராகலை நகரில் நேற்றுமுன்தினம் முற்பகல் இடம்பெற்ற மோதலில் ஊவா மாகாண சபைத் தேர்தல் வேட்பாளர் ஒருவரின் மகன் காயமடைந்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் திஸ்ஸ குட்டியாரச்சி உட்பட அவரின் ஆதரவாளர்கள் சிலர் அதே கட்சியை சேர்ந்த வேட்பாளரான சம்பத் ஜயசூரியவின் மகன் மீது தாக்குதல் நடத்தியுள்ளதாக முறைப்பாடு கிடைத்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண குறிப்பிடுகின்றது. (ற)

# இறைமைக்கு சவால் விடுவதாலேயே ஐ.நா. விசாரணையை எதிர்க்கின்றோம்

## இப்படிக் கூறுகின்றார் பிரசாத் காரியவசம்



கொழும்பு, செப்.5
ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் விசாரணைகள் இலங்கையின் இறைமைக்கு சவால் விடுவதாலேயே அதனை எதிர்க்கிறோம் என்று தெரிவித்துள்ளார் அமெரிக்காவுக்கான இலங்கைத்தூதுவர்பிரசாத்காரியவசம்.

'நியூயோர்க் டைம்ஸ்' பத்திரிகையில் இலங்கை குறித்து எழுதப்பட்டிருந்த ஆசிரிய தலையங்கத்துக்கு அனுப்பியுள்ள பதில் கடிதத்திலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

"இலங்கையில் மனித உரிமை மற்றும் மனிதாபிமான நிலைவரத்தை உலகின் ஏனைய நாடுகளில் காணப்படும் நிலைவரத்துடன் ஒப்பிடுவது நேர்மையற்றதாகும். ஐக்கிய நாடுகள் விசாரணைக் குழு உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுகிறது. அதற்கு வழங்கப்பட்ட ஆணையை மீறி அது செயற்படுவதாலேயே இதனை நாங்கள் எதிர்க்கிறோம்.

இது எங்கள் நாட்டின் இறைமைக்கு சவால் விடுகிறது. நல்லிணக்கத்துக்கான சூழலை பாதித்து போர் முடிந்த பின்னர் ஏற்படுத்தப்பட்டுள்ள சமூக பொருளாதார வளர்ச்சியை குறைத்து மதிப்பிடுகிறது.

விடுதலைப்புலிகள் காட்டிய பிடிவாதப் போக்கு காரணமாகவே மூன்று தசாப்த காலப் போரில் பல சமாதான முயற்சிகள் தோல்வி அடைந்தன. சர்வதேச நிபுணர்கள் உதவியுடன் தற்போது வலுப்படுத்தப்பட்டுள்ள உள்ளூர் பொறிமுறைகள் உள்நாட்டின் சமூக கலாசார இன உணர்வுகளை மதிப்பவை. அதற்கு மாறாக ஐ.நாவின் விசாரணைகள் வெளிநாட்டு நலன்களை அடிப்படையாகக் கொண்டவை;"- என்று தெரிவித்துள்ளார். (ற)

# ரூபா 50 மில்லியன் கேட்டு விமலுக்கு எதிராக வழக்கு

## கடுவல மேயர் தாக்கல் செய்தார்

கொழும்பு, செப்.5
ரூபா 50 மில்லியன் நட்ட ஈடு கோரி வீடமைப்பு அமைச்சர் விமல் வீரவன்ஸவுக்கு எதிராக கடுவல மேயர் ஜீ. எச். புத்ததாச வழக்குத் தாக்கல் செய்துள்ளார். விமல் வீரவன்ஸ தலைமை வகிக்கும் ஜே.என்.பி கட்சியின் உத்தியோகபூர்வ பத்திரிகையான பஞ்சாயுதய என்னும் பத்திரிகையில் தமக்கு அவமரியாதை ஏற்படக் கூடிய வகையில் தகவல்கள் வெளியிடப்பட்டிருந்தன என்று அவர் குற்றஞ்சுமத்தியுள்ளார்.

நற்பெயருக்கு அவதூறு ஏற்படுத்திய குற்றச்சாட்டின் அடிப்படையில் கட்சியின் தலைவர் விமல் வீரவன்ஸ மற்றும் பொதுச் செயலாளர் பிரியன்ஜித் வித்தாரன ஆகியோரிடம் நட்ட ஈடு கோரி வழக்குத் தொடரப்பட்டுள்ளது. இந்த ஆண்டின் மே மாதத்தில் கொழும்பு சுகததாச உள்ளரங்கில் நடைபெற்ற கட்சியின் பொதுச் சபைக் கூட்டத்தில் இந்தப் பத்திரிகை இலவசமாக கட்சியின் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. அந்தப் பத்திரிகையில் வெளியான கட்டுரையின் மூலம் தமது நற்பெயருக்கு களங்கம் ஏற்பட்டுள்ளது என்று மேயர் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் வீரவன்ஸவுக்கும் கடுவல மேயருக்கும் இடையே மிக நீண்ட காலமாக முரண்பாடுகள் நிலவி வருகின்றது. (ற)

# பொலிஸ் திணைக்களம் சுதந்திரக் கட்சியின் கிளை சங்கமாக மாறிவிட்டது

## ஐ.தே கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பாலித ரங்கே பண்டார விசனம்



கொழும்பு, செப்.5
இலங்கை பொலிஸ் இந்தளவுக்கு கீழ் மட்டத்துக்கு செயற்படுவார்கள் என்ற யுகம் நாட்டில் என்றும் இருக்கவில்லை. பொலிஸ் திணைக்களம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கிளை சங்கமாக மாறியுள்ளது - இவ்வாறு தெரிவித்துள்ளார் ஐ.தே கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.

பொலிஸாரின் தற்போதைய செயற்பாடுகள் தொடர்பாக ஊடகங்களுக்கு வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் மேலும் கூறியுள்ளதாவது:-

"சட்டம் மற்றும் ஒழுங்கை பாதுகாக்கும் பொறுப்பு இலங்கை பொலிஸ் திணைக்களத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆனால் தற்போது பொலிஸ் திணைக்களத்துக்கு ஏற்பட்டுள்ள இடர் நிலைமையானது மிகவும் கவலைக்குரியது. 148 ஆண்டு என்ற நீண்ட வரலாற்றை கொண்ட பொலிஸ் திணைக்களம் நாட்டின் வரலாற்றில் என்றுமில்லாத வகையில் கீழ் நிலைக்கு சென்றுள்ளது.

பொலிஸ் திணைக்களத்துக்கு சுதந்திரமும் கௌரவமும் வழங்கிய 17ஆவது அரசியல் அமைப்புத் திருத்தச் சட்டம் ஒரே இரவில் இரத்துச் செய்யப்பட்டதன் மூலம் பொலிஸாரின் முதுகெலும்பு முறிக்கப்பட்டுள்ளது. பொலிஸ் திணைக்களம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கிளை அமைப்பாக மாறியுள்ளது."- என்று தெரிவித்துள்ளார். (ற)

# இலங்கைத் தமிழரசுக் கட்சி







# 15 ஆவது தேசிய மாநாடு

**வீரம் விளைந்த வன்னி மண்ணில் வவுனியா மாநகரில் நடைபெறவுள்ளது**

இலங்கைத் தமிழரசுக் கட்சி (64 ஆவது ஆண்டு நிறைவில்)
15 ஆவது தேசிய மாநாடு
05,06, 07 – 09 – 2014 – வவுனியா
பொதுக் கூட்ட அழைப்பு

**"ஒழுக்கம் விழுப்பம் தரலால்- ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்"**
**வள்ளுவன்.**

மனிதனின், மக்கள் சமுதாயத்தின் ஒழுக்கமே உலகில் உயர்ந்த நாகரிகமாகும். அதன் அர்த்தம் தன் தாய்மொழி, பண்பாடு, நிலம் விடுதலை பெற்றதாய், ஆளும் உரிமை பெற்றதாய் விளங்குவதேயாகும். அந்த மக்களின், இனத்தின், நாட்டின் வாழ்வும், வளமும் ஆகும். அதுவே உயர்ந்து மாண்புறும் நாகரிகமாகும். அதனைப் பேணிப் பாதுகாப்பதற்காகவே உலகில் ஒவ்வொரு உயிரும் போராடிக்கொண்டிருக்கின்றது. அல்லது அந்த இனம் அழிந்து விடும். வரலாறு அற்றுப் போகும்.

எறும்பும் கூடத் தன்னைப் பாதுகாத்துக் கொள்ளவே கடித்துத் தப்பித்துக் கொள்கிறது. சிற்றெறும்பால் யானை சாகும் என்பார்கள் அது வன்முறையல்ல.

எனவே அந்த ஒழுக்கத்தை, நாகரிகத்தைப் பேணிப் பாதுகாப்பதற்கே உயிர் கொடுத்துத் தம்மை அர்ப்பணிக்கிறார்கள், தியாகம் செய்கிறார்கள். அதற்காகவே உயர் நாகரிகத்தை அடைவதற்காகவே இலட்சோப இலட்சம் மக்கள் மனிதம், உயிர்கள் எம் தமிழ் மண்ணில் விதைக்கப்பட்டிருக்கிறது. அந்த உயர்ந்த தியாகம் எம் இனத்தின் விடுதலைக்கு வித்தாகிறது. அதன் விளைவு எம் மண்ணின் மக்களின் விடுதலையே தான்.

"துன்பத்தை விழைவிப்பவர்களல்ல, அந்தத் துன்பத்தை தாங்கும் சக்தி கொண்டவர்களே ஈற்றில் வெற்றிபெறுவார்கள்" என்று பிரிட்டிஸ் சிறையில் சாவின் விழிம்பில் இரத்தத்தால் எழுதி ஸ்வத்தான் ஐரிஸ் தேச பக்தன் மைக்ஸ் வைனி.

எம் தமிழர் தேசம், தமிழினம் ஈற்றில் வெற்றி பெறும். அந்த ஒழுக்கமே, உயர்ந்த நாகரிகமே உயிரினும் மேலான தாகும் . அந்த நாகரிகமே வரலாறாகும்.

**தேசிய மாநாட்டில்**
**தமிழ்த் தேசிய உறவுரிமையுடன்**
**கலந்து சிறப்பிக்குமாறு அழைக்கின்றோம்.**

## நிகழ்ச்சிகள்

1. வரவேற்பு நடனம்
2. வரவேற்புரை
3. தலைமையுரை
4. மாநாட்டுத் தீர்மானங்களும் பிரகடனங்களும்
5. தலைவர்கள் உரை

1. திரு. இரா சம்பந்தன் (பா.உ)
2. திரு.மாவை சோ.சேனாதிராசா (பா.உ)
3. திரு. பொன் செல்வராசா (பா.உ)
4. திரு.செல்வம் அடைக்கலநாதன் (பா.உ)
5. திரு. க. சுரேஸ் பிரேமச்சந்திரன் (பா.உ)
6. திரு. த. சித்தார்த்தன் வ.மா.உறுப்பினர்
7. திரு. ஹசன் அலி (பா.உ)
8. திரு. மனோ கணேசன் மே.மா உறுப்பினர்
9. கலாநிதி விக்ரமபாகு கருணாரத்தின கொழு.மா.நகர உறுப்பினர்
10. சிறப்புரை : உயர்திரு நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் (முதலமைச்சர் வடக்கு மாகாண சபை)

மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் திரு. சி. சிறீதரன், திரு. ஈ. சரவணபவன், திரு. எம். எ. சுமந்திரன், திரு. ப. அரியனேந்திரன், திரு. சீ .யோகேஸ்வரன் மற்றும் திருமதி அனந்தி சசீதரன் உள்ளிட்ட மாகாணசபை உறுப்பினர்களும் மாநாட்டு தீர்மானங்கள் மீது உரையாற்றுவர்.

அத்துடன் நல்லாட்சிக்கான மக்கள் இயக்க பிரதிநிதிகள், மலையகப் பிரதிநிதிகள், தன்னார்வ நிறுவனங்களின் இயக்குநர்கள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் பிரதிநிதிகளின் வாழ்த்துரைகளும் இடம் பெறும்.

பி.ப 7.30 இற்கு கலைநிகழ்ச்சிகள், பண்டார வன்னியன் நாடகம் இடம்பெறும்.

**இடம்: கலாசார மண்டபம் வவுனியா (தந்தை செல்வா அரங்கம்)**
**காலம் :07.09.2014 ஞாயிற்றுக்கிழமை**
**நேரம் : மாலை 4.00 மணி**

**"எங்கள் தேசமக்கள் சுதந்திரம் - அந்த விடுதலை விடியலுக்காய் ஒன்றுபடுவோம்."**

மாவை. சோ. சேனாதிராசா
பொதுச் செயலாளர்

மருத்துவ கலாநிதி. ப. சத்தியலிங்கம்
வரவேற்புக் குழுத் தலைவர்.

ஏற்பாட்டுக் குழு
இலங்கை தமிழரசுக் கட்சி
வன்னி மாவட்டம்.

# சவாலுக்கு விருது

'ரைஸ் வாளி' சவாலை உருவாக்கிய இந்தியாவின் ஹைதராபாத்தைச் சேர்ந்த மஞ்சுலதா கலாநிதிக்கு ஐ.நா. விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில், 'ஐஸ் வாளி' சவால் பிரபலமடைய தொடங்கியதை அடுத்து, இந்தியாவில் 'ரைஸ் வாளி' சவால், என்ற பெயரில் ஏழைகளுக்கு ஒரு படி அரிசி தானம் வழங்கும் பரப்புரை ஆரம்பமாகியது.

அதாவது உணவு தேவைப்படும் யாராவது ஒருவருக்கு ஒரு படி அரிசி வழங்கி, அதை படம் பிடித்து 'பேஸ்புக்கில்' பதிவிட வேண்டும். அப்போது பிற நண்பர்கள் இதை செய்ய முன் வருகிறார்களா என்று சவால் விட்டு, அவர்களின் பெயர்களையும் அந்தப் பதிவில் சேர்க்கலாம். அதன் மூலம் மேலும் பலர் இதை செய்ய முன்வருவார்கள் என்பதே இந்தச் சவாலின் நோக்கம்.








'ரைஸ் வாளி' சவாலை ஆரம்பித்து வைத்த பெருமை ஹைதராபாத்தைச் சேர்ந்த மஞ்சுலதா கலாநிதி (38) என்பவரை சேரும்.

இவரது சமூக தொண்டை பாராட்டும் வகையில் அவருக்கு கர்மவீர் சக்ரா விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் சர்வதேச கூட்டமைப்பும், ஐ.நாவும் விருதை வழங்குகின்றன.

இதேவேளை- 2015 மார்ச் 23 ஆம் திகதி புதுடில்லியில் நடைபெறும் விழாவில், மஞ்சுலதா கலாநிதிக்கு இந்த விருது வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விருது சிறிய காரியங்கள் மூலம் உலகில் பெரிய மாற்றம் ஏற்படுத்தும் நபர்களுக்கு வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# முருகக் கடவுளை முழுமுதலாகக் காட்டும் முயற்சி

கந்தபுராணத்திலும், அருணகிரிநாதரின் திருப்பாடல்களிலும் முருகனை முழுமுதற் கடவுளாகக் காட்டும் முயற்சிகளைக் காணமுடிகிறது. கச்சியப்ப சிவாச்சாரியார் காலம் கி.பி.13ஆம், 15 ஆம் நூற்றாண்டின் இடைப்பட்டது. அருணகிரிநாதர் கி.பி.15ஆம் நூற்றாண்டின் முற்கூறிலே வாழ்ந்திருக்கிறார். இவர்களுடைய காலகட்டத்திலேதான் "கௌமாரம்" என்ற மதத்தைக் குறிப்பிடுதல் பொருத்தமாகலாம்.

பிரணவப் பொருள் தெரியாத பிரமனைக் குட்டிச் சிறையிலடைத்தான் முருகக் கடவுள். சிவனின் கோபப் பேச்சினால் பிரமனை விடுதலை செய்தார். விடுதலையடைந்த பிரமன் இறைவனை வணங்கி, "முருகக் கடவுள் கொடுத்த தண்டனை எனக்கு நல்லறிவைத் தந்து அகங்காரத்தை நீக்கி என்னைப் புனிதன் ஆக்கியது" என்று கூறித் துதித்துப் போனார். பின் முருகக் கடவுள் சிவனுக்குப் பிரணவப் பொருளைக் காதில் உரைத்தார்.

ஞானக்கதிர்




# 100 GB கொண்ட Google Drive அறிமுகம்

முன்னணி மொபைல் உற்பத்தி நிறுவனங்களுள் ஒன்றாகத் திகழும் HTC நிறுவனம் தனது வாடிக்கையாளர்களுக்கு புதிய அதிரடிச் சலுகையை வழங்க முன்வந்துள்ளது.

இதற்கமைவாக HTC One M8, HTC Desire 816, Desire 610, HTC One Remix, HTC One Max போன்ற சில வகையான சாதனங்களுடன் இரு வருடங்களுக்கு 100GB வரையான Google Drive சேமிப்பு வசதியை வழங்க முன்வந்துள்ளது.

இதற்கு முன்னரும் இவ்வாறான வசதியை கூகுள் நிறுவனம் வழ்ங்கிவந்த போதிலும் 50 GB வரை மட்டுப்படுத்தியிருந்தது.

இதேவேளை-2013 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டிருந்த HTC One, HTC Butterfly S, HTC One Mini மற்றும் HTC Desire 601 ஆகியவற்றுடன் 25 GB வரையான சேமிப்பு வசதியை HTC நிறுவனம் தருகின்றது.

# சம்சுங் புதிய வளைந்த ஒலிப் பட்டி




பிரபல சம்சுங் நிறுவனம் சில மாதங்களுக்கு முன்னர் வளைந்த மேற்பரப்பைக் கொண்ட தொலைக் காட்சியைஅறிமுகம் செய்திருந்தமை அறிந்த விடயமே.

இந்நிலையில் தற்போது அந்த வகையான தொலைக் காட்சிகளுடன் இணைத்து பயன்படுத்தக்கூடிய வகையில் வளைந்த ஒலிப் பட்டியை (Soundbar) அறிமுகம் செய்துள்ளது. 8.1 சனல் உடையதும், இரு ஸ்பீக்கர்களைக் கொண்டதுமான இந்தச் சாதனம் 42 மில்லி மீற்றர்கள் தடிப்புடையதாகவும், 4,200 மில்லிமீற்றர்கள் வளை வாரை உடையதாகவும் காணப்படுகின்றன.

இதனை 55 மற்றும் 65 அங்குல அளவுடைய தொலைக்காட்சிகளில் பயன்படுத்த முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

# இதய துடிப்பு மூலம் இயங்கும் புதிய பேஷ் மேக்கர்



பற்றறி இல்லாமல் இதய துடிப்பு மூலம் இயங்கும் புதிய பேஷ் மேக்கர் கருவி தயாரிக்கப்பட்டுள்ளது.

இருதய் துடிப்பு குறைபாடு உள்ளவர்களுக்கு பேஷ் மேக்கர் கருவி பொருத்தப்படுகிறது. பற்றறி மூலம் இயங்கும் இந்தக்கருவியை சத்திர சிகிச்சை மூலம் இருதயத்துக்குள் பொருத்துகின்றனர்.

பேஷ். மேக்கர் கருவியில் கோளாறு ஏற்பட்டாலோ அல்லது பற்றறி மாற்ற வேண்டியது இருந்தாலோ சத்திரசிகிச்சை மூலம் வெளியே எடுத்து சரி செய்து பொருத்த வேண்டியுள்ளது. இதனால் உடல் நலத்தில் ஆபத்தும், பிரச்சினைகளும் ஏற்படுகின்றன.

அதை தடுக்க தற்போது புதுவித பேஷ் மேக்கர் கருவி தயாரிக்கப்பட்டுள்ளது. இது பற்றறி இன்றி ஓட்டோ மற்றிக். அதாவது தானாக இயங்க கூடியது.

தானியங்கி (ஓட்டோ மற்றிக்) கைகடிகாரம் தொழில் நுட்பத்தை முன்னோடியாக கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது.

# கணவன்மாரால் கைவிடப்பட்ட 1,888 பெண்கள் கிளிநொச்சியில்

கிளிநொச்சி, செப்.5

கிளிநொச்சி மாவட்டத்தில் ஆயிரத்து 888 பெண்கள் கணவனால் கைவிடப்பட்ட நிலையிலும் காணப்படுகின்றனர். கடந்த கால போர் காரணமாகவும் ஏனைய விபத்துக்கள் காரணமாகவும் கிளிநொச்சி மாவட்டத்தில் 5 ஆயிரத்து 646 பெண்கள் கணவன்மாரை இழந்த நிலையில் விதவைகளாகக் காணப்படுகின்றனர். இதில் போர் காரணமாக கணவனை இழந்தவர்களே அதிகமாக காணப்படுகின்றனர்.

கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் 3 ஆயிரத்து 57 விதவைகளும், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவில் 613 விதவைகளும், பூநகரி பிரதேச செயலர் பிரிவில் ஆயிரத்து 549 விதவைகளும் கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவில் 935 விதவைகளும் என் மாவட்டத்தில் 5ஆயிரத்து 646 பேர் விதவைகளாகக் காணப்படுகின்றனர்.

அத்துடன் கரைச்சிப் பிரதேசத்தில் 670 பெண்களும், பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் 96 பெண்களும், பூநகரிப் பிரதேசத்தில் 875 பெண்களும் கண்டாவளைப் பிரதேசத்தில் 247 பெண்களும் என் ஆயிரத்து 888 பெண்கள் கணவனால் கைவிடப்பட்ட நிலையில் காணப்படுகின்றனர்.

இதேவேளை- மாவட்டத்தில் மீள்குடியேறியுள்ள ஒரு லட்சத்து 32ஆயிரத்து 513 பேரில், 12ஆயிரத்து 756 பேர் முதியோர்களாகக் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (த-55)

## பரந்தன் பிரதான அஞ்சலகம் விரைவில் புதிய கட்டடத்தில்

கிளிநொச்சி, செப்.5

பரந்தன் பிரதான தபால் அலுவலகத்தின் புதிய கட்டடப் பணிகள் நிறைவுற்ற நிலையில் இந்தத் தபாலகம் மிக விரைவில் திறந்து வைக்கப் படவுள்ளதாக பரந்தன் தபாலக அதிகாரி தெரிவித்தார்.

பரந்தன் பிரதான தபாலகம் கடந்த போர்க் காலத்தினால் சேதமடைந்து காணப்பட்ட நிலையில் குறித்த தபாலகம் தொடர்ந்து தனியார் வீடொன்றில் பெரும் சிரமமங்களுக்கு மத்தியில் இயங்கி வருகின்றது.

இதனையடுத்து கடந்த 2011 ஆம் ஆண்டு இந்தத் தபாலகத்துக்கான புதிய கட்டடம் ஒன்று பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுக் கட்டுமானப் பணிகள் நிறைவடைந்துள்ள போதும் இந்தத் தபாலகம் குறித்த தனியார் வீட்டிலேயே இயங்கி வருகின்றது.

இந்த நிலையில் இந்தத் தபாலகத்தின் புதிய கட்டடம் இது வரை திறக்கப்படாமை தொடர்பாகப் பரந்தன் தபாலக அதிகாரியிடம் கேட்டபோது, குறித்த தபாலகத்தின் பணிகள் நிறைவடைந்து தங்களிடம் கையளிக்கப்பட்டிருப்பதாகவும், அது விரைவில் திறந்து வைக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (த-55)

## நிலக் கடலையை பிரித்தெடுக்கும் இயந்திரம் வன்னியில் அறிமுகம்

ஒட்டுசுட்டான்,செப்.5

முல்லைத்தீவு மாவட்ட விவசாயத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் முல்லைத்தீவு பூதன் வயல் கிராமத்தில் ஜெய்க்கா' நிறுவனத்தினால் ஒருங்கிணைந்த மாதிரிப் பண்ணையாளர் சங்கத்துக்கு நிலக் கடலை பிரித்தெடுக்கும் இயந்திரம் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.

மாகாண விவசாயப் பணிப்பாளர் சி. சிவகுமார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில்வடக்கு மாகாண விவசாய கமத்தொழில், நீர்ப்பாசன மற்றும் சுற்றாடல் அமைச்சர் பொ. ஐங்கரநேசன், மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன், அமைச்சின் செயலாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் நிலக் கடலையைப் பிரித்தெடுக்கும் இயந்திரம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதுடன் மாதிரியாக அறுவடையும் செய்யப்பட்டது.

இந்த நிகழ்வில் விவசாயிகள், விவசாயப் போதனாசிரியர்கள், கமக்கார அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். (த-500)



பொலிஸ் திணைக்களத்தின் 148ஆவது தினத்தினையொட்டி வவுனியா இரட்டை பெரியகுளம் பொலிஸ் நிலையத்துக்கான புதிய கட்டடம் அமைப்பதற்கு அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று வியாழக்கிழமை இடம்பெற்றது. வடமாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர புதிய கட்டடத்துக்கான அடிக்கல்லை நட்டார். (த-421)

## பூப்புனித நீராட்டு விழாவில் திருடர் துணிகர கைவரிசை

### கிளிநொச்சிப் பாடசாலை விடுதியில்

மாங்குளம், செப்.5

பூப்புனித நீராட்டு விழாவில் திருடர்களின் துணிகரமான திருட்டால் 10 பவுண் நகை மற்றும் ஒரு தொகைப் பணம் என்பவற்றைப் பறிகொடுத்துள்ளனர் குடும்பத்தினர்.

இந்தச் சம்பவம் கடந்த 28 ஆம் திகதி வியாழக்கிழமை கிளிநொச்சியிலுள்ளஆசிரியர் விடுதியில் நடைபெற்றுள்ளது.

சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது:-

கிளிநொச்சி கனகபுரம் மகா வித்தியாலயத்தின் அதிபர் விடுதியில் தங்கியிருக்கும் சுந்தரம்பிள்ளை வரதராஜா என்னும் ஆசிரியரின் மகளுக்குப் பூப்புனித நீராட்டுவிழா கொண்டாடியுள்ளனர்.

பூப்புனித நீராட்டுவிழாவை முடித்து இரவுவேளை உறங்கிக் கொண்டிருந்தசமயம் நள்ளிரவில் விடுதியின் பின்பக்க ஜன்னல் கதவை உடைத்து உட்புகுந்த திருடர்கள் அறைக்குள் இருந்த உடைப் பைகளைத் தூக்கிக் கொண்டு அருகிலிருக்கும் ஆசிரியர் விடுதியின் பின் பக்கத்தில் கொண்டு சென்று அதற்குள் இருந்த 10 பவுண் நகையையும் குறிப்பிட்ட தொகைப் பணத்தையும் எடுத்துச் சென்றுள்ளனர்.

விழாவுக்கு நெடுந்தீவு, வவுனியா போன்ற இடங்களிலிருந்தும் வருகை தந்து உறவினர்கள் தங்கியிருந்தனர்.

அவர்களின் பணங்களும் களவாடப்பட்டிருந்ததால் அவர்கள் வீடு செல்வதற்குக் கூடப் பணமின்றி இருந்துள்ளனர்.

க.வரதராஜாவின் சொந்த இடமான கிளிநொச்சி பரவிப் பாஞ்சானின் ஒரு பகுதி மட்டும் இராணுவத்தினரால் விடுவிக்கப்பட்டு ஏனைய பகுதி இன்னமும் விடுவிக்கப்படாத நிலையில் அவர் பணிபுரியும் பாடசாலை விடுதியில் வைத்து இந்த வைபவத்தைக் கொண்டாடியுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பாகக் கிளிநொச்சிப் பொலிஸாரிடம் முறையிட்டதையடுத்து அவர்கள் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த-422)

## இத்தாலியிலிருந்து விடுமுறையில் வந்த இலங்கையர் மடுவில் பாம்பு தீண்டி சாவு

### அருகில் போதிய வைத்திய வசதிகள் இல்லாததே காரணம்

மன்னார், செப்.5

இத்தாலியில இருந்து விடுமுறையில் தனது தாய் நாட்டுக்கு வந்திருந்த இலங்கையரான இரு பிள் ளைகளின் தந்தையொருவர் மடுப் பிரதேசத்தில் விஷப் பாம்பொன்று தீண்டியதால் உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் வென்னப்புவ மிரிஸ்ஸன் கொட்டுவ வாசியான 30 வயதான சுமித் பிரசாந் ஆவார்.

14 ஆண்டுகளாக இத்தாலியில் பணிபுரியும் இவர் தமது வருடாந்த விடுமுறையைக் குடும்பத்துடன் தனது தாய் நாட்டில் கழிப்பதை வழமையாக்கிக் கொண்டிருந்தார்.

கடந்த 23 ஆம் திகதி குடும்பத்துடன் மடுவுக்குச் சென்று அங்கு வாடகை வீடொன்றில் தங்கியிருந்தபோதே நள்ளிரவில் இவரை விஷப் பாம்பு ஒன்று தீண்டியுள்ளது.

உடனடியாக அவரை மடுத் தேவாலயத்தில் உள்ள சுகாதார நிலையத்துக்கும், பண்றிவிரிச்சான் வைத்தியசாலைக்கும் எடுத்துச் செல்லப்பட்டிருந்த போதிலும் அந்த இரு இடங்களிலும் சிகிச்சை வழங்க எவருமே இல்லாதமையால் 20 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள செட்டிகுளம் வைத்தியசாலைக்கு அவர் கொண்டு செல்லப்பட்டிருந்தார்.

ஆனாலும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோது அவர் உயிரிழந்து விட்டதாக அங்கிருந்த வைத்தியர் ஹமீட் தெரிவித்துள்ளார்.

மரண விசாரணையை நடத்தியிருந்த வவுனியா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி பி.எச். ஜயவர்த்தன, கடுமையான விஷத்தைக் கொண்ட பாம்பொன்று தீண்டியதால் மரணம் ஏற்பட்டதாகத் தெரிவித்துள்ளார்

பல்லாயிரக்கணக்கில் பக்தர்கள் வந்து செல்லும் இது போன்ற வணக்கஸ்தலமொன்றில் ஆரம்ப சிகிச்சையயொன்றையாவது வழங்குவதற்கு வைத்தியர் ஒருவர் இருப்பது அவசியம் எனவும், தமது புதல்வருக்கு ஏற்பட்ட கதி வேறு எவருக்கும் ஏற்படக் கூடாது எனவும், அருகில் போதிய வைத்திய வசதி இல்லாததன் காரணமாகவே அவரை 20 கிலோமீற்றர் தொலைவுக்கு எடுத்துச் செல்ல வேண்டி நேர்ந்திருந்தது எனவும்-இனிமேலாவது மடுத் தேவாலய சூழலில் போதிய வைத்திய வசதிகளை ஏற்படுத்துவதற்கு கவனம் செலுத்தப்படவேண்டும் எனவும் உயிரிழந்த சுமித் பிரசாந்தின் தந்தை தெரிவித்தார். (த-22)

## மாந்தை கிழக்கு சிறாட்டிக்குளம் பகுதிக்கான பஸ் சேவைக்கு நடவடிக்கை

முல்லைத்தீவு, செப்.5

மாந்தை கிழக்கு சிறாட்டிக்குளம் கிராமத்துக்கான பஸ் சேவைக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் ரி.பிருந்தாகரன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் உள்ள சிறாட்டிக்குளம் கிராமத்தில் 54 வரையான குடும்பங்களைச் சேர்ந்த 180 இற்கும் மேற்பட்டோர் வாழ்ந்து வருகின்றனர்.

இந்த நிலையில் இந்தப் பகுதி மக்கள் தமக்கான எந்தத் தேவைகளை நிறைவு செய்கின்றதாயினும் 7 கிலோ மீற்றர் தூரம் வரை எந்தவிதமான போக்குவரத்து வசதிகளும் இன்றித் தமது தேவைகளை பெரும் சிரமத்தின் மத்தியில் நிறைவேற்றி வருகின்றனர்.

இங்கு உள்ள பாடசாலை தரம் 1 தொடக்கம் 5 வரை யான வகுப்புகளைக் கொண்டு இயங்குவதனால் ஏனைய வகுப்புக்களில் கல்வி கற்கும் மாணவர்கள் 10 கிலோ மீற்றருக்கு அப்பால் சென்றே கல்வியைத் தொடர வேண்டிய நிலை காணப்படுகின்றது.

இந்நிலையில் இந்தக் கிராமத்துக்கான போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்தித் தருமாறு இந்தப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்து வந்தனர்.

மேற்படி விடயம் தொடர்பாக கருத்துத் தெரிவித்த மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர், பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் குனைஸ் பாரூக் மக்களை நேரடியாகச் சென்று சந்தித்துக் கலந்துரையாடியதுடன், வவுனியாவிலிருந்து பாலமோட்டை-நவ்வி-குஞ்சுக்குளம் ஊடாக மூன்றுமுறிப்பு வரை தினமும் சேவையில் ஈடுபடும் அரச பஸ்ஸைச் சிறாட்டிக்குளம் வரை சேவையில் ஈடுபடுத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு நேற்று முதல் குறித்த சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது-என்றார். (த-55)

# தடை செய்த வலைகள் மூலம் குடாக் கடலில் இறால் பிடிப்பு

## சிறிய இன மீன் குஞ்சுகள் அழிவடையும் அபாயம்

யாழ்ப்பாணம், செப். 5
குடாக்கடல் நீரேரிகளில் சிறிய கூடுகள் மற்றும் தடை செய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்தி இறால் பிடிப்பு நடவடிக்கைகள் மீளவும் ஆரம்பித்துள்ளதால் சிறிய இன மீன் குஞ்சுகள் அழிவடைந்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
தடை செய்யப்பட்ட வலைகள் மற்றும் கூடுகளைப் பயன்படுத்தி இறால் பிடிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
இந்த முறையில் மீன் பிடிப்பதால் சிறிய இன மீன் குஞ்சுகள் அழிவடையும் ஏனெனில், இறால் பிடிப்பவர்கள் இறாலைத் தெரிவு செய்து எடுத்துக்கொண்டு மீதமான மீன்குஞ்சுகளை வீசுகின்றனர். இதனால் தொடர்ச்சியாக மீன்கள் பெருக்க முடியாது குஞ்சுப் பருவத்திலேயே அவை இறக்கும் நிலை ஏற்படும்.
மீனவர்களுக்கு இது தொடர்பில் அறிவுறுத்தப்பட்டபோதும் மீண்டும் கூடுகள் போட்டு மீன் பிடிக்கும் நடவடிக்கையில் மீனவர்கள் சிலர் ஈடுபட்டுள்ளனர்.
இதனால் எதிர்காலத்தில் மீன் பிடி வளம் குன்றிப்போகும் நிலை ஏற்பட்டுள்ளது.
மீனவர் சங்கங்கள் ஊடாக மீனவர்களுக்கு இது தொடர்பில் ஆலோசனை வழங்க வேண்டியுள்ளது. மீனவர்கள் தாமாக முன்வந்து இந்தத் தொழில் முறையைக் கைவிட்டால் மட்டுமே கடல்வளத்தைப் பாதுகாக்க முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டது.
குறிப்பாகப் பண்ணைப் பகுதியில் உள்ள கடல் நீரேரியில் கூடு போட்டு இறால் பிடிக்கும் நடவடிக்கையில் மீனவர்கள் ஈடுபட்டுள்ளனர். (த-14)



# 25 மில்லியன் ரூபா செலவில் மீனவர்களுக்கு உதவித்திட்டம்

## அமெரிக்கத் துணை தூதர் வழங்கினார்



அமெரிக்கத் துணைத் தூதர் மீனவர்களுக்கு பத்திரங்களைக் கையளிக்கிறார்

யாழ்ப்பாணம், செப். 5
யு.எஸ். எயிட் உதவியின் மூலமாக 25.3 மில்லியன் ரூபா செலவில் பொதுநோக்கு மண்டபங்கள் – 2, மீன்கூறு வாடி, என்பன திறந்து வைக்கப்பட்டதோடு மீனவர்களுக்கென வெளியிணைப்பு இயந்திரங்கள் பொருத்தப்பட்ட 19 கண்ணாடி இழைப்படகுகளும் மீனவர்களுக்கு நேற்று வழங்கப்பட்டன.
இந்த நிகழ்வுகளுக்கு அமெரிக்கத் துணைத் தூதர் அன்றூமான் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டதோடு வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன் கௌரவ விருந்தினராகவும், நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொண்டனர்.
முதலாவது நிகழ்வு காக்கைதீவில் காலை 9.30 இடம்பெற்றது.
அங்கு 3.3 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட மீன்கூறு வாடி திறந்து வைக்கப்பட்டது.
தொடர்ந்து பொன்னாலையில் 1.5 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட பொது நோக்கு மண்டபம் திறந்து வைக்கப்பட்டது.
அதனைத் தொடர்ந்து மாதகல் கிழக்கில் கடற்கரையில் 19 மில்லியன் ரூபா பெறுமதியான வெளியிணைப்பு இயந்திரங்கள் பொருத்தப்பட்ட கண்ணாடி இழையினாலான 19 படகுகள், உயிர்பாதுகாப்பு அங்கிகள், மிதவை என்பன மீனவர்களிடம் கையளிக்கப்பட்டன.
ஒரு படகு இரண்டு மீனவர்களுக்கு என்ற அடிப்படையில் அவை வழங்கப்பட்டன. ஒவ்வொன்றும் 6 லட்சம் ரூபா பெறுமதியுடையவை.
அவற்றின் பெறுமதியின் 50 வீதமான பணத்தை மீனவ சங்கத்துக்கு அவர்கள் செலுத்த வேண்டும். மீள் சுழற்சி அடிப்படையில் அவை அதே மீனவர்களுக்குப் பயன்படும் வகையில் அவ்வாறு செய்யப்பட்டுள்ளது. மாதகல் மேற்கில் 1.5 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட பொது நோக்கு மண்டபம் திறந்து வைக்கப்பட்டது.
இந்த நிகழ்வுகளில் விருந்தினர்களுடன், குறித்த பகுதி பிரதேச செயலர்கள், யு.எஸ். எயிட் அதிகாரிகள் யாழ். சமூக மேம்பாட்டு நிறுவனத்தினர், யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத்திணைக்கள பிரதிப் பணிப்பாளர் ந.கணேசமூர்த்தி, மீனவ சங்கப் பிரதிநிதிகள், மீனவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (த-4)

### தவறணையில் கொட்டில் தீக்கிரை

வரணி வடக்கு கள்ளுத் தவறணையில் மதுப் பிரியர்களின் பாவனைக்கு அமைக்கப்பட்டிருந்த ஓலைக்கொட்டில் கடந்த வாரம் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.
கடந்த வாரம் வரணி வடக்கு சிவில் பாதுகாப்புக் குழுவினருடன் சந்திப்பு ஒன்றின்போது இந்தக் கள்ளுத் தவறணைக்கு வரும் மதுப் பாவனையாளர்கள் சிலர் பகல் மற்றும் மாலை நேரங்களில் இங்கு குழப்பம் விளைவிப்பது தொடர்பில் பொலிஸாரிடம் முறையிடப் பட்டது.
அன்றைய தினம் இரவே குறித்த கள்ளுத் தவறணையின் ஓலைக்கொட்டில் தீ வைத்துக் கொளுத்தப்பட்டுள்ளது.
கடந்த வருடம் வரணி வடக்கில் வேறு ஒரு இடத்தில் ஓலைக்கொட்டிலில் இயங்கி வந்த இந்தக் கள்ளுத் தவறணைக்குத் தீ வைக்கப்பட்டது. அதன் பின்பு இதற்கு மாற்றீடாக வரணி வடக்கு கறுக்காய் பிரதேசத்தில் கொடிகாமம் பனை தென்னை வளக் கூட்டுறவுச் சங்கத்தினால் புதிததாக கள்ளுத் தவறணை ஒன்று சிமெந்தால் அமைக்கப்பட்டுப் பாவனையில் இருந்து வந்த சமயமே கடந்த வாரம் இந்தக் கள்ளுத் தவறணைக் கொட்டில் இரவோடு இரவாக தீயிட்டு கொளுத்தப்பட்டுள்ளது. (த-122)

### அரிசி மொத்த கொள்வனவாளர் இருப்பு விவரம் சமர்ப்பிக்குக

மில் மற்றும் அரிசி மொத்த கொள்வனவாளர்கள் இருப்பு விவரங்களை எதிர்வரும் 12 ஆம் திகதிக்கு முன்னர் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையிடம் சமர்ப்பிக்குமாறு பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் யாழ். மாவட்ட அதிகாரி தனசேகரம் வசந்த சேகரன் அறிவித்துள்ளார்.
அரிசி மற்றும் நெல் மொத்த இருப்புத் தொகை விவரங்களைச் சரியான முறையில் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ள நிலையில், விவரத்தை சரியான முறையில் சமர்ப்பிக்காத மில் மற்றும் மொத்த கொள்வனவாளர்களின் பொருள்கள் பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகார சபைச் சட்டத்தின் பிரகாரம் அரசுடைமை ஆக்கப்படுமென்றும் அவர் மேலும் கூறினார்.
இருப்பு விபரங்களைச் சமர்ப்பிக்கும் படிவங்கள் யாழ். மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ள பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகார சபை காரியாலயத்தில் பெற்றுக்கொள்ள முடியுமென்றும், மொத்த தொகை விவரங்களைச் சரியான முறையில் கொண்டு அலுவலகத்துக்கு வருகை தந்தால் அங்கு வைத்து இருப்பு படிவத்தைப் பூரணப்படுத்த முடியுமென்றும் அவர் கூறினார். (த-106)

### கைதடி முதியோர் சுற்றுலா

தென்மராட்சி, செப். 5
கைதடி சாந்தி நிலைய முதியோர்கள் ஆன்மிகச் சுற்றுலா ஒன்றுக்காக கடந்த 27 ஆம் திகதி கிழக்கு மாகாணத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.
இல்லத்திலிருந்து அன்று காலை புறப்பட்ட முதியோர் குழு முதலில் திருகோண மலை கன்னியா வெந்நீர் ஊற்றுப் பகுதிக்குச் சென்று நீராடிவிட்டு திரு கோணேஸ்வரம் ஆலயத்துக்கு மலையேறி நடந்து சென்றனர்.
பின்னர் திருகோணமலை நகரில் உள்ள சென். தோமஸ் தேவாலயத்துக்கும் ஆறாம் கட்டையில் உள்ள கிருஷ்ணன் கோயிலுக்கும் சென்று வழிபட்டு மாலை இல்லம் திரும்பினர்.
நீண்டதூரம் பயணித்த போதிலும் முதியோர்கள் களைப்படையாமல் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.
இந்த ஆன்மிகச் சுற்றுலாவுக்கு மாகாண அமைச்சு வாகன வசதி செய்து கொடுத்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-9)

### நிறுத்தல் அளவைகளுக்கு முத்திரையிடல்

கரணவாய், செப். 5
வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளிலுள்ள வர்த்தக நிலையங்களில் பயன்படுத்தப்படும், நிறுத்தல் அளவைகளுக்கு முத்திரை இடும் பணி நேற்று செவ்வாய்க்கிழமை முதல் இடம்பெறுகிறது.
நேற்று முதல் 4 ஆம், 5 ஆம், 9 ஆம், 11 ஆம் திகதிகளில் வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபையின் தலைமைக் காரியாலயத்திலும் 15 ஆம், 16 ஆம், 18 ஆம் திகதிகளில் பிரதேச சபையின் உடுப்பிட்டி உப அலுவலகத்திலும் காலை 8.30 மணி முதல் 4 மணி வரை இந்தப்பணி இடம்பெறவுள்ளது.
பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் வியாபார நடவடிக்கையில் ஈடுபடும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் உட்பட அனைத்து வர்த்தக நிலையங்களும் தமது நிறுத்தல் கருவிகளுக்கு முத்திரை இடும் பணியை மேற்கொள்ளுமாறு பிரதேச சபைச் செயலாளர் அறிவித்துள்ளார். (த-108)

### மாணவியை தாக்கின குளவிகள்

தென்மராட்சி, செப். 5
பாடசாலையிலிருந்து வீடு திரும்பிய 11 வயது மாணவியைக் கருங்குளவிகள் துரத்தித் தாக்கின.
இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மீசாலை வடக்கில் இடம்பெற்றது. இதே இடத்தைச் சேர்ந்த குலேந்திரன் கஜனி (வயது-11) என்னும் மாணவி சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (த-9)

## சீவல் தொழிலாளிகள் பனை மரத்தில் இலகுவாக ஏறுவதற்குப் புதிய திட்டம்

சீவல் தொழிலாளர்கள் இலகுவான வழிமுறை மூலம் பனை மரம் ஏறி தொழிலை மேற்கொள்வதற்குப் புதிய திட்டம் ஒன்றைப் பனை அபிவிருத்திச் சபை மேற்கொள்ளவுள்ளதாகச் சபையின் தலைவர் பசுபதி சீவரத்தினம் தெரிவித்தார்.
இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;
சீவல் தொழிலாளர்கள் மட்டுமன்றி ஏனையவர்களும் பனையில் சுலபமாக ஏறி அதன் பயனைப் பெறுவதற்கு இலகுவான பொறிமுறை ஒன்றை வகுப்பதென்று சபை திட்டமிட்டுள்ளது. தற்போது சீவல் தொழிலாளர்களே பனை மரம் ஏறிச் சீவல் தொழிலை மேற்கொண்டு வருகின்றனர். பலர் தென்னை மட்டையைப் பனையில் தடைகளாகக் கட்டி அதன் ஊடாக மரத்தில் ஏறித் தமது தொழிலை மேற் கொண்டு வருகின்றனர். இந்த முறையை மாற்றி விரைவில் நவீன வசதியுடன் ஏணிப்படி கொண்ட பொறிமுறை ஒன்றை விரைவில் அறிமுகம் செய்து வைக்கச் சபை தீர்மானித்துள்ளது என்றார். (த-17)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## இஸ்லாத்தைக் கொச்சைப்படுத்தும் ஐ.எஸ்.ஐ.எஸ்ஸின் நடவடிக்கைகள்

அமெரிக்க ஊடகவியலாளர் ஜேம்ஸ் பொலே தலை துண்டிக்கப்பட்ட அதிர்ச்சி விலகுவதற்குள் அமெரிக்காவுக்கு மேலும் அதிர்ச்சி அளிக்கும் வகையில் அந்த நாட்டைச் சேர்ந்த இன்னொரு ஊடகவியலாளரின் தலையை ஐ.எஸ்.ஐ.எஸ். என அழைக்கப்படும் இஸ்லாமிய தேசம் அமைப்பு துண்டித்துள்ளது. ஊடகவியலாளர் சட்லாப் கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் சிரியாவில் கடத்தப்பட்டார். இவரைப் போன்று பணயக் கைதியாகப் பிடித்து வைக்கப்பட்டிருந்த ஜேம்ஸ் பொலே ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பினால் கடந்த மாதம் தலை வெட்டிக் கொல்லப்பட்டார்.

ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு இத்துடன் நின்றுவிடப்போவதில்லை. தான் பிடித்து வைத்துள்ள டேவிட் ஹெய்ன்ஸ் என்ற பிரிட்டிஷ் ஊடகவியலாளரும் கொல்லப்படுவார் என்று அறிவித்துள்ளது. அமெரிக்கா உட்பட மேற்கத்திய நாடுகள் தமது சொந்த நலன்களை முன்னிறுத்தி மத்திய கிழக்கில் கடைப்பிடிக்கின்ற மோசமான கொள்கைகளுக்குப் பழிவாங்கும் நோக்குடன் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு இதுபோன்ற தலைதுண்டிப்புகளை மேற்கொள்வதாகக் கூறினாலும் நாகரிக மனித உலகில் இது அப்பட்டமான காட்டுமிராண்டித்தனமே. ஆப்கானிஸ்தானில் தலிபான்களினதும், மத்திய கிழக்கிலும் வடஆபிரிக்காவிலும் அல் - கெய்தாவினதும் ஆயுதப் போராட்டங்களை முடிவுக் குக் கொண்டுவர முடியாது தடுமாறும் ஒபாமா நிர்வாகத்துக்கு ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் தாக்குதல்களும், மனித நேயத்துக்கு விரோதமான பயங்கரவாதச் செயற்பாடுகளும் பெரும் சவாலாகும்.


ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு மிகவும் குறுகிய காலத்துக்குள் ஈராக்கில் ஒரு பகுதியையும் சிரியாவில் ஒரு பகுதியையும் தனது கட்டுப்பாட்டில் கொண்டுவந்துள்ளது. தான் பிடித்த பகுதிகளை இணைத்து இஸ்லாமிய தேசம் என்ற பெயரில் புதிய நாடொன்றை அந்த அமைப்பு பிரகடனம் செய்திருப்பதால் கிணறு வெட்டப் பூதம் கிளம்பியது போன்ற ஒரு பயங்கரமான நிலைமைக்குள் ஒபாமா நிர்வாகம் தள்ளப்பட்டுள்ளது.

ஈராக்கில் சதாம் ஹுசைனையும், எகிப்தில் முபாரக்கையும், லிபியாவில் கடாபியையும், சிரியாவில் அஸாத்தையும் பதவி விழ்க்கும் போராட்டத்தில் இஸ்லாமிய ஆயுதக்குழுக்களுக்கு அமெரிக்காவினதும் மேற்கு நாடுகளினதும் ஆதரவு இருந்ததை எவரும் மறுக்க முடியாது. தற்பொழுது சிரியாவில் அஸாத்தைத் தவிர ஏனைய அரச தலைவர்கள் பதவி விழ்க்கப்பட்டு விட்டனர் அல்லது கொல்லப்பட்டு விட்டனர். அந்த வெற்றிடம் சிறிது சிறிதாக இஸ்லாமிய கிளர்ச்சியாளர்களால் நிரப்பப்பட்டு வருகிறது. இது ஒபாமா நிர்வாகத்தின் ராஜதந்திரத்துக்குக் கிடைத்த பெரும் தோல்வியாகும். இப்படியான ஒரு இஸ்லாமிய கிளர்ச்சிக்குழுதான் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு. இஸ்லாம் அன்பு, கருணை, மனிதநேயம், மனித உயிர்களை மதித்துப் பாதுகாத்தல் போன்ற உயர்ந்த பண்புகளை வலியுறுத்தும் மார்க்கம். ஐ.எஸ்.ஐ.எஸ்ஸின் நடவடிக்கைகள் இஸ்லாத்தை கொச்சைப்படுத்தக்கூடியவை. அமெரிக்க ஊடகவியலாளர்கள் கழுத்து வெட்டிக் கொலை செய்யப்பட்டமை வீடியோவிலும் காண்பிக்கப்பட்டதால் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டிய கட்டாயம் ஒபாமா நிர்வாகத்துக்கு ஏற்பட்டுள்ளது. இஸ்லாமிய தேசத்தை அழிக்கப்போவதாக ஒபாமா சூளுரைத்துள்ளார். அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியைத் தழுவும் நிலையிலுள்ள ஒபாமாவால் இது எவ்வளவு தூரம் சாத்தியப்படுமோ தெரியாது. 2001இல் நியூயோர்க்கின் உலக வர்த்தக மையம் அல் - கெய்தாவால் அழிக்கப்பட்டபோது, ஆப்கா னிஸ்தானுக்குப் படையை அனுப்பி பதவியிலிருந்த தலிபான் அரசைக் கவிழ்த்தார் ஜோர்ஜ் புஷ். ஆனால் இன்று அங்கு என்ன நடக்கிறது? ஆப்கானிஸ்தானில் தலிபர்ன்களின் பலம் மீண்டும் அதிகரித்து வருகிறது. அமெரிக்கப் படைகள் வெளியேறும்போது லிபியாவில் தற்பொழுது ஏற்பட்டுள்ள நிலைமையே ஆப்கானிஸ்தானிலும் இடம்பெறும். லிபியாவின் தலைநகர் திரிபோலியின் பெரும்பாலான அரச அலுவலகங்கள் இஸ்லாமிய தீவிரவாதி களின் கட்டுப்பாட்டில் வந்துள்ளன.

அமைதியாக ஆட்சிசெய்துகொண்டிருந்த தலைவர்களைக் கவிழ்க்கப்போய் மிகவும் மோசமான தலைமைகளை உருவாக்கிவிட்டது அமெரிக்கா. மத்திய கிழக்கில் அமெரிக்கா தலையிட்ட நாடுகளில் எல்லாம் அரசியல் குழப்பம் நிலவுகிறது. எந்த ஒரு நாட்டிலும் ஸ்திரமான ஆட்சி இல்லை. தான் விட்ட தவறுகளுக்கு பிராயச்சித்தம் தேடிக்கொள்ளும் நிலைமை அமெரிக்காவுக்கு ஏற்பட்டிருப்பது துரதிர்ஷ்டம் வாய்ந்ததாகும். அமெரிக்காவின் வெளிநாட்டு மற்றும் பாதுகாப்புக் கொள்கைகளில் மாற்றம் செய்வதன் மூலமே இன்று மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள மோசமான நிலை மையை எதிர்காலத்தில் தவிர்க்க முடியும்.

# ஆட்சி மாற்றத்துக்கான நல்லதொரு தருணம்

சேரலாதன்





**புலிகளின் உதவியால் அதிர்ஷ்டம் கை கொடுக்க மஹிந்த ஜனாதிபதி ஆனார். ஆனால் தமது தயவால் இலங்கையின் அதியுயர் பதவியில் அமர்ந்து கொண்டவர் தமக்கு அழிவை ஏற்படுத்துவாரென புலிகள் ஒருபோதுமே எண்ணியிருக்க மாட்டார்கள். போர் வெற்றி ஒன்றைக் காட்டிக் காட்டியே ஆளும் கூட்டணி தேர்தல்களில் தொடர்ந்து வெற்றிகளைப் பெற்று வந்தது. இதற்கு பெரும்பான்மையினர் மத்தியில் விதைக்கப்பட்ட இனவெறிக் கருத்துக்களும் ஒரு காரணம் எனக் கூறலாம்.**

இலங்கையில் ஆட்சி மாற்றமொன்று ஏற்பட வேண்டும் என்பதன் தேவை உணரப்பட்டுள்ளது. சுமார் 10 ஆண்டுகளாக நீடிக்கும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி மீதான நம்பிக்கை மெல்ல மெல்லத் தகர்ந்து வருவதன் காரணமாக இத்தகையதொரு எதிர்பார்ப்பு தோன்றியுள்ளது.

முன்னரெல்லாம் ஐக்கிய தேசியக் கட்சியும், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியும் மாறி மாறி ஆட்சி அமைப்பதே வழக்கமாகக் காணப்பட்டது. ஆனால் 2005 ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வெற்றி பெற்றதன் பின்னர் எதிர்க்கட்சி என்ற அந்தஸ்தில் அமர்ந்து கொள்வதற்கே ஐக்கிய தேசியக் கட்சியால் முடிந்துள்ளது.

விடுதலைப் புலிகளின் அணுகுமுறை காரணமாகவே மகிந்தர் ஜனாதிபதி பதவிக்கு வர முடிந்தது என்பதை அனைவரும் அறிவார்கள்.

தற்போதைய எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க புலிகளைப் பிளவுபடுத்துவதற்கு எடுத்த நடவடிக்கைகள் அவர்மீது புலிகளுக்கு கடும் சினத்தை ஏற்படுத்தியிருந்தது.

இதற்குப் பழிவாங்கும் வகையில் ஜனாதிபதித் தேர்தலில் புலிகள் நடந்து கொண்டதால் ஜனாதிபதிப் பதவியில் அமரும் அரிய வாய்ப்பொன்றை ரணில் இழந்தார்.

புலிகளின் தயவால் அதிர்ஷ்டம் கை கொடுக்க மஹிந்த ஜனாதிபதி ஆனார். ஆனால் தமது உதவியால் இலங்கையின் அதியுயர்' பதவியில் அமர்ந்து கொண்டவர் தமக்கு அழிவை ஏற்படுத்துவாரென புலிகள் ஒருபோதுமே எண்ணியிருக்க மாட்டார்கள்.

போர் வெற்றி ஒன்றைக் காட்டிக் காட்டியே ஆளும் கூட்டணி தேர்தல்களில் தொடர்ந்து வெற்றிகளைப் பெற்று வந்தது. இதற்கு பெரும்பான்மையினர் மத்தியில் விதைக்கப்பட்ட இனவெறிக் கருத்துக்களும் ஒரு காரணம் எனக் கூறலாம்.

அத்துடன் பலவீனமானதொரு கட்சித் தலைவராக ரணில் இருக்கின்றமை ஆளும் தரப்புக்கு வாய்ப்பாக அமைந்துள்ளது.

தற்போதைய ஆட்சியில் ஜனநாயக விழுமியங்கள் எவையும் பின்பற்றப்பட்டு வருவதாகத் தெரியவில்லை. நீதியும், சமத்துவமும் என்றோ காணாமற்போய் விட்டன. இன, மத, அரசியல் ரீதியான வேறுபாடுகளை ஒதுக்கி ஒருபுறம் வைத்து விட்டு நீதியை நிலைநாட்ட வேண்டிய காவல் துறையினர் அரசுக்கும் அதன் ஆதரவாளர்களுக்கும் சார்பாக நடந்து கொள்கின்றமையும், அரசில் உயர்பதவி வகிக்கும் முக்கியஸ்தர்கள் உத்தரவு பிறப்பித்ததும் நீதி, நியாயங்களைப் பார்க்காது குற்றம் செய்யாதவர்களைக் கூடக் கைது செய்வதும், தண்டிப்பதும் ஜனநாயகத்தின் ஆணி வேரையே சிதைத்து வருகின்றது.

அதுமட்டுமல்லாது தமக்கு நீதி வேண்டிப் போராட்டங்களை நடத்தும் அப்பாவிகள் பொய்க் குற்றச்சாட்டுக்களின் பேரில் கைது செய்யப்பட்டு நீண்டகாலம் முகாம்களில் தடுத்து வைக்கப்படுவது இந்த நாட்டின் வழக்கமாகவே மாறியுள்ளது.

தான்பெற்ற நான்கு பிள்ளைகளில் இருவரைப் போரில் பலி கொடுத்து விட்டு காணாமற்போன மகன் ஒருவரின் விடுதலைக்காக ஏங்கி காணாமற்போனவர்கள் தொடர்பாக இடம்பெறும் சகல நிகழ்வுகளிலும் பங்குபற்றித் தமது ஏக்கத்தை வெளிப்படுத்திய குற்றத்துக்காக கிளிநொச்சியைச் சேர்ந்த பாலேந்திரன் ஜெயக்குமாரி என்ற அபலைத் தாய் பருவமடைந்து சில மணித்தியாலங்களே ஆன பிஞ்சுப் பராயத்தை இன்னமும் கடக்காத ஒரே பெண் குழந்தையுடன் கதறக் கதறக் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்ட கொடுமை இந்த உலகில் எங்குமே நிகழ்ந்திராத ஒரு கொடிய சம்பவமாகும். எவரது உதவியும் இல்லாத இந்த அபலைகள் தற்போது தனித்தனியாகப் பிரிக்கப்பட்டு தாயார் காலியிலுள்ள பூஸா தடுப்பு முகாமிலும், அந்தப் பெண் குழந்தை காப்பகம் ஒன்றிலும் வாடிக் கொண்டிருக்கின்றனர். இதைப் போன்று எத்தனையோ சம்பவங்களைக் காண முடியும்.

எல்லாமே கண்ணீரால் எழுதப்பட வேண்டிய சோகக் காவியங்கள். இந்த நிலையில் இத்தகையதொரு ஆட்சி இந்த நாட்டுக்குத் தேவைதானா என்பதை நாட்டிலுள்ள அனைத்து மக்களும் உணர்ந்து கொள்ள வேண்டிய தருணம் இப்போது வாய்த்துள்ளது.


இறுதிப் போரின்போது தமிழர் பிரதேசத்தில் அரங்கேற்றப்பட்ட கொடுமைகள் ஒருபுறமிருக்க அதன் பின்னர் நடப்பவைதான் மிகக் கொடூரமானவையாகக் காணப்படுகின்றன. தமிழர்களின் பாரம்பரிய பிரதேசங்களில் திட்டமிடப்பட்ட வகையில் பெரும்பான்மையின மக்கள் குடியேற்றப்பட்டு வருகின்றனர். இதற்காக தமிழர்களின் பெருமளவு காணிகள் அடாத்தாகக் கைப்பற்றப்பட்டு வருகின்றன. அங்கு வசித்த மக்கள் இடம்பெயர்ந்து ஏதிலிகளாக அலைந்து திரிகின்றனர். பொதுவாகவே சிறுபான்மையினத்தவர்கள் மீதான காழ்ப்புணர்வு அதிகரித்ததன் காரணமாக அவர்களுக்கு எதிரான சம்பவங்கள் அதிகரித்துச் செல்கின்றன. பல மத வழிபாட்டுத் தலங்கள் அழிக்கப்பட்டு பௌத்த விகாரைகளை அமைக்கும் பணிகள் முழுவீச்சில் இடம்பெற்று வருகின்றன. வடக்கு, கிழக்கிலுள்ள தமிழர்களின் பூர்வீக இடங்களை அந்நியர்களுக்குத் தாரை வார்க்கும் மனச்சாட்சிக்கு விரோதமான செயற்பாடுகள் இங்கு சர்வசாதாரணமாக இடம்பெறுகின்றன. பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் இராணுவத்தினரின் தேவைக்கென சுவீகரிக்கப்பட்டு அங்கு இராணுவக் குடியிருப்புக்கள் நிறுவப்படுவதாக ஆதாரபூர்வமான தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன. அங்கு பரம்பரை பரம்பரையாக வாழ்ந்த மக்கள் தமது சொந்த இடங்களை இனிமேல் ஒரு போதுமே பார்க்க முடியாததொரு நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

தமிழர் பிரதேசங்களில் பெருமளவு இராணுவத்தினர் குடிகொண்டுள்ளதால் அங்கு இராணுவத்தின் ஆட்சி இடம்பெற்று வருகின்றது என்று கூறுவதில் தவறொன்றும் இல்லை.

இவையெல்லாம் தமிழர்கள் அனுபவிக்கும் துன்பங்களில் சிறுதுளிகள் தான். இதேவேளை- பெரும்பான்மையின மக்களும் இந்த அரசின் ஆட்சியில் இன்னல்களை எதிர்கொண்டு வருகின்றனர். குறிப்பாக சட்டமும், ஒழுங்கும் பாரபட்சமான வகையில் நடைமுறைப்படுத்தப்படுவதால் மக்களில் ஒரு சாரார் பெரும் பாதிப்பை எதிர்கொண்டு வருகின்றனர். தேர்தல்கள் கூட நீதியாகவும், நேர்மையாகவும் இடம்பெறுவதில்லையென்ற குற்றச்சாட்டுக்கள் எழுந்தவண்ணம் உள்ளன. இதனால் ஒரு பகுதி மக்கள் தமது ஜனநாயக உரிமைகளை இழந்து நிற்கின்றனர். மேலும் விலைவாசி உயர்வினால் அனைத்துத் தரப்பு மக்களும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். இத்தவிட குடும்ப ஆட்சி தலை தூக்கியுள்ளதால் ஊழலும், மோசடிகளும் அதிகரித்துவிட்டன. இதைத் தட்டிக் கேட்பவர்கள் அச்சுறுத்தப்படுகின்றனர் அல்லது பொய்க் குற்றச்சாட்டுக்களின் பேரில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்படுகின்றனர். பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படும் ஒருவரை 18 மாதகாலம் எந்தவித விசாரணையுமின்றித் தடுத்து வைக்கும் நடைமுறை இங்கு நிலவுவதால் அரசுக்கு எதிராகக் கருத்துத் தெரிவிப்பவர்கள் நீண்ட காலம் தடுத்து வைக்கப்படுகின்றனர். இது தொடர்பாக மனித உரிமைகள் அமைப்புக்களும், ஆர்வலர்களும் என்னதான் குரல் எழுப்பினாலும் இலங்கை அரசின் காதுகளில் அவை கேட்பதாகத் தெரியவில்லை.

இந்த நிலையில் ஜனநாயக சக்திகள் யாவும் ஒன்றிணைந்து ஆட்சி மாற்றம் ஒன்றை ஏற்படுத்துவதற்கான தருணம் இப்போது வாய்த்துள்ளது. ஒரு நாட்டின் ஆணிவேராக ஜனநாயகமே திகழ்கின்றது.

இதற்கு ஊறுவிளைவிக்கப்படுவதை ஜனநாயக சக்திகள் ஒரு போதுமே அனுமதிக்கக் கூடாது. ஜனநாயக வழியில் இதற்கான செயற்றிட்டங்கள் வகுக்கப்பட்டு நல்லதொரு ஆட்சி அமைக்கப்படவேண்டும். அதில் இனம், மதம், மொழி ஆகிய வேறுபாடுகள் களையப்படவேண்டும். நல்லாட்சி மலர்வதால் மகிழ்ச்சியடைவது சகல இன மக்களும் தான்.



மனம் திறக்கிறார் வண வட்டரக்க விஜித தேரர்

# உயிரைக் காப்பாற்றிக் கொள்வதே முக்கிய வேலையாக உள்ளது

டெய்லி மிரர் பத்திரிகையிலிருந்து தமிழ் வடிவம் -வீ.கே.ஆர்.

தற்போது எனது வாழ்க்கை ஆபத்தான தொரு கட்டத்தில் உள்ளது. இவ்வாறு மனம் வெதும்பியவாறு தெரிவித் திருக்கிறார் வண.வட்டரக்க விஜித தேரர். கொழும்பிலிருந்து வெளியாகும் பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

நான் சிலாபம் மருத்துவமனையில் சத்திர சிகிச்சை ஒன்றுக்கு உட்பட்டிருந்தேன். இத னால் உடல் பலவீனமான நிலையில் காணப் படுகின்றது.

**கத்தியைக் கொண்டு சென்றது உண்மைதான்**

மேலும் நான் மஹியங்கனை பிரதேச சபைக்கூட்டத்துக்குச் செல்லும் போது நீண்ட கைப்பிடியைக் கொண்ட கத்தியொன்றைக் கொண்டு சென்றது உண்மைதான். இதற்கு ஒரு காரணமும் உண்டு. பிரதேச சபைக் கூட்டத்துக்குச் செல்லும் போது எனது பல வீனமான உடல்நிலையைக் கருத்தில் கொண்டு கைத்தடியொன்றை காருக்குள் வைக்குமாறு பையன் ஒருவனிடம் கூறி னேன்.

ஆனால் அவன் தவறுதலாகக் கைத்தடிக்கு அருகிலுள்ள நீண்ட கைப்பிடியைக் கொண்ட கத்தியொன்றை வைத்துவிட்டான். இந்தக் கத்தியால் சில வகை மருந்துப் பொருள் களைத் தயாரிப்பதற்கு உதவக்கூடிய மரப் பட்டைகளை வெட்டி எடுப்போம். அத்துடன் சிலவேளைகளில் கைத்தடியாகவும் நான் இதனைப் பயன்படுத்துவேன்.

இந்த நிலையில் நான் மஹியங்கனை பிரதேச சபைக் கூட்டத்துக்குச் செல்லும் போது இதனையும் என்கூட எடுத்துச் சென்றேன். ஆனால் நான் பிரதேச சபை வளாகத்தினுள் பிரவேசித்த போது அங்கு காவலுக்கு நிறுத் தப்பட்டிருந்த பொலிஸார் அந்தக் கத்தியை என்னிடமிருந்து எடுத்து விட்டனர்.

கடந்த காலங்களில் வேடர் இனத்தவர்கள் இங்கு வரும்போது கோடரியொன்றைத் தமது தோளில் ஏந்தி வருவதை அவதானித் துள்ளேன். ஆனால் இது தொடர்பாகப் பத்திரி கைகள் அலட்டிக் கொள்வதில்லை. மேலும் எனது சோர்ந்த உடல்நிலை காரணமாகவே இதை எடுத்துச் சென்றேன்.

**வதந்திகளில் உண்மையில்லை**

நான் எனது பிரதேச சபை உறுப்பினர் பத வியை இழந்துவிட்டதாக வதந்திகள் பரவி யுள்ளன. ஆனால் இவை தவறானவை

தற்போது பிரதேச சபைக் கூட்டத்துக்கு நீண்ட கைப்பிடியைக் கொண்ட கத்தி யுடன் சென்றதும் விளம்பரம் தேடுவதற்கான முயற்சிகளே என்று கேட்ட போது; இதற்கான அவசியம் எனக்கு இல்லை. நான் ஏற்கனவே பிரபல்யம் பெற்ற ஒருவனாகவே உள்ளேன். பொதுபல சேனாவின் ஞானசார தேரரே தமக்கு மலிவான விளம்பரம் கிடைக்க வேண்டும் என்பதற்காக அலைந்து திரிகின்றார். மேலும் அமைச்சர்கள் சிலரின் நற் பெயருக்கும் அவர் களங்கத்தை ஏற்படுத்தி வருகின்றார். அமைச்சரொருவர் போதைப் பொருள்களைக் கடத்துவ தாகவும் இவர் கூறுகின்றார். ஆனால் அதற்கான ஆதாரங் களை இன்னமும் அவரால் வெளியிட முடியவில்லை.

என்பதைத் தெரிவிக்கின்றேன். கடந்த எட்டு மாதங்களில் இரண்டாவது தடவையாகப் பிரதேச சபைக் கூட்டத்தில் கலந்துகொண் டேன். கடந்த ஏப்ரல் 22ஆம் திகதி முதல் தடவையாகப் பிரதேச சபைக் கூட்டத்தில் நான் கலந்து கொண்டேன் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த நிலையில் பொதுபல சேனாவைச் சேர்ந்தவர்கள் என்னைப்பற்றிய குழப்பமான தகவல்களை வேண்டுமென்றே வெளியிட்டு வருகின்றனர்.

இதேவேளை- தாம் பிரதேச சபைக் கூட்டத்துக் குச் சென்றபோது தமக்கு உற்சாகமான வர வேற்புக் கிடைத்தாகத் தெரிவிக்கும் வட்டரக்க தேரர், தம்மீது கை வைப்பதற்கு மஹியங் கனையில் எவருமில்லையெனவும் கூறினார். சுமார் இரண்டு மாதங்களுக்கு முன்னர் பாணந்துறையிலுள்ள கிரான பாலத்துக்கு அருகில் போலியானநாடகமொன்றை அவர் அரங்கேற்றியதாகக் கூறப்படுகின்றமை தொடர்பாகக் கேட்டபோது: அங்கு நடந்தது தொடர்பாகத் தவறான செய்திகளே வெளிவந் துள்ளன. நான் எவ்வாறு என்னைக் காயப் படுத்திக்கொள்ள முடியும்? நான் எவ்வாறு வீதியோரத்தில் உடைகள் எதுவுமின்றிப் படுத் திருக்க முடியும்? உண்மைகள் யாவும் என்றோ ஒருநாள் வெளியில் வந்தே தீர வேண்டும் என்றார்.

**20 வருடங்களுக்கு முன்னரே அரசியலில்**

நான் சுமார் 20 வருடங்களுக்கு முன்னர் அரசியலில் பிரவேசித்தேன். மறைந்த தலைவர் அஷ்ரப்புடன் இணைந்து தேசிய ஐக்கியத்துக்கான கூட்டமைப்பு என்ற கட்சியொன்றை அமைக்கவே விரும்பினேன். மேலும், 2000ஆம் ஆண்டு இடம்பெற்ற மஹியங்கனைப் பிரதேச சபைத் தேர்தலில் சுயேச்சைக் குழுவொன்றுக்குத் தலைமை தாங்கிப் போட்டியிட்டேன். ஆனால் சொற்ப வாக்குகளால் தோல்வி அடைந்தோம். பின்னர் 2011 ஆம் ஆண்டு இடம்பெற்ற தேர்தலில் போட்டியிட்டு நான் பிரதேச சபை உறுப்பி னராகத் தேர்ந்தெடுக்கப்பட்டேன்.

புத்த சாசனம், ஜனநாயக மரபுகளின் பிரகாரமே உருவாக்கப்பட்டுள்ளது. சிலர் மஹியங் கனையில் உள்ள பிக்குமார்கள் எனக்குத் தண்டனை வழங்கியதாகக் கூறித் திரிகின் றனர். எனக்குத் தண்டனை வழங்குவ தென்றால் முதலில் என்னிடம் குற்றப் பத்திரம் வாசித்துக் காட்டப்பட்ட பின்னர் அதனை என்னிடம் சமர்ப்பித்தல் வேண்டும். அதன் பின்னர் எனது பக்க நியாயங்களை எடுத்துக் கூறும் பொருட்டு ஒரு சந்தர்ப்பம் வழங்கப் படுதல் வேண்டும். ஆனால் எதுவுமே நடக்க வில்லை. இதற்கு மாறாக பொதுபல சேனா புத்த சாசனத்தையே அழித்துவிட்டது. நான் தலை மறைவாக வாழ்ந்த அந்த ஒருவருட காலத்தில் மஹாநாயக்க தேரரைச் சென்று பார்க்க வில்லை. தற்போதும் தலைமறைவு வாழ்க் கைதான் வாழ்ந்து வருகின்றேன்.

**உயிருக்கு அச்சுறுத்தல்**

எனது உயிருக்குக் குறைந்தது 15 தடவை களாவது அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் முதல் தடவையாக கொலை அச்சுறுத்தல் விடுக்கப் பட்டது. இதனால் என்னால் எங்குமே சுதந்திர மாகச் செல்ல முடியவில்லை. நான் அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் அலுவலகத்தில் ஒரு போதுமே ஒளிந்திருக்கவில்லை. மஹியங்க னையில் உள்ள வழிபாட்டுத் தலம் ஒன்றி லேயே அடைக்கலம் புகுந்திருந்தேன்.

**எங்குமே செல்ல முடியாத நிலை**

தற்போது நான் மஹியங்கனைக்கு மட்டுமல்ல வேறு எங்குமே செல்ல முடியாத நிலையில் உள்ளேன். பொதுபல சேனாவைச் சேர்ந்த குண்டர்கள் என்னை நிழலாகப் பின் தொடர் வதால் இந்த அவலநிலை ஏற்பட்டுள்ளது.

மேலும், கடந்த ஜூன் 7ஆம் திகதியிலிருந்து எனக்கு வழங்கப்பட்ட பொலிஸ் பாதுகாப்பும் நிறுத்தப்பட்டுள்ளது. தற்போது ஒவ்வொரு கணமும் நான் ஆபத்தை எதிர்கொண்டுள் ளேன். நான் ஏறத்தாழ தலை மறைவு வாழ்க் கையையே வாழ்ந்து கொண்டிருக்கிறேன். எம்மால் உருவாக்கப்பட்ட ஜாதிக பல சேனா வில் சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் என மூன்று இனத்தவர்களும் அங்கம் வகிக்கின் றனர்.

தேரர் முன்பு ஒருதடவை மரம் ஒன்றின் மேல் ஏறியதும், தற்போது பிரதேச சபைக் கூட்டத் துக்கு நீண்ட கைப்பிடியைக் கொண்ட கத்தி யுடன் சென்றதும் விளம்பரம் தேடுவதற்கான முயற்சிகளே என்று கேட்ட போது; இதற்கான அவசியம் எனக்கு இல்லை. நான் ஏற்கனவே பிரபல்யம் பெற்ற ஒருவனாகவே உள்ளேன். பொதுபல சேனாவின் ஞானசார தேரரே தமக்கு மலிவான விளம்பரம் கிடைக்கவேண் டும் என்பதற்காக அலைந்து திரிகின்றார். மேலும் அமைச்சர்கள் சிலரின் நற் பெயருக்கும் அவர் களங்கத்தை ஏற்படுத்தி வருகின்றார். அமைச்சரொருவர் போதைப் பொருள்களைக் கடத்துவதாகவும் இவர் கூறுகின்றார். ஆனால் அதற்கான ஆதாரங் களை இன்னமும் அவரால் வெளியிட முடிய வில்லை.

போப்பாண்டவரின் இலங்கை வருகையின் போது பொதுபல சேனாவினர் இடையூறு களை ஏற்படுத்தி விடுவார்களோ என்ற பயமும் தற்போது ஏற்பட்டுள்ளது.

தற்போது எனது உயிரைக் காப்பாற்றிக் கொள்வதே எனது உடனடித் தேவையாகக் காணப்படுகின்றது. மேலும் எனது அரசியல் எதிர்காலம் குறித்துக் கருத்து வெளியிட வேண்டிய தருணம் இதுவல்ல என்பதையும் கூற விரும்புகின்றேன்.

**பொதுபல சேனா இன ஐக்கியத்தை அழித்து வருகின்றது**

இறுதியாக நான் ஒன்றைக்கூற விரும்புகின் றேன். பொதுபல சேனா இந்த நாட்டின் ஐக்கியத்தை அழித்து வருகின்றது.

ஞானசார தேரர் கடந்த 2000 ஆம் ஆண்டு மதுபோதையில் வாகனமொன்றைச் செலுத் திய குற்றத்துக்காக நீதிமன்றம் ஒன்றினால் தண்டனைக்கு ஆளாகியுள்ளார். மேலும் அவர் சார்ந்த பொதுபல சேனா இன, மத ரீதியான குழப்பங்களை ஏற்படுத்தி வருகின் றது-என்றார்.



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்**: உல்லாசங்களைத் குறைத்துக் கொள்வது நல்லது. கண்களில் பிரச்சினைகள் ஏற்படாமல் இருக்க கவனம் தேவை. பொதுவில் நீங்கள் உங்கள் கடமைகளைச் சரிவரச் செய்தால் நன்மைகள் அதிகமாக கிடைக்கும்.

**இடபம்**: அறிவாற்றலும் செயல்திறமையும் கூடும். வியாபாரத்தில் அபிவிருத்தி காண்னலாம். உழைப்பு வீண்போகாது. பொதுநலப் பணியாளர்களுக்கு நற்பெயர் கிடைக்கும். வெளியூர், வெளி நாட்டு தொடர்புகள் இலாபம் தரும்.

**மிதுனம்**: குடும்பத்தில் விட்டுக் கொடுத்தல் அவசியமாகிறது. கூட்டுத்தொழிலில் அதிகம் அக்கறை தேவை. கலைத்துறையினர், மாதர்கள் ஆகியோருக்கெல்லாம் இருந்து வந்த பிரச்சினைகள் விலகும். அலுவலகத்தில் வேலைப்பளு அதிகரிக்கும்.

**கடகம்**: உத்தியோகத்தர்கள் பொறுப்புடன் செயற்படுவது நல்லது. பயணத்தின்போது பொருள்களைக் கவனமாக வைத்திருங்கள். திடீர் செலவுகள் ஏற்படும். சிக்கன நடவடிக்கை அவசியம் தேவை.

**சிங்கம்**: உழைப்புக்கு முக்கியத்துவம் கொடுத்து அயராது பாடுபடுபவர்கள் அதிக பயன் பெறுவார்கள். பயணத்தால் அனுகூலம் உண்டு. பாதுகாப்பு அவசியம். உடன்பிறந்தவர்களால் அதிக நன்மைகள் ஏற்படும்.

**கன்னி**: செயலில் வேகம் பிறக்கும். அரசு சம்பந்தப்பட்ட காரியங்கள் நிறைவேறும். குடும்பத்தில் இருந்து வந்த கசப்புகள் குறையும். உத்தியோகத்தில் மேலதிகாரிகளை அனுசரித்துப் போவது நல்லது.

**துலாம்**: நிலம், வீடு, , வாகனம் போன்ற சொத்துக்கள் சேர்க்கையோ அல்லது அவற்றால் ஆதாயமோ கிடைக்கப் பெறுவார்கள். தங்கள் திறமைக்குரிய வளர்ச்சியைக் காண்பார்கள். சமுதாய நலப் பணியாளர்களுக்குப் பாராட்டுக்கள் குவியும்.

**விருச்சிகம்**: வெளியூர், வெளிநாட்டு தொடர்புகள் நன்மை தரும். இடமாற்றம், நிலைமாற்றம் ஆகியவை சிலருக்கு ஏற்படும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். எதிரிகள் அடங்கிப் போவார்கள்.

**தனுசு**: கூட்டுத் தொழிலில் ஈடுபாடு உள்ளவர்கள் அதிகம் லாபம் பெறுவார்கள். பிள்ளைகளால் சந்தோஷங்கள் கிடைக்கப் பெறுவீர்கள். அதிர்ஷ்ட வாய்ப்புகள் கைகூடி வரும். தாய் உடல் நலனில் கவனம் செலுத்தி வருவது அவசியமாகும்.

**மகரம்**: பொருளாதார சிக்கல்கள் விலகும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு குறைகள் ஏற்பட்டு மறையும். எதிலும் கவனமாக இருப்பது நல்லது. பெரியோர்களின் ஆசீர்வாதங்களைப் பெற்று எந்தக் காரியத்தையும் ஆரம்பியுங்கள்.

**கும்பம்**: முடிந்தவரை தருமப் பணியில் ஈடுபடுவது நல்லது. பெற்றோர் நலம் சிறப்படையும். கடினமாக உழைத்தால் வெற்றி நிச்சயம். கலைத்துறையில் உள்ளவர்களுக்கு உற்சாக நிலை உண்டு.

**மீனம்**: முன்விரோதம் காரணமாக ஒரு சிக்கல் வரலாம். அதனை சமாளிக்கும் ஆற்றல் உங்களுக்கு உண்டு என்பதை உணருங்கள். புதிய முயற்சிகளை ஈடுபடும்போது ஆலோசனைகளை மேற்கொள்வது நல்லது.

## நாளை

**ஆவணி-21 சனிக்கிழமை | 06.09.2014**

திதி: துவாதசி பி.ப.03.30 வரை
நட்சத்திரம்: உத்தராடம் மு.ப.10.05 வரை
சுபநேரம்: 03.04-04.34 வரை
இராகுகாலம்: 09.04-10.34 வரை

# விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



## ஆன்மா ஒன்றுதான்

மனத்தின் கருவியாக உடல் இருப்பதைப் போல, ஆன்மாவின் கருவியாக மனம் இருக்கிறது. வெளியேயுள்ள அசைவு சடப்பொருள்; உள்ளே ஏற்படும் அசைவு மனம். மாற்றங்கள் தொடங்குவதும் முடிவதும் காலத்திலேயே. ஆன்மா மாற்றம் அடைவது இல்லையெனில், அது பூரணமானதாக இருத்தல் வேண்டும். பூரணமானதானால் எல்லையற்றதாக இருத்தல் வேண்டும்; எல்லையற்றதானால் அது ஒன்றாக இருத்தல் வேண்டும். எல்லையற்ற இரண்டு பொருள்கள் இருக்க முடியாது. ஆகவே, ஆன்மா என்பது ஒன்றே ஒன்றுதான் இருக்க முடியும். அது பலவாகத் தோன்றினாலும் உண்மையில் ஒன்றுதான். சூரியனை நோக்கிச் செல்லும் ஒருவன் ஒவ்வோர் அடி எடுத்து வைக்கும் போதும், வெவ்வேறு சூரியனைக் காண்கிறான்.

ஆனாலும் உண்மையில் இருப்பது ஒரே சூரியன் தான். 'அஸ்தி.' (இருப்பு) என்பது எல்லா ஒருமைக்கும் அடிப்படை. அடிப்படை விளங்கியதும், பூரணத் தன்மை தொடர்கிறது. வண்ணங்கள் அனைத்தையும் சேர்த்து ஒரே வண்ணம் ஆக்க முடியுமானால் ஓவியம் தீட்டுவதற்கு வாய்ப்பு இல்லை. பூரணமான ஒருமை என்பது செயலற்ற நிலை. தோற்றங்கள் அனைத்தும் ஒரு பொருளின் வெளிப்பாடே என்று நாம் கூறுகிறோம். தாவோ, கன்பூசிய, பௌத்த, இந்து, யூத, முகமதிய, கிறிஸ்தவ, சொராஸ்திரிய மதங்களைச் சார்ந்தவர்கள் அனைவரும் பொன்னான விதி ஒன்றை, ஒரே மாதிரியான வார்த்தைகளால் கூறியுள்ளனர், ஆனால் இந்துக்கள் மட்டும் அதைக் காரண காரிய முறையில் கூறியுள்ளனர். ஏனெனில், அவர்களே காரணத்தைக் கண்டவர்கள்.

மனிதன் பிறரை நேசிக்க வேண்டும் என்பதற்குக் காரணம், அந்தப் பிறரும் தான் என்பதே. இருப்பது ஒன்றே.

# பின்னால் தொங்கியபடி தலை தன்னம்பிக்கை ஊட்டும் மனிதன்

பிரேஸில் நாட்டில் ஊனமுற்ற நபர் ஒருவர் மற்றவர்களை ஊக்குவிக்கும் வகையில் பேசுவது மிகவும் ஆச்சரியத்தை எற்படுத்தியுள்ளது.

பிரேஸிலின் மோண்டே சண்டோ நகரைச் சேர்ந்த க்ளாடியோ (வயது - 37) என்ற நபர் தலை பின்னால் மடங்கியும், கால்கள் மற்றும் கைகள் ஊனமுற்றும் பிறந்துள்ளார்.

மருத்துவர்கள் அவர் உயிர் பிழைக்க மாட்டார் என்று எண்ணிய நிலையில் இவர் கணக்காளர் பட்டப்படிப்பு முடித்து விட்டு மற்றவர்களை ஊக்கு விக்கும் பேச்சாளராகச் செயற் படுகிறார்.

இதுகுறித்து சண்டோ கூறுகையில்; நான் சிறு வயதிலிருந்து எனது வேலைகளை நானே செய்ய வேண்டும் என்று நினைத்தேன் என்றும் - மேலும் தொலைக் காட்சி, கைபேசி மற்றும் இணையத் தளம் என்று அனைத்தையும் உபயோகிக்க கற்றுக் கொண்டதாகவும் தெரிவித்துள்ளார். இவர், வாயில் தட்டச்சு செய்யவும், கணினி மற்றும் கைபேசியை தனது உதடுகளால் உபயோகித்து வருகிறார்.



# சுடோக்கு

## எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | | 5 | 8 | 4 | | 3 | | 9 |
| 1 | 2 | | | 9 | | | | |
| | | | | | | | 6 | 5 |
| | | | | | | 2 | | 3 |
| 8 | | 2 | 4 | 1 | 3 | 6 | | 7 |
| 9 | | 4 | | | | | | |
| 3 | 4 | | | | | | | |
| | | | | 6 | | | 7 | 8 |
| 5 | | 8 | | 7 | 4 | 9 | | 2 |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 4 | 8 | 3 | 1 | 2 | 6 | 9 | 5 |
| 9 | 3 | 1 | 7 | 5 | 6 | 8 | 4 | 2 |
| 6 | 5 | 2 | 9 | 8 | 4 | 1 | 3 | 7 |
| 5 | 1 | 6 | 4 | 3 | 7 | 9 | 2 | 8 |
| 8 | 2 | 3 | 6 | 9 | 5 | 7 | 1 | 4 |
| 4 | 7 | 9 | 8 | 2 | 1 | 3 | 5 | 6 |
| 2 | 6 | 5 | 1 | 7 | 3 | 4 | 8 | 9 |
| 1 | 9 | 7 | 2 | 4 | 8 | 5 | 6 | 3 |
| 3 | 8 | 4 | 5 | 6 | 9 | 2 | 7 | 1 |

# காளியம்பாளை வென்று சம்பியனானது சிந்து

கைதடி,செப்.5
மிக விறுவிறுப்பாக நடந்த தாச்சிச் சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டியில் தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழகத்தை மிகச் சாதூரியமாக வென்று உடுவில் ஆலடி சிந்து விளையாட்டுக்கழகம் வெற்றிக்கிண்ணத்தைக் கைப்பற்றியது.

இலங்கை வங்கி, மக்கள் வங்கி, வர்த்தக வங்கி ஆகியவற்றின் அனுசரணையுடன் யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கம் யாழ்.மாவட்ட ரீதியில் நடத்திய தாச்சிச் சுற்றுப்போட்டித் தொடரில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த பதினைந்துக்கும் மேற்பட்ட கழகங்கள் பங்கு பற்றின. கைதடி விநாயகர் விளையாட்டுக் கழக மைதானத்தில் மின்னொளியில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் தாவடி காளியம்பாள் விளை யாட்டுக் கழகமும், உடுவில் ஆலடி சிந்து விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.

போட்டியில் ஆரம்பம் தொடக்கம் இரு அணிகளும் மிக விறுவிறுப்பாகவும் அதே நேரம் புத்திசாலித் தனமாகவும் விளையாடின. இடைவேளை வரை உடுவில் ஆலடி சிந்து விளையாட்டுக் கழகம் நான்கு புள்ளிகளையும், தாவடி காளியம்பாள் மூன்று புள்ளிகளையும் பெற்றிருந்தன. இடைவேளை முடிந்து மீண்டும் போட்டிகள் ஆரம்பமானதும் இரு அணியினரும் போட்டி போட்டு மோதி புள்ளிகள் எடுக்க முயன்று இறுதியில் இரு அணிகளும் மேலதிகமாக தலா இரண்டு புள்ளிகளையே பெற முடிந்தது. போட்டி முடிவில் 6:5 என்ற புள்ளிகள் அடிப்படையில் உடுவில் ஆலடி சிந்து விளையாட்டுக்கழகம், தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழகத்தை வென்று வெற்றிக் கேடயத்தை சுவீகரித்துக் கொண்டது.

இறுதிப்போட்டிக்கு பிரதம விருந்தினர்களாக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கௌரவ ஈ.சரவணபவன், வடமாகாணக் கல்வி அமைச்சர் கௌரவ த.குருகுலராஜா ஆகியோர் கலந்து கொண்டு பரிசில்களை வழங்கினார்கள்.

மேற்படி போட்டிக்கு நடுவர்களாக யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கத்தைச் சேர்ந்த க.தயாளன், சி.ஜெயசீலன் ஆகியோர் கடமை புரிந்தனர். (ரி-288)

# தேசிய மட்டப் போட்டிக்கு கொக்குவில் இந்து மாணவர்கள்



யாழ்ப்பாணம்,செப்.5
யாழ்.மாவட்டத்திலிருந்து முதற் தடவையாக பாடசாலை ரீதியாக நடைபெறும் தேசிய மட்ட சைக்கிள் ஓட்டப் போட்டியில் பங்குபற்றுவதற்காக கொக்குவில் இந்துக் கல்லூரியின் இரு மாணவர்கள் அநுராதபுரத்திற்கு பயணமாகவுள்ளனர்.

நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை தேசியமட்டத்திலான சைக்கிள் ஓட்டப்போட்டிகள் அநுராதபுரத்தில் நடைபெறவுள்ளன. கொக்குவில் இந்துக் கல்லூரியின் அதிபர் வே.ஞானகாந்தன் மற்றும் பாடசாலை உடற்கல்வி ஆசிரியர்களான செ.குமரேசன், திருமதி என்.சிவசுப்பிரமணியம் ஆகியோரின் முயற்சியினால் நி.டிலக்சேஸ்வரன், நி.விதுஜனா ஆகிய இரு மாணவர்களும் இப்போட்டியில் பங்குபற்றுவதற்காக இன்று வெள்ளிக்கிழமை பயணமாகின்றனர். இந்த இரு வீரர்களும், புகழ் பெற்ற சைக்கிள் ஓட்ட வீரர் ம.நிர்மலேஸ்வரன் (காந்தன்) என்பவரின் பிள்ளைகள் என்பது குறிப்பிடத்தக்கதாகும். (ரி- 17)




தமிழர் பூப்பந்தாட்ட பேரவையினால் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலத்துக்கு பூப்பந்தாட்ட உபகரணங்கள் வழங்கப்பட்டன. பேரவையின் செயற்குழு உறுப்பினர் ராஜகுமாரினால் வித்தியாலயத்தின் உடற்கல்வி ஆசிரியர் சந்தரங்கனிடம், வவுனியா மாவட்ட பூப்பந்தாட்ட பயிற்றுனர் கமலன் முன்னிலையில் உபகரணங்கள் கையளிக்கப்படுவதைப் படத்தில் காணலாம். (ரி-23)

# ஆசியப் போட்டிக்கு யாழ். நடுவர்



யாழ்ப்பாணம்,செப்.5
கொழும்பில் இன்று வெள்ளிக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 13 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள 10ஆவது ஆசிய இளைஞர்களுக்கான கரப்பந்தாட்ட போட்டிக்கு மத்தியஸ்தராகக் கடமையற்ற யாழ்ப்பாணத்தை சோந்த சுதேஸ்குமார் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

வட மாகாண சிறுவர் நன்னடத்தைத் திணைக்களத்தின் நிதி உதவியாளராகக் கடமையாற்றும் இவர் யாழ். மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கம், யாழ்.மாவட்ட கரப்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தின் செயலாளராகவும் கடமையாற்றுகின்றார். (ரி-23)

# திலக்சனின் அசத்தல்; மன்னார் அணி வெற்றி



5 இலக்குகளை வீழ்த்திய மன்னார் மாவட்ட அணி வீரர் திலக்சன்

யாழ்ப்பாணம்,செப்.5
திலக்சனின் அசத்தலான பந்து வீச்சின் உதவியுடன் 6 இலக்குகள் வித்தியாசத்தில் முல்லைத்தீவு மாவட்ட அணியை வீழ்த்தியது மன்னார் மாவட்ட அணி.

பிறிமா வெற்றிக் கிண்ணத்துக்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரின் 15வயதுப் பிரிவு ஆண்களுக்கான 50 பந்துப்பரிமாற்றங்களைக் கொண்ட ஆட்டம் கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று இடம் பெற்றது. இதில் முல்லைத்தீவு மாவட்ட அணியை எதிர்த்து மன்னார் மாவட்ட அணி மோதிக் கொண்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய முல்லைத்தீவு மாவட்ட அணி 35 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 108 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. இதில் விதுசன் 30 ஓட்டங்களையும், அபோசன் 21 ஓட்டங்களையும், டினோஷன் 16 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர். பந்து வீச்சில் மன்னார் மாவட்ட அணி சார்பில் திலக்சன் 10 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 30 ஓட்டங்களுக்கு 5 இலக்குகளையும், டிலான் 5 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 13 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும், சுயான் 6 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 18 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

109 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மன்னார் மாவட்ட அணி 23 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 4 இலக்குகளை இழந்து வெற்றி இலக்கை எட்டியது. இதன் மூலம் மன்னார் மாவட்ட அணி முல்லைத்தீவு மாவட்ட அணியை 6 இலக்குகளால் வீழ்த்தியது. இதில் கிரிசாந்தன் 25 ஓட்டங்களையும், டிலான் 17 ஓட்டங்களையும், அன்ரனி 22 ஓட்டங்களையும் தமது அணி சார்பாக பெற்றனர். பந்து வீச்சில் முல்லைத்தீவு மாவட்ட அணி சார்பில் தனுசன் 7 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 30 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளைக் கைப்பற்றினார். (ரி-23)

# முத்தரப்பு கிரிக்கெட் தொடர் ஆட்ட முடிவுகள்

யாழ்ப்பாணம்,செப்.5
அளவெட்டி மத்திய விளையாட்டுக்கழகம் நடத்தும் வலி. வடக்கின் சமர் என வர்ணிக்கப்படும் முத்தரப்பு மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டித் தொடரின் ஆட்டங்களில் அளவெட்டி ஞானவைரவர் விளையாட்டுக்கழக அணியிடம் தோற்ற மல்லாகம் ஆர்.டி.எஸ் விளையாட்டுக் கழக அணி, அளவெட்டி மத்திய விளையாட்டுக்கழக அணியுடன் வெற்றி பெற்றுள்ளது.

கடந்த சனிக்கிழமை அளவெட்டி மத்திய விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்ற லீக் முறையிலான ஆட்டங்களில் முதலில் இடம் பெற்ற ஆட்டத்தில் அளவெட்டி ஞானவைரவர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மல்லாகம் ஆர்.டி.எஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. முதலில் துடுப்பெடுத்தாடிய மல்லாகம் ஆர்.டி.எஸ். விளையாட்டுக்கழக அணியினர் 15.3 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 52 ஓட்டங்களைப் பெற்றனர். இதில் சுசி 15 ஓட்டங்களையும், ராஜா 10 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் அளவெட்டி ஞானவைரவர் விளையாட்டுக்கழக அணி சார்பில் கிறக்கன் 4 இலக்குகளையும், பிரணவன் 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

53 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய அளவெட்டி ஞானவைரவர் விளையாட்டுக்கழக அணியினர் 12.3 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 7 இலக்குகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்தனர். இதன் மூலம் அளவெட்டி ஞானவைரவர் விளையாட்டுக்கழக அணி 6 இலக்குகளினால் வெற்றி பெற்றது. துடுப்பாட்டத்தில் கோபி 27 ஓட்டங்களையும், கிறக்கன் 9 ஓட்டங்களையும் தமது அணி சார்பாக பெற்றனர். பந்து வீச்சில் மல்லாகம் ஆர்.டி.எஸ். விளையாட்டுக்கழக அணி சார்பில் ரமேஸ் 3 இலக்குகளையும், ஜனா 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

இரண்டாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் மல்லாகம் ஆர்.டி.எஸ். விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அளவெட்டி மத்திய விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது. முதலில் துடுப்பெடுத்தாடிய அளவெட்டி மத்திய விளையாட்டுக்கழக அணியினர் 16.5 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும், இழந்து 76 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டனர். இதில் காந்தன் 15 ஓட்டங்களையும், சுதன் 12 ஓட்டங்களையும் தமது அணி சார்பாக பெற்றனர். பந்து வீச்சில் மல்லாகம் ஆர்.டி.எஸ். விளையாட்டுக்கழக அணி சார்பில் ரமேஸ், அஜத் ஆகியோர் தலா 2 இலக்குகளை வீழ்த்தினர்.

77 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மல்லாகம் ஆர்.டி.எஸ். விளையாட்டுக்கழக அணியினர் 14.3 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 6 இலக்குகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்தனர்.

இதன் மூலம் மல்லாகம் ஆர்.டி.எஸ். விளையாட்டுக் கழக அணி 6 இலக்குகளினால் வெற்றி பெற்றது. இதில் அஜத் 36 ஓட்டங்களையும், ரமேஸ் 12 ஓட்டங்களையும் தமது அணி சார்பாக பெற்றனர். பந்துவீச்சில் அளவெட்டி மத்திய விளையாட்டுக்கழக அணி சார்பில் சுதன், காந்தன், மதுஷன் ஆகியோர் தலா ஒரு இலக்கினை வீழ்த்தினர். (ரி-23)

# சென்.மேரிஸ்ஸை வீழ்த்திய பாடும்மீன்

யாழ்ப்பாணம்,செப்.5
டார்வினின் அதிரடி ஆட்டம் கைகொடுக்க நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணியை வீழ்த்தி சம்பியன் ஆனது குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணி.

அரியாலை சனசமூக நிலையத்தின் 65 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்ட 16 வயதுப்பிரிவு ஆண்களுக்கான உதை பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டம் நேற்று முன்தினம் புதன்கிழமை அரியாலை சனசமூக நிலைய மைதானத்தில் இடம்பெற்றது. இதில் நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இரண்டு அணியினரும் சமபலத்துடன் மோதிக் கொள்ள முதற்பாதி ஆட்டம் விறுவிறுப்பாக நடைபெற்றது. இதன்போது இரண்டு அணியினரும் தமது அணிக்கான கோல்களைப் பெற வேண்டும் என்ற எண்ணத்துடன் எதிர் அணியினரின் கோல் பரப்பினை முற்றுகையிட்டனர். இதில் சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணி வீரன் நிசாந்தன் தனது அணிக்கான முதலாவது கோலினை அடித்தார். பதிலுக்கு குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழக அணி வீரன் கொவின்சன் தனக்கு கிடைத்த சந்தர்ப்பத்தினை பயன்படுத்தி தனது அணிக்கான முதலாவது கோலினை அடித்தார். முதற்பாதி ஆட்டத்தில் இரு அணியினரும் மேலதிகமாக கோல்கள் எதுவும் பெற்றுக் கொள்ளாத நிலையில் ஆட்டம் இடைவேளைக்காக நிறுத்தப்பட்டது.

இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பமான போது இரண்டு அணியினரும் தமது அணிக்கான வெற்றிக் கோல்களைப் பெற்றிட வேண்டி தமது ஆட்ட வியூகங்களை மாற்றிக் களமிறங்கினர். இதன் போது சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணி வீரன் நிதர்சன் நேர் உதை மூலம் கோல் ஒன்றினைப் பெற்றுக் கொடுத்தார். பதிலுக்கு குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழக அணி வீரன் டார்வின் அடுத்தடுத்த 2 கோல்களை அடித்து தனது அணியை முன்னிலைப்படுத்தினார்.

ஆட்டநேர முடிவில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணி 3:2 என்றகோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ரி-23)




# விருதுகளை வென்று குவித்த மத்தியூஸ்

2014 ஆம் ஆண்டுக்கான கிரிக்கெட் விருது வழங்கும் நிகழ்வில், 2014ஆம் ஆண்டுக்கான சிறந்த வீரருக்கான விருது உட்பட நான்கு விருதுகளை வென்றார் இலங்கை அணித்தலைவர் அஞ்சலோ மத் தியூஸ்.

இந்த ஆண்டுக்கான 'டயலொக் இலங்கை கிரிக்கெட் விருதுகள்' நிகழ்வு நேற்று முன்தினம் பத்தர முல்லவில் உள்ள ஒரு தனியார் விடுதியில் நடைபெற்றது.

இதில் இந்த ஆண்டுக்கான சிறந்த வீரர் விருதை டெஸ்ட் மற்றும் ஒருநாள் ஆட்டங்களில் அணித் தலைவராக உள்ள அஞ்சலோ மத்தியூஸ் வென்றார். ஒருநாள் மற்றும் டெஸ்ட் ஆட்டங்களில் அசத்தி வரும் சங்கக்காரா மக்கள் விருப்ப வீரருக்கான விருதினை வென்றார். இதேவேளை ரி- 20 ஆட்டங்களில் சிறந்த துடுப்பாட்ட வீரருக்கான விருதுக்காக குசால் பெரேராவும், சிறந்த பந்து வீச்சாளருக்கான விருதுக்கு லசித் மலிங்கவும் தெரிவு செய்யப்பட்டனர்.

ஒருநாள் ஆட்டங்களில் சிறந்த துடுப் பாட்ட வீரருக்கான விருதினையும், சிறந்த சகலதுறை வீரருக்கான விருதினையும் அஞ்சலோ மத்தியூஸ் வென்றெடுத்தார். சிறந்த பந்து வீச்சாளராக லசித் மலிங்க தெரி வானார்.

டெஸ்ட் ஆட்டங்களில் சிறந்த வீர ருக்கான விருதினை மத்தி யூஸுக்கும், சங்கக்காரவுக்கும் இணைத்து வழங் கப்பட்டது. பந்து வீச்சாளருக்கான விருதினை ரங்கண ஹேரத் பெற்றுக் கொண்டார். வளர்ந்து வரும் கிரிக்கெட் வீரர் விருது இளம் வீரர் நிரோசன் டிக்வெல்லவுக்கு வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் பெண்கள் அணிக்கான விருதுகள், உள்ளூர் தொடர்களுக் கான விருதுகள் மற்றும் நடுவர்களுக் கான விருதுகள் போன்றனவும் வழங்கப்பட்டன.

இந்த விருது வழங்கும் நிகழ்வில் இலங்கையின் விளையாட்டுத்துறை அமைச்சர் மகிந்தானந்த அளுத் கமகே பங்குபற்றி விருதுகளை வழங்கினார். (ரி)



# இந்தியா முன்னிலை வகிக்கும் சச்சின்

ஒருநாள் ஆட்டங்களில் இந்திய அணியை வீழ்த்துவது கடினம். ஆகவே வரும் உலகக் கிண்ண கிரிக்கெட்டில் சம்பியன் பட்டம் வெல்லும் அணிகளில் இந்தியா முதன்மையாக இருக்கும் என்று சச்சின் டெண்டுல்கர் கூறியுள்ளார். சொகுசுக் கார் ஒன்றின் விளம் பரத்துக்காகச் சென்னை சென்ற சச்சின் டெண்டுல்கர் ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு கூறியதாவது:- நான் இந்த இந்திய அணியில் உள்ள வீரர்களை நன்றாக அறிவேன். அவர்கள் திறமை என்ன என்பது எனக்குத் தெரி யும். டெஸ்ட் ஆட்டங்களில் இந்திய அணி நிச்சயம் மீண்டும் எழுச் சியுறும். நான் விடயங்களை தன்னம்பிக்கையான மனோ நிலையில் அணுகுபவன். ஒரு நாள் ஆட்டங்களில் இந்திய அணி எப்படி ஆடுகிறது என்று பாருங் கள். போராடும் குணத்தை வெளிப்படுத்துகின்றனர். ஆதிக் கம் செலுத்துகின்றனர். வரும் உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரில் சம்பியன் பட்டம் வெல் லும் அணிகளில் இந்தியாவுக்குப் பலமான இடம் உள்ளது. இந்த அணியில் சமச்சீரான தன்மை உள்ளது. இது பலதிறமை கொண்ட இந்திய ஒருநாள் அணியாகும். துடுப்பாட்டத்தில் நுணுக்கங்கள் உள்ளன. பந்து வீச்சிலும் பல் வகைத் தன்மை உள்ளது. களத் தடுப்பு அபாரமாக இருக்கிறது இவ்வாறு சச்சின் கூறினார். (ரி)

# கிளார்க் சந்தேகம்

அடுத்த மாதம் ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடைபெறவுள்ள பாகிஸ் தானுக்கு எதிரான தொடரில், ஆஸ்திரேலிய அணித் தலைவர் மைக்கல் கிளார்க் விளையாடுவது சந்தேகமாகியுள்ளது. தொடைப் பகுதியில் ஏற்பட்ட காயம் காரணமாகவே அவருக்கு இந்த நிலைமை ஏற்பட்டுள் ளது.

ஒக்ரோபர் மாதம் ஐக்கிய அரபு இராச்சியத்தில் ஆஸ்திரேலியா, பாகிஸ்தான் அணிகள் ஒருநாள் மற்றும் டெஸ்ட் தொடர்களில் பங்கேற்கவுள்ளன. இந்தத் தொடருக்கான ஆஸ்திரேலிய அணியில், அணித்தலைவர் மைக்கேல் கிளார்க் விளையாடுவது சந்தேகமாக உள்ளது. சிம்பாப்வேயில் நடக்கும் முத்தரப்பு ஒருநாள் தொடரின் போது, தொடையின் பின்பகுதியில் காயமடைந்த மைக்கல் கிளார்க், முதலிரண்டு ஆட்டங்களில் பங்கேற்கவில்லை. பின்னர் சிம்பாப்வே அணிக்கு எதிரான மூன்றாவது ஆட்டத்தில் விளையாடியிருந்தார். அந்த ஆட்டத்தின் பின்பு தொடரின் பாதியிலேயே நாடு திரும்பினார். தற்போது இவருக்கு எம்.ஆர்.ஐ. ஸ்கான் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் முடிவைப் பொறுத்தே பாகிஸ்தானுக்கு எதிரான தொடரில் விளை யாடுவது முடிவு செய்யப்படும் எனத் தெரியவருகிறது. (ரி)





# அரையிறுதியில் வோஸ்னியாக்கி

அமெரிக்க ஓபன் ரென்னிஸ் போட்டியில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் கரோலின் வோஸ்னியாக்கி, சூய் பெங் ஆகியோர் அரையிறுதிக்கு முன்னேறினார்கள். அதேவேளை ஏற்கனவே, கலப்பு இரட்டையர் பிரிவில் அரையிறுதிக்கு தகுதி பெற்றிருந்த சானியா, பெண்கள் இரட்டையர் பிரிவிலும் அரையிறுதியை எட்டினார்.

இந்த ஆண்டின் கடைசி கிராண்ட்ஸ்லாம் போட்டியான அமெரிக்க ஓபன் ரென்னிஸ் போட்டி நியூயோர்க்கில் நடைபெற்று வருகிறது. இந்தத் தொடரின் பெண்கள் ஒற்றையர் பிரிவின் காலிறுதி ஆட்டம் ஒன்றில் டென்மார்க்கின் கரோலின் வோஸ்னியாக்கி இத்தாலி வீராங்கனை சாரா எர்ரானியை சந்தித்தார். 65 நிமிடங்கள் நடந்த இந்த ஆட்டத்தில் கரோலின் வோஸ்னியாக்கி 6-0, 6-1 என்ற நேர் செற்றில் எளிதில் சாரா எர்ரானியைத் தோற்கடித்து அரையிறுதிக்கு முன்னேறினார். 2011ஆம் ஆண்டு அமெரிக்க ஓபனுக்கு பின்னர் வோஸ்னியாக்கி கிராண்ட்ஸ்லாம் போட்டியில் அரையிறுதிக்குள் நுழைவது இதுவே முதல்முறையாகும். மற்றொரு காலிறுதி ஆட்டத்தில் சீன வீராங்கனை சூய் பெங் 6 -2, 6-1 என்ற நேர்செற் கணக்கில் சுவிட்ஸர்லாந்தின் பிளின்டா பென்சிச்சை வீழ்த்தி அரையிறுதிக்குள் அடியெடுத்து வைத்தார். 10 ஆண்டுகளாக கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் களம் கண்டு வரும் சூய் பெங் கிராண்ட்ஸ்லாம் போட்டியில் முதல்முறையாக அரையிறுதிக்கு தகுதி பெற்றுள்ளார். அரையிறுதியில் வோஸ்னியாக்கி - சூய் பெங் மோதுகிறார்கள்.

ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நான்காவது சுற்று ஆட்டம் ஒன்றில் சுவிட்ஸர்லாந்தின் ரோஜர் பெடரர் 6 -4, 6- 3, 6-2 என்ற நேர்செற் கணக்கில் ஸ்பெயினின் ராபர்டோ பாடிஸ்டாவைத் தோற்கடித்து காலிறுதிக்கு முன்னேறினார். 17 கிராண்ட்ஸ்லாம் ஒற்றையர் பட்டங்கள் வென்றுள்ள பெடரர் 11 ஆண்டுகளில் 10ஆவது முறையாக அமெரிக்க ஓபனில் காலிறுதியை எட்டி இருக்கிறார். மற்றொரு ஆட்டத்தில் பிரான்ஸ் வீரர் மான்பில்ஸ் 7 - 5, 7- 6, 7 - 5 என்ற நேர்செற்றில் பல்கேரிய வீரர் டிமித்ரோவ்வை சாய்த்து காலிறுதிக்குத் தகுதி பெற்றார். காலிறுதியில் பெடரர்மான்பில்ஸ் சந்திக்கிறார்கள். இன்னொரு ஆட்டத்தில் குரோஷிய வீரர் மரின் சிலிச் 5 -7, 7 - 6, 6 - 4, 3 - 6, 6 - 3 என்ற செற் கணக்கில் பிரான்ஸ் வீரர் ஜிலெச் சிமோனை போராடி தோற்கடித்து காலிறுதிக்குள் அடியெடுத்து வைத்தார்.

பெண்கள் இரட்டையர் பிரிவில் காலிறுதி ஆட்டம் ஒன்றில் காரா பிளாக் - சானியா மிர்சா ஜோடி ஜரினா டியாஸ் - பான் சூ ஜோடியைச் சந்தித்தது. இதில் சானியா - காரா பிளாக் ஜோடி 6 - 1, 1 - 0 என்ற செற் கணக்கில் முன்னிலையில் இருந்த போது எதிர் ஜோடி காயத்தால் விலகியதால் சானியா மிர்சா ஜோடி வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டு அரையிறுதிக்கு முன்னேறியது. அரை இறுதியில் சானியா மிர்சா - காரா பிளாக் ஜோடி, மார்டினா ஹிங்கிஸ் - பிள வியா பென்னட்டா ஜோடியை எதிர்கொள்கிறது. கலப்பு இரட்டையர் பிரிவிலும் சானியா ஜோடி அரையிறுதிக்கு தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரி)

# வீரர்களின் உரையாடல் தொடர்பில் விசாரணை

இலங்கைக்கு எதிரான ஒரு நாள் தொடரின் போது பாகிஸ்தான் வீரர் செஷாட் இலங்கை வீரர் டில்சானிடம் இஸ்லாம் மதம் பற்றி கூறியது பற்றி விசாரணை மேற்கொள்ளப் பட்டுள்ளது.

இலங்கைக்கு எதிரான ஒரு நாள் போட்டியின் போது பாகிஸ்தான் வீரர் அகமட் செஷாட் இலங்கை வீரர் திலகரட்ண டில்சானிடம் இஸ்லாமிய மதம் பற்றிக் கூறியது என்ன என்பதை பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியம் விசாரித்து வருகிறது.

இது குறித்து செய்தி நிறுவனம் ஒன்று வெளியிட்டுள்ள செய்தியில் :

கடந்த சனிக்கிழமை நடந்த ஒருநாள் ஆட்டம் முடிந்தவுடன் பவிலியன் நோக்கி இரு அணி வீரர்களும் திரும்பி வந்து கொண்டிருந்தனர். அப்போது பாகிஸ்தான் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் அகமட் செஷாட், இலங்கை வீரர் டில்சானிடம் இஸ்லாம் பற்றிக் கூறியது வீடியோவில் பதிவாகியுள்ளது.

குறித்த வீடியோ பதிவில், முஸ்லிம் அல்லாத நீங்கள், முஸ்லிமாக மாறிவிட்டால், வாழ்க்கையில் நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்பது முக்கியமல்ல, நேராக சொர்க்கம்தான் என்று செஷாட் கூறியதாகத் தெரிகிறது. இதற்கு டில்சான் என்ன பதில் கூறினார் என்பது சரியாகக் கேட்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. செஷாட் எதற்காக இதனைக் கூறினார் என்று அவரிடம் கேட்டபோது, நானும் டில்சானும் தனிப்பட்ட ரீதியில் பேசிக்கொண்டோம் என்று கூறியுள்ளார்.

இதனையடுத்து, இந்த விவகாரம் தொடர்பில் பாகிஸ்தான் கிரிக்கெட் சங்கம் விசாரணை செய்து வருகிறது. (ரி)

**வீடு வாடகைக்கு**

இல.7, சோமசுந்தரம் அவனியூ சுண்டுக்குளியில் அமைந்துள்ள வீடு வாடகைக்கு உண்டு. அரச, அரசசார்பற்ற தனிநபர் நிறுவனங் கள் விரும்பத்தக்கது. (51733)

**தொடர்பு-0212228936**

# மரண அறிவித்தல்

## இரத்தின சபாபதி மாணிக்கம்



வட்டுக்கோட்டையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தின சபாபதி மாணிக்கம் சிவபதம் அடைந்து விட்டார்.

அன்னார் வட்டுக்கோட்டை ஆத்தியடிப் பிள்ளையார் கோவில் தர்மகர்த்தாவும் காலம் சென்ற செல்லப்பா வள்ளியம்மை தம்பதிகளின் அருமை மகளும் காலம் சென்ற இரத்தினசபாபதியின் அன்பு மனைவியும் காலம் சென்ற சபாரத்தினம் சண்முகநாதன் (பொறியியலாளர்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் நேசமலர் கமலாதேவி (U.k) யோகநாதன் (பொறியியலாளர்) சிங்கப்பூர்) லீலாதேவி, விமலா தேவி, ஆகியோரின் அன்புத் தாயாரும் சோபனா (U.k) வின் வளர்ப்புத் தாயாரும், காலம் சென்ற சண்முகநாதன், செல்வகுணச்சந்திரன் (U.k) முன்னாள் மகாஜனக் கல்லூரி ஆசிரியர்) புஸ்பம் (சிங்கப்பூர்) ஆகியோரின் மாமியாரும், நாகரஞ்சினி கணக்காளர் (சிங்கப்பூர்) துளசிகாந் (பொறியியலாளர்(U.k)) மயூரன், அபியித் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 07.09.2014 ஞாயிற்றுக்கிழமை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வழுக்கியாறு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**ஆத்தியடி பிள்ளையார் கோவிலடி,**
**வட்டு தென்மேற்கு,**
**வட்டுக்கோட்டை.**

தகவல்
**குடும்பத்தினர்.**

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

CEYLON THEATRES
**இப்பொழுது திரையில்**
**MAJESTIC CINEMA - CARGILLS SQUARE**
(Opposite Jaffna Teaching Hospital)



**Platinum** 10.30am, 2.30pm, 6.30pm



**Silver** 10.15am, 2.15pm, 6.15pm




**Bronze** 10.30am, 2.30pm, 6.30pm

விசாரணை ☎ 021-2227712

www.facebook.com/CeylonTheatres www.ceylontheatres.com

# கொள்முதல் அறிவித்தல்

**இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சு**

**தேசிய பயிலுனர் மற்றும் தொழிற்சார் பயிற்சி அதிகார சபை**

**யாழ்ப்பாணத்தில் பயிற்சி நிலைய கட்டிடமொன்றை கட்ட முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இந்த அதிகார சபையின் கொள்முதல் குழுவின் தலைவர் கோரப்படுகின்றார்.**

| இல. | ஏல இல. | பணியின் விபரம் | ICTAD பதிவுவகை | மீளக் கொடுக்கப் படாத ஏல ஆவணக் கட்டணம் | ஏல உத்தரவாத கட்டணம் | ஏலத்தை மூடப்படும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|---|
| 01 | NAITA/ cons/ 2014/06 | முன்மொழியப் பட்ட NAITA பயிற்சி நிலையத்தின் கட்டுமானப் பணி | C6 அல்லது அதற்கு மேல் | ரூ. 4000.00 | ரூ.200,000 | 2014 செப்டெம்பர் 23 ஆம் திகதி 2.30 மணி |

ஏலத்தில் பங்குபெற விரும்புவோர் எழுதப்பட்ட கோரிக்கை கடிதத்துடன் பின்வரும் முகவரியில் ஏல ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம். மேற்குறிப்பிட்டபடி ரூ.4000 மீளக் கொடுக்கப்படாத கட்டணத்தைக் குறிப்பிட்ட முகவரியில் அமைந்துள்ள பணம் செலுத்துமிடத்தில் 2014 செப்டெம்பர் 22 ஆம் திகதிக்கு முன் அல்லது அத் திகதியில் பெற்றுக்கொள்ளலாம்.

அனைத்து விலைமனுக்களையும் பின்வரும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பவேண்டும். தலைவர், கொள்முதல் குழு, தேசிய பயிலுனர் மற்றும் தொழிற்சார் பயிற்சி அதிகார சபை, 971, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை, வெலிக்கடை, இராஜகிரிய. இல்லாவிடில், கீழ் குறிப்பிடப்பட்ட நிதிப் பணிப்பாளர் அலுவலகத்தில் ஏலபெட்டியில் இடலாம்.

ஏல ஆவணங்களுடன் மத்திய வங்கி அங்கீகாரம் பெற்ற நிதிநிறுவனம் அல்லது வங்கியால் எடுக்கப்பட்ட மேற்குறிப்பிட்ட ஏல உத்தரவாதக் கட்டணமும் தரப்படவேண்டும்.

மேற்குறிப்பிட்ட திகதியில் மற்றும் நேரத்தில் ஏலம் நடாத்தப்படும். ஏலத்தைத் தொடங்கு முன் ஏலத்தில் பங்குபெறுவோர் அல்லது பிரதிநிதிகள் அவ்விடத்தில் பிரசன்னமாயிருத்தல் அவசியம்.

குறிப்பிட்ட திகதிக்கு பின் கிடைக்கப்படும் கோரல்கள் நிராகரிக்கப்படும்.

**தலைவர்,**
**கொள்முதல் குழு,**
**தேசிய பயிலுனர் மற்றும் தொழிற்சார் பயிற்சி அதிகார சபை,**
**இல. 971,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை,**
**வெலிக்கடை,**
**இராஜகிரிய.**

# யா/ மல்லாகம் மகா வித்தியாலயம்

**பழைய மாணவர் சங்கம்**
**ஆண்டுப் பொதுக்கூட்டம் -2014**

இடம் :- பாடசாலை மண்டபம்
காலம் :- 14.09.2014 (ஞாயிற்றுக்கிழமை) காலை 9.00 மணி

அனைத்துப் பழைய மாணவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம். ( புதிய அங்கத்தவர்கள் சந்தா செலுத்தி தமது அங்கத்துவத்தை உறுதிப்படுத்திக் கொள்ளவும்)

**தலைவர் / அதிபர்**
**பழையமாணவர் சங்கம்.**
**யா/மல்லாகம் மகா வித்தியாலயம்.** **செயலாளர்.**

# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை
திருமதி வேல் நாயகம் செல்வராணி
அவர்களின் அன்புத் தாயார்
**திருமதி கந்தையா தங்கம்மா**

அவர்கள் 02.09.2014 அன்று சிவபதம் அடைந்ததையிட்டு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அவரின் ஆத்மசாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

(51730)

**ஆசிரியர் நலன்புரி சங்கம்,**
**யா/விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயம்.**

# மரண அறிவித்தல்

## கந்தையா கிருஷ்ணபிள்ளை (நயினாதீவு)



நயினாதீவைப் பிறப்பிடமாகவும், கிளிநொச்சி ஜெயந்திநகரை வசிப்பிடமாகவும் தற்போது கிளிநொச்சி புதுமுறிப்பை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா கிருஷ்ணபிள்ளை 03.09.2014 புதன் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா-சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சுப்பிரமணியம்-வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மருமகனும், சரஸ்வதியின் அன்புக் கணவரும், தவமலர் (ஜேர்மனி), தயாபரன்(சுவிஸ்), தயாளினி (கிளிநொச்சி), பகீரதி (சுவிஸ்), காலஞ்சென்ற ஜெயக்குமார் மற்றும் பிரதீபன் (ஆஸ்திரேலியா), கிருபாகரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற நடராசா மற்றும் பரமலிங்கம் (சுவிஸ்), இரத்தினசிங்கம் (பிரான்ஸ்), கனகரெத்தினம் (நயினாதீவு), புஸ்ப ராணி (பிரான்ஸ்), பாலசுப்பிரமணியம் (நயினாதீவு) ஆகியோரின் அன்புச் சகோதரரும், தவராஜா (ஜேர்மனி), சாந்தினி(சுவிஸ்), சூரியகுமார்(கிளிநொச்சி), கணேஷ்வரன்(சுவிஸ்), கௌசி(கிளிநொச்சி), பவித்திரா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனும், நித்தியலட்சுமி, கனகரெத்தினம், கனகசபாபதி, வாலாம்பிகை (கிளிநொச்சி), குணரட்ணம் (சுவிஸ்), பாலசிங்கம், யோகேஷ்வரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், நிருஸன் (பிரான்ஸ்), பிரசாந்தன் (கொழும்பு), லவேந்திரன் (ஜேர்மனி), தர்சன் (சுவிஸ்), மயூரன் (சுவிஸ்), சாரங்கன் (சுவிஸ்), தனுசியா, அனுசியா, யசோதரன் (கிளிநொச்சி), [illegible] ஜெனனி (சுவிஸ்), ஜெனாத் (சுவிஸ்), ஜெனித் (சுவிஸ்), டுசாளினி, ஜிகள்யா (கிளிநொச்சி), தமிழ்த்தென்றல் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.09.2014) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 2 மணியளவில் தகனக்கிரியைக்காக புதுமுறிப்பு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

**புதுமுறிப்பு,**
**(விக்கினேஷ்வரா பாடசாலை**
**அருகில்) கிளிநொச்சி.** (51739) (10)

தகவல்: **குடும்பத்தினர்.**
077 783 2757,
077 138 1897

# கொள்ளையில் ஈடுபட்ட இருவர் சம்மாந்துறை பொலிஸ் வலையில்

மட்டக்களப்பு செப்.5

அம்பாறை மாவட்டத்தின் சம்மாந்துறைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சம்மாந்துறை பிரதேசத்தில் நீண்ட காலமாக கொள்ளைச் சம்பவத்தில் ஈடுபட்டு வந்த இருவர் நேற்று சம்மாந்துறைப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிடமிருந்து களவாடப்பட்ட பெறுமதிமிக்க எல்.சீ.டீ தொலைக்காட்சிப் பெட்டிகள், லப்டொப் கணனிகள், ஐ பாட், தங்க நகைகள், கைய டக்க தொலைபேசிகள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.


கோப்புப்படம்

கைது செய்யப்பட்டவர்கள் இருவரும் சம்மாந்துறைப் பிரதேசத்தை சேர்ந்தவர்கள் எனவும் அதிலும் பிரதான சந்தேக நபர் சம்மாந்துறைப் பிரதேசத்தை பிறப்பிடமாகவும் பிபிலை பிரதேசத்தை வாழ்விடமாகவும் கொண்டவர் என சம்மாந்துறைப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜயந்த தஹனக்கவுக்குக் கிடைத்த தகவலை அடுத்து பெருங் குற்றவியல் பிரிவு பொறுப்பதிகாரி ஐ.பீ. பத்மசிறி தலைமையில் சென்ற உத்தியோகத்தர்கள் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போதே இவர்கள் இருவரும் பிடிபட்டுள்ளனர்.

இதுவரைக்கும் சம்மாந்துறையில் நடந்த 7 கொள்ளை சம்பவம் தொடர்பான தகவல் ஊர்ஜிதப்படுத்தப்பட்டுள்ளதாகவும் இன்னும் சில கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (ச-10)

## பாம்பு தீண்டிய இருவர் ஆஸ்பத்திரியில்

படுக்கையில் வைத்து பாம்பினால் கடியுண்ட இருவர் நேற்று முன்தினம் இரவு சாவகச்சேரி ஆதார மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

எழுதுமட்டுவாழ் வடக்கைச் சேர்ந்த வேலாயுதம் அமுதுப்பிள்ளை (வயது-65), மந்துவில் வடக்கைச் சேர்ந்த நகுலேஸ்வரன் விமல்ராஜ் (வயது-19) ஆகிய இருவரும் பாம்பினால் கடியுண்ட நிலையில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (வ-9)

தொடர்ச்சிகள்

## அனுமதியின்றி

இவ்வாறு அனுமதியின்றிக் குடிதண்ணீர் அடைக்கப்பட்டுள்ளது. அவ்வாறு செயற்படுவதன் மூலமாக மோசடி நடக்க வாய்ப்பு உள்ளதோடு, நோய் பரவக்கூடிய சந்தர்ப்பம் உள்ளதாகவும் குறிப்பிடப்பட்டது.

இதனையடுத்து குறித்த நிறுவன நடத்துநருக்க எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு அபராதம் விதிக்கப்பட்டது. (ந-4)

## காரைநகர்

னால் அவர்கள் அந்தச் சம்பவத்தில் தொடர்பு பட்டிருக்க வாய்ப்பில்லை என்று கடற்படையினர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி நீதிமன்றில் தெரிவித்திருந்தார். ஆனாலும் அவர்கள் விடுமுறை பெற்றிருந்தாலும் தொடர்ந்தும் இங்கேயே இருந்திருக்கலாம். தவிர குறித்த 7 பேரும் சிறுமியால் அடையாளம் காட்டப்படவில்லை. ஆகவே இருவரையும் அடையாள அணி வகுப்புக்கு முற்படுத்துமாறு கோரப்பட்டது. அதனை ஏற்றுக் கொண்ட நீதிமன்று அவர்களை ஏன் அடையாள அணி வகுப்புக்கு முற்படுத் தக் கூடாது என்று விளக்கம் கோரியுள்ளதோடு உரிய விசாரணை மேற்கொள்ளுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டிருந்தது.

இந்தநிலையில் உதவிப் பொலிஸ் உத்தியோகத்தர் நீதிமன்றில் நேற்று முன்னிலையாகியிருந்தார். சிறுமிகளை வன்கொடுமைக்கு ஆளாக்கினர் என்று குற்றம் சாட்டப்படும், விடுமுறையில் சென்றிருந்த இரண்டு கடற்படைச் சிப்பாய்களிடமும் தாம் வாக்குமூலம் பெற்றார் என்றும், அதனடிப்படையில் அவர்கள் விடுமுறையில் இருந்துள்ளனர் என்பது உள்ளிட்ட விடயங்களை ஆராயும்போது அவர்கள் இந்தச் சம்பவத்துடன் தொடர்புபட வாய்ப்பில்லை என்றும் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் நீதிமன்றில் தெரிவித்தார்.

ஆனால் அவர்களது கையடக்கத் தொலைபேசித் தரவுகளை பெற்றுக் கொள்ளுமாறு நீதிமன்று உத்தரவிட்டுள்ளதோடு அதன்பின்னரே விசாரணை செய்ய முடியும் என்று கூறியுள்ளது. தவிர குறித்த சிறுமியின் ஆடைகள் உள்ளிட்ட சான்றுப் பொருள்கள் பொலிஸாரினால் பகுப்பாய்வுக்காக இன்னும் அனுப்பப்படவில்லை. இவ்வாறு பல செயற்பாடுகளையும் பொலிஸார் உரிய முறையில் செயற்படுத்தவில்லை என்று நீதிமன்று சுட்டிக்காட்டியுள்ளது.

குறித்த சிறுமி பாடசாலை செல்லும் நேரத்தில் கடற்படைச் சிப்பாயால் அழைத்துச் செல்லப்பட்டு துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளார் என்று குற்றம் சுமத்தப்படுகிறது. மற்றைய சிறுமி ஒரு வருடத்துக்கு முன்னரே வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டதாகத் தெரிவித்துள்ளார். அது தொடர்பிலும் உரிய விசாரணை மேற்கொள்ள சம்பவம் நடந்த காலப்பகுதி, திகதி உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் விசாரிக்க வேண்டும். அதற்கும் சிறுமியை காணொலியில் சாட்சியம் அளிக்க வேண்டும் என்று நீதிமன்றில் சுட்டிக் காட்டப்பட்டது. அதற்கு நீதிமன்று அனுமதி வழங்கியுள்ளது.

தவிர சிறுமியை கடற்படைச்சிப்பாய் அழைத்துச் சென்ற போது அதனைத் தட்டிக் கேட்ட பொதுமகன் ஒருவரை கடற்படைச்சிப்பாய் தடுத்துள்ளார் என்று விசாரணையில் தெரிய வந்துள்ளது. ஆனால் குறித்த பொதுமகன் மனநிலை பாதிக்கப்பட்டவர் என்று பொலிஸாரால் நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அது தொடர்பில் மேலதிக விசாரணை மேற்கொள்ளுமாறு நீதிமன்று உத்தர விட்டதோடு, குறித்த சாட்சியிடம் சாட்சியம் பதிவு செய்யுமாறும், சிறுமியிடம் வீடியோவில் சாட்சியம் பதிவு செய்யுமாறும் நீதிமன்று கடந்த தவணை உத்தர விட்டிருந்தது. அதனைப் பொலிஸார் இன்றுவரை செயற்படுத்தவில்லை. பாதிக்கப்பட்ட இரண்டு சிறுமிகள் சார்பாகவும் தனித்தனியே வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு விசாரணை நடைபெற்று வருகிறது. எதிர்வரும் 16 ஆம் திக திக்கு வழக்குத் தவணையிடப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்டவர் கள் தரப்பில் சட்டத்தரணி அம்பிகா சிறிதரன் முன்னிலையாகியிருந்தார். (ற-4)

## அரச ஊழியரை

டாம் என்று சகல அமைச்சுக்களின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்களுக்கு உடனடியாக அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு நேற்றுத் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் 20 ஆம் திகதி நடைபெறவுள்ள ஊவா மாகாணசபைத் தேர்தலுக்காக, பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் இயங்கும் திவிநெகும திணைக்களத்தைச் சேர்ந்த 16 ஆயிரம் ஊழியர்களை, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தனது தேர்தல் பரப்புரை நடவடிக்கைக்காக பயன்படுத்த திட்டமிட்டுள்ளது என்று குற்றஞ்சாட்டிய மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி), இது தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாட்டைப் பதிவு செய்தது.

குறித்த முறைப்பாட்டுக்கு அமைய தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய, பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலாளரின் பிரதிநிதி, திவிநெகும திணைக்களத் தலைவர் ஆகியோர் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் விசாரணைக்கு நேற்று அழைக்கப்பட்டிருந்தனர். சுமார் 4 மணி நேரம் இந்த விசாரணை இடம்பெற்றது. இதன் போது ஜே.வி.பியால் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை அரசு மறுத்துள்ளது.

இந்த நிலையில் விசாரணை தொடர்பில் கருத்துத் தெரிவித்த, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர்களுள் ஒருவரான பிரதீபா மஹாநாமஹேவா, ஊவா மாகாண சபைத் தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்காக எந்தவொரு அரச ஊழியரையோ, பொது மக்களின் பணத்தையோ விடுவிக்க வேண்டாம் என்று சகல அமைச்சுக்களின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்களுக்கு உடனடியாக அறிவுறுத்தல் வழங்கப்படவுள்ளது என்றுதெரிவித்துள்ளார். (ற-5)

ௐ
நியந்த்ரீயின்
விழிநீர் சொரியும் கண்ணீர் அஞ்சலி



அமரர் பிரம்மஸ்ரீ ஸ்ரீபதிஐயர்
கிருஷ்ணானந்தசர்மா

(பிரதமகுரு, சிவன் கோயில் நல்லூர்,
சிரேஷ்ட விரிவுரையாளர்,
சமஸ்கிருததுறை, யாழ். பல்கலைக்கழகம்)

நியந்த்ரீ அமைப்பின் ஸ்தாபக அங்கத்தவரும் சமய கல்விமானுமாகிய
பிரம்மஸ்ரீ ஸ்ரீ கிருஷ்ணானந்தசர்மாவின்
மறைவு எமது சமூகத்துக்கு ஈடு செய்ய முடியாதது.
அன்னாரின் பிரிவினால் துயருற்று இருக்கும் அனைத்து உள்ளங்களுக்கும்
எமது ஆறுதலை தெரிவித்து நியந்த்ரீ அன்னையின் திருவடிகளில்
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி!

"நியந்த்ரீ"
சிவன்கோயில், நல்லூர்.

(51731)(10.6)

புதிய உற்பத்தி நிலையம் ஆரம்பம்
ஜானுஷா மிக்சர்

★ சைவ உணவு தயாரிப்பாளர்கள்.
★ மிக்சர் தயாரிப்பதில் அனுபவம் உள்ளவர்கள்.
★ மிக்சர்பொதியிடக்கூடிய பெண் பிள்ளைகள் தேவை.

நிகழ்வுகளுக்கு தேவையான சகல உணவுகள், சிற்றுண்டி வகைகள், மிக்சர் போன்றவை உயர் தரத்தில் ஓடர்களுக்கு வழங்கப்படும்.

உரிமையாளர்: த.குபேந்திரராஜா


கண்டுவில் இரண்டாம் ஒழுங்கை,
சாவகச்சேரி
தொ.பே: 0772719116

(C/15700)

கண்ணீர் அஞ்சலி

அமரர் பிரம்மஸ்ரீ
S. கிருஷ்ணானந்தசர்மா (கிருஷ்ணா ஐயா)

(சமஸ்கிருத விரிவுரையாளர்-யாழ். பல்கலைக்கழகம்,
நல்லூர் சிவன் கோயில் தேவஸ்தான குரு)



நேற்று (04.09.2014) வியாழக்கிழமை காலமான நல்லூர் சிவன்கோயில் தேவஸ்தான குருவின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.


சரவணா ரெக்ஸ்
526, 529, பருத்தித்துறை வீதி, நல்லூர்.
(சிவன்கோயில் அருகில்) யாழ்ப்பாணம்.

(C/16506)
(10.6)

# கண்ணீர் அஞ்சலி

**அமரர் பிரம்மஸ்ரீ**
**S. கிருஷ்ணானந்தசர்மா (கிருஷ்ணா ஐயா)**

(சமஸ்கிருத விரிவுரையாளர்-யாழ். பல்கலைக்கழகம்,
நல்லூர் சிவன் கோயில் தேவஸ்தான குரு)



நேற்று (04.09.2014) வியாழக்கிழமை காலமான நல்லூர் சிவன்கோயில் தேவஸ்தான குருவின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**நல்லைக் குமரன் ரெக்ஸ்**
405, பருத்தித்துறை வீதி, நல்லூர்.
(சிவன்கோயில் முன்பாக) யாழ்ப்பாணம். (C/16507) (10.6)

**MFM Marketing Management Training**
சந்தைப்படுத்தல் முகாமைத்துவ பயிற்சி

வயதெல்லை : 18 தொடக்கம் 35வரை
இருபாலாரும்
கல்வித்தகைமை : G.C.E. (O/L)
பயிற்சிக்காலம் : ஒரு வருடம்
நேர்முகத்தேர்வு : 8,9,10/09/2014 (திங்,செவ், புதன்)
நேரம் : காலை 09 - 12 வரை
பிற்பகல் 02 - 05 வரை

குறிப்பு :
* பயிற்சிக்கட்டணம் இலவசம்
* பயிற்சிக்காலத்தில் நாள் ஒன்றுக்கு ரூபா 1000/= வழங்கப்படும் (நிபந்தனைக்குட்பட்டது)
* சந்தைப்படுத்தல் முகாமைத்துவம் ஆகிய துறைகளில் முன் அனுபவம் உள்ளவர்களுக்கு மேலதிக பயிற்சியுடன் பணியில் இணைக்கப்படுவர்.
* எம்மிடம் பயிற்சியைப் பூர்த்தி செய்பவர்களுக்கு இத்துறையில் வேலை வாய்ப்பையும் பெற்றுக்கொள்ளலாம்.

நேர்முகத்தேர்வு நடைபெறும் இடம்:
**மையூரா (F)பஷன் மந்திர்**
**நல்லூர் குறுக்கு வீதி,**
**யாழ்ப்பாணம்.** (சி.15667) (45.6.3)
தொடர்பு: 077 524 2852, 021 568 8645

**தகவல் தரவும்** மந்துவிலில் 31.08.2014
ஞாயிறு இரவு சூரிய சோலர், மோட்டர் நீர் இறைக்கும் சாதனங்கள் காணாமல் போயுள்ளன. தகவல் தருபவருக்கு சன்மானம் வழங்கப்படும்.
தொடர்பு: 077 013 0505 (47267) (4.6.3)

**சுருக்கெழுத்து வகுப்பு ஆரம்பம்**
**(Shorthand Class)**
ஊடகம் - ஆங்கிலம்
சுருக்கெழுத்து கற்க விரும்புபவர்களுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்.
தகைமை: க.பொ.த சா/த தரத்தில் ஆங்கில பாடத்தில் குறைந்த சித்தி C
தொடர்பு:ச.நந்துஜா
நாச்சிமார் கோயில் அருகில்.
(51722) (12.3.6)
075 544 9050/076 653 3564

**மணமகள் தேவை**
இந்து குடும்பம் 1980, நட்சத்திரம் மகம், 2 இல் செவ்வாய், 63½ கிரகபாவம், அரச எழுது வினைஞராக (HNDA) தொழில்புரியும் மணமகனுக்கு அரச, வங்கி, ஆசிரியர் தொழில் பார்க்கும் மணமகள் தேவை. தரகர்களும் தொடர்பு கொள்ளலாம். (51713) (4.6.3)
தொடர்பு: 077 955 8170

# மரண அறிவித்தல்



## சின்னையா கந்தசாமி

மானிப்பாய் நாகம்மா வாசத்தைப் பிறப்பிடமாகவும் மண்டைதீவை வசிப்பிடமாகவும், வவுனியா தோணிக்கல்லை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா கந்தசாமி நேற்று முன்தினம் (03.09.2014) காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா-சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற அம்பலவாணர்-புஸ்பராணி தம்பதியரின் அன்பு மருமகனும், யோகராணியின் அன்புக் கணவரும், கஜேந்தினி, பிரபாலினி, பிரசாந்தினி (ஜேர்மனி) லக்ஷன் (ஜேர்மனி), கவிதரன், மயூரன் தனுஷன், தனோஜன் ஆகியோரின் அன்புத் தந்தையும், தங்கராணி, புஸ்பராசா, பத்மஸ்ரீ, மாலினி (ஜேர்மனி), காலஞ்சென்ற சுமதி (பிரான்ஸ்), ஜீவராசா (கனடா), துரச்செல்வி, யோகராசா ஆகியோரின் மைத்துனரும், குலேந்திரன் (பிரான்ஸ்), இராஜேஸ்கண்ணா (பிரான்ஸ்), சுவேதா (இந்தியா) ஆகியோரின் அன்பு மாமனும், தனுஷ்காந், ஸ்ரீகாந், சோபனா, ரக்ஷனா, றொசான் ஆகியோரின் பேரனும், சர்மிலா (கனடா), புலேந்திரநாதன், பாஸ்கரன் (ஜேர்மனி), ரவீந்திரநாதன், நகுலேஸ்வரி அமர்நாத் (பிரான்ஸ்), சுந்தரேஸ்வரன் ஆகியோரின் சகலனும் ஆவர்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.09.2014) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, தோணிக்கல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

40/41, சேக்கிழார் வீதி,
தோணிக்கல், வவுனியா. (C/16504) (10)
தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்



## திருமதி தங்கம்மா கந்தையா

கொடிகாமம் கச்சாய் வீதியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தங்கம்மா கந்தையா 02.07.2014 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை கந்தையாவின் அன்பு மனைவியும் நமச்சிவாயம் செல்வநாயகி, கந்தையா கமலம், வேல்நாயகம் செல்வராணி (ஆசிரியை விடத்தற்பளை கமலாசினி வித்தியாலயம்), கந்தையா செல்வமலர் (ஆசிரியை மிருசுவில் அ.த.க. பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற நமச்சிவாயம் வேல்நாயகம் மற்றும் ஜெயபவான் (சாயி ஸ்ரூடியோ நெல்லியடி) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆறுமுகம் சீதேவிப்பிள்ளையின் அன்புச் சகோதரதரியும் ஜெயபவான் ஆனந்தி (வலயக்கல்வி அலுவலகம் தென்மராட்சி)யின் பெரிய தாயாரும் நேசகுமாரன் (பிரான்ஸ்), நகுலகுமாரன் (பிரான்ஸ்), செல்வகுமாரன்(வீதி அபிவிருத்தி அதிகார சபை), தர்சினி(சுவிஸ்), வினோதினி (ஜேர்மனி), உதயகுமாரன், நந்தகுமாரன் ரோகினி, சிவசுதெர்சன் (சாவகச்சேரி பிரதேச சபை), மாறன் (மலேசியா), அயந்தினா (பிரான்ஸ்), லக்சயன்(கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்ப பாடசாலை) , சுசிகலா(பிரான்ஸ்), யசோதா(பிரான்ஸ்), நிமாலின் (பளை பிரதேச செயலகம்), விஜயரூபன்(ஜேர்மனி), சுதர்சன்(சுவிஸ்), கண்ணன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் பிருத்திகா, வர்ணா, பிரியன், அபிஷிகா, அபர்ணிகா அபிசன், அபிநயன், லக்சியன், டிலக்ஸி ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 07.09.2014 ஞாயிற்றுக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று மு.ப 11.00 மணியளவில் பாலாவித்தாழ்வு இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கச்சாய் வீதி,கொடிகாமம். குடும்பத்தினர்
0773028733
(c/16511)

# மரண அறிவித்தல்

## திருமதி சாந்திசறோஜினி பொன்னம்பலம்



(ஓய்வுபெற்ற தொலைத்தொடர்பு உத்தியோகத்தர்-யாழ்ப்பாணம், வவுனியா)

யாழ். பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும், 5 ஆம் வட்டாரம், வேலணை, ஒட்டுமடம், வவுனியாவை வசிப்பிடமாகவும் தற்போது கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சாந்தி சறோஜினி பொன்னம்பலம் கனடாவில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்தையா (ஓய்வுபெற்ற அதிபர்)-ஞானம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற காராளசிங்கம்-தில்லைவனம் (5ஆம் வட்டாரம், வேலணை) தம்பதியரின் அன்பு மருமகளும், பொன்னம்பலத்தின் (ஓய்வுபெற்ற தபாலதிபர்-கனடா) அருமை மனைவியும், சாந்தகுமார் (கொழும்பு), வசந்தி (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஷர்மிளா (UK), அனுஜா (UK), றோசான் (கனடா), பிரசாந்த் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும், நிரஞ்சன் (UK), அன்ரனி கைலன் (UK), தர்சிக்கா (கனடா) ஆகியோரின் மாமியும், இராசரெத்தினம்- அமிர்தவல்லி (கனடா), தேவராஜா-புவனேஸ்வரி (திருநெல்வேலி), மரகதவல்லி (திருநெல்வேலி), காலஞ்சென்ற பரமேஸ்வரி-விஜயரெட்னம் மற்றும் மார்க்கண்டு-இராசேஸ்வரி (கனடா), கணேசலிங்கம் (கிராம உத்தியோகத்தர்-வேலணை வடக்கு J/12) ஆகியோரின் மைத்துனியும், ஆனந்தியின் (ஆசிரியை- யா/வண்ணை நாவலர் மகாவித்தியா லயம்) சகலியும், மதுமதி (யாழ்ப்பாணம்), சாலோம் (சுவிஸ்) ஆகியோரின் பெரியம்மாவும், மேகலா-தவலோகநாதன் (கனடா), ராதிகா-சண்முகம்பிள்ளை (ஜேர்மனி), வசந்தன் (கனடா), மைதிலி- ஸ்ரீஸ்கந்தராஜா (ஆசிரியை யா/கொக்குவில் இந்துக் கல்லூரி), வாகீசன் (ஆஸ்திரேலியா உயர்ஸ்தானிகராலயம்- கொழும்பு), கார்த்திகா (ஆசிரியை-கொழும்பு), கலைப்பிரியா, சாரங்கன் (ஆஸ்திரேலியா), மயூரி (கனடா), வைபூரி (கனடா), டினேஸ் (கனடா) ஆகியோரின் மாமியும், சித்திரவின் (கனடா) சிறியதாயும், டானியல் (UK), ஸரியலா (UK), அன்றியன் (UK), அஸ்பியன் (UK), அபிஷேக் (UK), ஜெமுவல் (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் காபரோ, கனடா கைலன் பியூனரல் கோல் இல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 04.09.2014 வியாழக்கிழமை இரவு (இலங்கை நேரம்) கனடாவில் நல்லடக்கம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
கா.பொன்னம்பலம் (கணவர்-கனடா)
00164 733 94750
தே.புவனேஸ்வரி (மைத்துனி-திருநெல்வேலி)
077 2110 448
கா.கணேசலிங்கம் (மைத்துனர்)
கிராம உத்தியோகத்தர்-வேலணை வடக்கு J/12
077 844 9687

271/3, நாவலர் லேன்,
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம். (51737) (10)

தொடர்ச்சிகள்

## மஹிந்தவுக்கு

அறிவித்த பின்னர் ஊடகவியலாளர்கள் அமைச்சரிடம் சமகால அரசியல் நிலவரங்கள் தொடர்பில் கேள்விகளை எழுப்பினர்.

அங்கு, "தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இந்தியப் பயணமானது இலங்கை அரசை பதற்றமடையசெய்துள்ளதா என ஊடகவியலாளர் ஒருவர் வினவியமைக்கு,

"அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பது இலங்கையிலுள்ள ஓர் அரசியல் கட்சியாகும். அந்தவகையில், அந்தக் கட்சியின் உறுப்பினர்கள் சென்று இன்னுமொரு அரசை சந்தித்து கலந்துரையாடுவதென்பது சாதாரண விடயமாகும். இதற்கு நாம் ஏன் பதற்றமடைய வேண்டும்" என பதிலளித்தார்.

"இந்தியாவில் தற்போது அமைந்துள்ள புதிய அரசும் 13 ஆவது திருத் தத்தை இலங்கையில் நடைமுறைப் படுத்துமாறே கேட்டுக் கொண்டுள்ளது. இதற்கு அரசின் பதில் என்ன?" என இன்னுமோர் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு,

"13 ஆவது அரசமைப்பு குறித்த முடிவில் இலங்கை அரசு தனது நிலைப்பாட்டை ஏற்கனவே தெளி வாக அறிவித்து விட்டது. ஆகவே, இதில் கலந்துரையாட ஒன்று மில்லை." என்றார்.

மேலும், தமிழ்க் கூட்டமைப்பினர் மோடியிடம் சென்று அரசியல் தீர்வுத் திட்டம் தொடர்பில் எவ்வாறான கோரிக்கைகளை முன்வைத்தாலும் இந்திய அரசின் வெளிநாட்டுக் கொள்கைகளில் ஒருபோதும் மாற்றம் ஏற்படாது என்றே அரசு நம்புகின்றது." எனவும் பதிலளித்தார்.

அதேநேரத்தில், வடக்கில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்களுக்கு கூட்டமைப்பினர் ஒத்துழைப்பதில்லை என்றும் இன்னுமொரு ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு அமைச்சர் பதிலளித்தார்.

அதற்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கூட்டமைப்பினர் அபிவிருத்தி எனும் போர்வையில் அரசியலையே முன்னெடுத்துக் கொண்டு வருகின்றனர். இதனால் பாதிக்கப்படப் போவது வடமாகாண மக்களே. அரசு வழங்கும் பணத்தில் 10 வீதத்தைக் கூட கூட்டமைப்பினர் அபிவிருத்திக்காக பயன்படுத்துவதே இல்லை" என குற்றம் சாட்டினார்.

இதன்போது, இந்திய மத்திய அரசு வடமாகாண முதலமைச்சருக்கு அழைப்பு விடுத்துள்ளமை குறித்து அங்கு வினவப்பட்ட போது,

" ஆளுநரின் அனுமதியின்றி அவர் எங்கும் செல்லமுடியாது" என கெஹலிய தெரிவித்தார். மேலும், ஒரு அரச பணியாளரோ அல்லது பிரதிநிதியோ அவ்வாறு வெளி நாட்டுப் பயணம் மேற்கொள்வதாயின் தமது உயர் அதிகாரியிடம் அறிவித்தே செல்ல வேண்டும். இதுவே நாட்டின் சட்டமாகும் என்றும் அவர் சுட்டிக் காட்டியமை குறிப்பிடத்தக்கது.

அதுமட்டுமல்லாது, 3 ஆவது தடவையாகவும், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வேட்பாளராக களமிறங்க முடியாது என எழுந்துள்ள சர்ச்சை குறித்து எழுப்பப்பட்ட வினாவிற்கு,

"மூன்றாவது தடவையாகவும் அவர் வேட்பாளராக நிற்க முடியும் என்பதே அரசின் நிலைப்பாடு. அவ்வாறு களமிறங்க முடியாது அல்லது இதனை பரிசீலனை செய்து பார்க்க வேண்டும் என யாராவது தெரிவித்தால் அது அவரது உரிமையாகும். இதில் குழப்பமடையத் தேவையில்லை" என அமைச்சர் தெரிவித்தார். (கு)

## முஸ்லிம்களை

"இரு தரப்புப் பேச்சுக்கு முன்னர் அரசியல் தீர்வுத்திட்ட வரைவை முன் வைக்குமாறு ராஜபக்ஷ அரசிடம் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் நாயகமும் நாடாளுமன்ற ஊறுப்பினருமான ஹசனலி வலியுறுத்தியுள்ளதை நாம் வரவேற்கின்றோம். அரச பங்காளிக்கட்சியான மு.கா. இவ்வாறு அரசிடம் வேண்டுகோள் விடுப்பதையிட்டு நாம் மகிழ்ச்சியடைகின்றோம். இந்த அழுத்தத்தை ராஜபக்ஷ அரசுக்கு மு.கா. தொடர்ந்து கொடுக்க வேண்டும் என்றே நாம் விரும்புகின்றோம்" - என்று நாடளுமன்ற உறுப்பினர் மாவை கூறினார்.

முஸ்லிம் மக்களின் பிரதிநிதிகளைக் கொண்ட கட்சியான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுடன் பேச்சு நடத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தயாராகவுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சு நடத்துவதற்கு முன்னர் அரசியல் தீர்வுத்திட்ட வரைவை இதயசுத்தியுடன் அரசு முன் வைக்கவேண்டும் என்றும், பேச்சு நடத்தவேண்டும் என்பதற்காக பேசாது, தீர்வை விரைந்து காணும் வகையில் பேச்சு நடத்தவேண்டும் எனவும், இதை விடுத்து தெரிவுக் குழுவைக் காரணம் காட்டி அரசு காலம் கடத்துவது நியாயமற்ற செயல் எனவும் அரச பங்காளிக் கட்சியான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் நாயகமும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ரி. ஹசனலி தெரிவித்திருந்தார்.

அத்துடன், ஊவா மாகாண சபைத் தேர்தல் முடிவடைந்ததும் தமிழ் மக்களின் ஏகோபித்த ஆதரவைப் பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பேச்சை மீண்டும் ஆரம்பிக்கவுள்ளது எனவும் ஹசனலி குறிப்பிட்டிருந்தார்.

இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு என்னவென்று அதன் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா நேற்று 'உதயன்' வினவியபோதே அவர் மேற்படி விடயங்களைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"2011 ஜனவரியில் ராஜபக்ஷ அரசின் அழைப்புக்கிணங்க இரு தரப்புப் பேச்சு மேசைக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சென்றது. 18 தடவைகள் இந்தப் பேச்சுகள் நடைபெற்றன. இதன்போது அரசியல் தீர்வுத் திட்ட நகலை அரசிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சமர்ப்பித்தது. ஆனால், இதற்குப் பதில் வழங்காமல் 2012 ஜனவரியில் இரு தரப்புப் பேச்சைக் குழப்பிக்கொண்டு பேச்சு மேசையிலிருந்து அரசு வெளியேறியது. தான் நியமித்த நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் கூட்டமைப்பு பங்கேற்றால்தான் தீர்வுத் திட்டம் தொடர்பில் பேசலாம் என்று அரசு கூறி வருகின்றது. ஆனால், தீர்வுத் திட்டம் தொடர்பில் அரசு முறையான ஒருவரைவை முன்வைத்தால்தான் இரு தரப்புப் பேச்சில் நாம் பங்கேற்போம்" - என்றார் மாவை. (த-சி)

## சங்கத்தில்

அங்கு உட்புகுந்த திருடர் அரிசி, மா, சீனி, பருப்பு, பால்மா பைக்கற்றுகள், சவர்க்காரங்கள் உள்ளிட்ட பொருள்களைத் திருடிச் சென்றுள்ளதாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது.

அது தொடர்பில் விசாரணை மேற்கொண்ட பொலிஸார் திருடிய குற்றச்சாட்டில் ஊர்காவற்றுறை அண்ணா வீதியைச் சேர்ந்த 2 ஆண்களையும், திருட்டுப் பொருள்களை வாங்கிய அல்லது தன்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டில் சூரிய வத்தையைச் சேர்ந்த பெண் ஒருவரையும் கைது செய்துள்ளனர். அவரிடமிருந்து திருட்டுப் பொருள்களையும் பொலிஸார் மீட்டுள்ளனனர்.

மூவரும் ஊர்காவற்றுறை நீதிமன்றில் நேற்று முற்படுத்தப்பட்ட போது அவர்களை எதிர் வரும் 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டது. (த-4)

## இலங்கைத்

கட்சிக் கிளைப் புனரமைப்புச் செயற்பாடுகள் வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளதாகச் செயலாளர் தெரிவித்தார். (த-135)

## பூசை

கத் தினரையும் மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்தினர். அதனை ஆராய்ந்த நீதிமன்று அங்கு பூசை செய்ய கடந்த மார்ச் மாதம் தொடக்கம் தடை விதித்தது.

இன்று வரை அது தொடர்பில் முன்னேற்றம் காணப்படாத நிலையில் கோயில் நிர்வாகத்தினரால், மல்லாகம் நீதிமன்றக் கட்டளையை நீக்கி அங்கு பூசை செய்வதற்கு அனுமதி வழங்குமாறு கோரி யாழ். மேல் நீதிமன்றில் சட்டத்தரணி விமணி வண்ணன் ஊடாக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

அதனைப் பரிசீலித்த மேல்நீதிமன்ற நீதிபதி அ.பிரேமசங்கர், நேற்று முன்தினம் நீதிமன்றக் கட்டளையைத் தெரிவித்தார். அதன்படி அங்கு பூசை செய்ய அனுமதி வழங்கியதோடு அங்கு தேவையேற்படின் வட்டுக் கோட்டைப் பொலிஸ் பொறுப்பதிகாரி பாதுகாப்பைக் கவனிக்க வேண்டும் என்றும் உத்தரவிட்டார். இதனையடுத்து அந்தக் கோயிலில் தற்போது பூசை வழிபாடுகள் இடம்பெற்று வருகின்றன. (த-4)

## அ, புரத்தில்

பயணித்த 2 பஸ்கள் மீது யாழ். கச்சேரி, அரியாலைப் பகுதிகளில் வைத்துத் தாக்குதல் நடத்தப்பட்ட நிலையிலேயே அநுராதபுரத்துக்கும் நொச்சியாகமத்துக்கும் இடையிலுள்ள 60 ஆம் கட்டைப் பகுதியில் வைத்து 10 பஸ்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

அது தொடர்பில் அன்றிரவே பஸ் உரிமையாளர்கள் நொச்சியாகம பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தனர். அதனடிப்படையில் இருவர் ஓட்டோ ஒன்றுடன் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும், மேலும் மூவர் தேடப்பட்டு வருகின்றனர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். கடந்த சில நாள்களில் மாத்திரம் 13 பஸ்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. (ற-4)

## பேச்சுக்குத்

கூட்டமைப்பினர் கடந்த மாத இறுதியில் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தனர். அதைத் தொடர்ந்து கூட்டமைப்பினர் வேண்டுகோள் விடுத்தால் இலங்கை அரசு பேச்சுக்குத் தயார் என்று அமைச்சர் சுசில் பிரேமஜெயந்த தெரிவித்திருந்தார்.

அது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு என்ன என்று 'உதயன்' வினவியபோதே அவர் மேற்கண்டவாறு அழுத்தமாகப் பதிலளித்தார்.

"எம்மைப் பொறுத்த வரையில் நாம் பேச்சுக்கு மாறானவர்கள் அல்ல. இரு தரப்பு பேச்சை முறித்தவர்கள் அரச தரப்பினரே. 2012 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 17 ஆம், 18 ஆம், 19 ஆம் திகதிகளில் நிர்ணயிக்கப்பட்டிருந்த பேச்சுக்கு நாங்கள் ஒவ்வொரு திகதியிலும் சமுகமளித்த போதிலும், அரச தரப்பினர் வரவில்லை."- என்றும் அவர் முன்னர் பேச்சு முறிந்தமைக்கான காரணங்களைப் பட்டியலிட்டார்.

"அந்தப் பேச்சைத் தொடருவதற்கு நாங்கள் தயாராக இருக்கின்றோம். ஆனால் அந்தப் பேச்சு ஆக்கபூர்வமானதாக அமைய வேண்டும். சர்வதேசத்துக்கு, இலங்கை அரசு எங்களுடன் பேசுகின்றது என்பதை காண்பிப்பதற்காக, பேச்சு நடைபெற முடியாது.

நீண்டகால - காலவரையற்ற பேச்சில் ஈடுபடுவதற்கு நாங்கள் தயாராக இல்லை. சில வாரங்களுக்குள் பேச்சு முடிவுக்குள் வர வேண்டும். இந்தப் பேச்சு நடைபெறுகின்ற பொழுது, இதனை அவதானிப்பதற்காக சர்வதேச பங்களிப்பை நாங்கள் வரவேற்போம். அதனுடைய நோக்கம் இதன்மூலம் உண்மை வெளியாகும். எமக்கும் அரசுக்கும் இடையில் பேச்சு நடைபெறுவதற்கு நாங்கள் மாறானவர்கள் அல்ல."- என்று அவர் தற்போதைய தமது நிலைப்பாட்டை எடுத்துரைத்தார்.

"இலங்கை அரச தரப்பினர் மூன்றாம் தரப்பு கண்காணிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனரே?"- என்று அவரிடம் வினவினோம். "பல்வேறு நபர்கள் அரசின் தரப்பில், சில சமயங்களில் கூறுகின்ற முரண்பட்ட கருத்துக்களுக்கு எல்லாம், எம்மால் பதில் சொல்ல முடியாது. பதில் சொல்ல வேண்டிய தேவையும் இல்லை. முறையாக பேச்சை ஆரம்பிப்பதற்கு முயற்சி எடுக்கப்பட்டால் நாங்கள் அதிலிருந்து பின்வாங்க மாட்டோம்"- என்று அவர் அதற்குப் பதிலளித்தார். (ற-5)

## அரசின்

இவ்வாறு தெரிவித்துள்ளார். இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியுடன் பேச்சு நடத்த வடக்கு மாகாணசபை முதலமைச்சருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது என்று அறிகின்றோம். முதலமைச்சர் இந்தியா செல்வதற்கு முன்னர் இலங்கை அரசிடம் அனுமதி பெற வேண்டும். அதேவேளை மாகாண சபை உறுப்பினர்கள் அவ்வாறு செல்வதாயின் முதலமைச்சரின் அனுமதியைப் பெற்றுச் செல்ல முடியும்.

வடக்கு மாகாணசபையைக் கைப்பற்றியுள்ள தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் மக்களுக்கு நன்மை பயக்கக்கூடிய அபிவிருத்திப் பணிகளை புறக்கணித்து அரசியல் பயணத்தையே ஆரம்பித்துள்ளனர். வடபகுதி அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக அரசு பெருந்தொகைப் பணத்தை வழங்கியுள்ளது. எனினும் அதில் 10 சதவீதத்தைக்கூட சபை செலவிடவில்லை. இறுதியில் அரசு தமிழ் மக்களுக்கு ஒன்றுமே செய்யவில்லை என்று எம்மீதே குற்றம் சுமத்துவார்கள்.

வடக்கில் அபிவிருத்தி நடவடிக்கைகள் மந்த கதியில் நடப்பதால் அப்பாவிப் பொது மக்களே பாதிக்கப்படுகின்றனர். ஒழுங்காக செயற்படாத மாகாண சபையைக் கலைத்துவிட ஆளுநருக்கோ அல்லது ஜனாதிபதிக்கோ அதிகாரம் இல்லை"- என்று தெரிவித்துள்ளார். (ற-5)

## கிடைக்கும்

படும் உதவித் திட்டங்களை நேற்று ஆரம்பித்து வைத்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

"உதவிகளை ஏன் வடக்கு மக்களுக்கு வழங்குகிறார்கள்? தமக்கு வழங்கலாம் தானே என்று ஏனைய பகுதியினர் கேட்கின்றனர். போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தான் பல உதவிகள் தேவையாகவுள்ளன. அந்த வகையில் அமெரிக்க மக்கள் வழங்கும் உதவிகளை எவரும் கொச்சைப்படுத்தாது இருக்க வேண்டும் என்று அரசுடன் தொடர்புடையவர்களுக்குக் கூற விரும்புகிறேன்.

இளையவர்கள் கல்வியில் அக்கறை கொள்ள வேண்டும். தொழில் முறைக்கல்வி பிற நாடுகளில் சிறப்பாகக் காணப்படுகின்றன. இங்கும் அதனை ஏற்படுத்துவதற்கான பணிகளை வடக்கு மாகாண சபை மேற்கொண்டுள்ளது.

முன்னர் ஒரு காலத்தில் இந்தியாவைச் சுற்றி மீன் வளம் நிறைந்திருந்தது. அவர்கள் தமது றோலர் மீன் பிடியால் அங்குள்ள வளங்களை அழித்து விட்டு தற்போது எமது கடல் எல்லைக்குள் வருகிறார்கள். அதனால் இந்திய இலங்கை மீனவர் பிரச்சினை முடிவின்றித் தொடர்கிறது. றோலரில் மீன் பிடியில் ஈடுபடுபவர்களை இங்குள்ள பகுதியில் தொழிலில் ஈடுபடாது, அரேபியன் கடல், வங்காள விரிகுடா கடலில் மீன் பிடியில் ஈடுபட்டால் இங்கு சிறு வள்ளங்களைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபடுபவர்கள் பயனடைவார்கள். அதற்கென சட்டம் இயற்றப்பட வேண்டும் என்று சில மாதங்களுக்கு முன் இங்கு வந்திருந்த இந்திய அதிகாரியிடம் எடுத்துக் கூறியிருந்தேன். அது தொடர்பில் ஆராய்வதாகக் கூறியிருந்தார். அத்துடன் இந்தப் பிரச்சினை தொடர்பில் கலந்தாலோசிக்கவென வடமராட்சியில் குழு ஒன்றை நியமித்துள்ளேன். அது தொடர்பில் மீனவர் கருத்தை அறிந்து நடவடிக்கை எடுக்க உள்ளேன்"- என்று தெரிவித்துள்ளார். (ற-4)

## ஊவா

நேற்றைய தினம், தாம் இவ்வாறு ஊவா மாகாணத்துக்குச் செல்வதற்கு கடமை விடுமுறை தருமாறு பிரதேச செயலாளர்கள், மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர், யாழ்.மாவட்ட அரச அதிபரிடம் கோரிக்கை விடுத்த போதும் அவர்கள் கடமை விடுமுறை வழங்க மறுத்து விட்டனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஊவா மாகாணசபைத் தேர்தல் இந்த மாதம் இடம்பெறவுள்ளது. இதற்கான தபால் மூல வாக்களிப்பும் நாடளாவிய ரீதியில் நேற்று ஆரம்பமாகியுள்ளது.

இந்த நிலையில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழுள்ள 'திவிநெகும' திணைக்களத்தின் கீழ் கடமையாற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களை, கிராம மட்ட அமைப்புக்களை வலுப்படுத்தும் செயற்திட்டம் என்ற தொனிப் பொருளில் ஊவா மாகாணத்துக்கு அழைத்துச்செல்ல இதன்பிரகாரம் யாழ். மாவட்டத்திலிருந்து செல்வதற்கு 146 பேர் மாத்திரமே விருப்பம் தெரிவித்திருந்தனர். இவர்கள் ஊவா மாகாணத்துக்கு இன்று அழைத்துச் செல்லப்பட்டு, அங்கு நாளை முதல் 8 ஆம் திகதி வரையில் கடமையில் ஈடுபடுவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்களுக்கான போக்குவரத்துக்கு வடக்கு மாகாண சபைக்குச் சொந்தமான இரண்டு பஸ்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதேவேளை, பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் முன்னெடுக்கப்பட்டுள் மேற்படி நடவடிக்கைக்கு எதிராக மக்கள் விடுதலை முன்னணி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி ஆகியன இணைந்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவில், தேர்தல்கள் ஆணையாளருக்கு எதிராக முறைப்பாடு செய்திருந்தன.

இதனையடுத்து தேர்தல்கள் ஆணையாளரை நேற்று அழைத்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணை மேற்கொண்டிருந்தது. இத ன்போது, பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் ஊழியர்களை ஊவா மாகாணசபைத் தேர்தலுக்கு பயன்படுத்துவது நிறுத்தப்பட வேண்டும் என்று தேர்தல்கள் ஆணையாளர் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்டிருந்தார். ஆனாலும் மேற்படி நடவடிக்கை நேற்று மாலை வரையில் யாழ்.மாவட்டத்தில் நிறுத்தப்படவில்லை. (ற-5)

## சட்ட விரோத

மீனவர்கள் கடந்த 3 ஆம் திகதி அதிகாலை வெளிச்சத்தை பயன்படுத்தி சுருக்குவலைகளைக் கொண்டு மீன்பிடித்து கொண்டிருந்த போது முல்லைத்தீவு மாவட்ட நீரியல் வளத்திணைக்களத்தின் உதவிப்பணிப்பாளர் ஜே. சுதாகரன் தலைமையிலான அதிகாரிகள் கொண்ட குழுவினர் படகுகள் மற்றும் வலைகளுடன் 12 மீனவர்களை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட மீனவர்கள் நேற்றுமுன்தினம் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட போது மீனவர்கள் ஒவ்வொருவருக்கும் தலா மூவாயிரம் ரூபா வீதம் 36 ஆயிரம் ரூபா அபராதமும், அவர்கள் மீன்பிடிக்க பயன்படுத்திய 4 படகுகள், 4 இஞ்சின்கள், 3 சுருக்குவலைகள் உட்பட்ட சுமார் 28 லட்சம் ரூபாய் பெறுமதியான உபகரணங்கள் அரச உடமையாக்குமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த முல்லைத்தீவு மாவட்ட நீரியல் வளத்திணைக்கள உதவிப் பணிப்பாளர் ஜே.சுதாகரன்,

"நீரியல் வளத்திணைக்களத்தால் முல்லைத்தீவு கடற்பரப்பில் மீன்வளத்தை பாதுகாக்கும் பொருட்டு தொடர்ந்து கண்காணிப்பு நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன. மீன் வளத்தை அழிக்கக்கூடிய வகையில் தடை செய்யப்பட்ட உபகரணங்களைப் பயன்படுத்தி மீன் பிடித்தொழிலை மேற்கொள்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்"- என்று தெரிவித்துள்ளார். (ற-14-115)

## ரூ.15,000 அபராதம்



கிளிநொச்சி.செப்.5
சாரதி அனுமதிப்பத்திர மின்றியும், மதுபோதையிலும், கவனவீனமாகவும் வாகனம் செலுத்திய சாரதி ஒருவருக்கு கிளிநொச்சி நீதிமன்றம் நேற்று 15 ஆயிரம் ரூபா தண்டம் விதித்துள்ளது.

பூநகரி வாடியடிப் பகுதியில் நேற்று முன்தினம் புநகர்ப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட சாரதி நேற்று நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டபோது தனது குற்றத்தை ஒப்புக் கொண்டார். அதையடுத்து குறித்த தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.(வ-18)



திருகோணமலை மடத்தடி ருக்மணி தாயார் சமேத ஸ்ரீ கிருஷ்ணபகவான் ஆலய பிரமோற்சவத்தின் புதன்கிழமை இடம்பெற்றபோது பகவான் அஸ்வ வாகனத்தில் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள் பாலித்து ஆலய வீதியில் வலம் வருகிறார். (வ-40)

## தென்னை அழிப்பை சீர்செய்ய போதிய நடவடிக்கை இல்லை

கொழும்பு, செப்.5
இலங்கையில் பல காரணங்களால்தொடர்ச்சியாக தென்னை மரங்கள் வெட்டி வீழ்த்தப்பட்டுள்ளன என்றும்- அவற்றை சீர் செய்ய போதிய நடவடிக்கைகள் இல்லை என்றும் கருத்துக்கள் வெளியாகியுள்ளன.

உலகளவில் தேங்காய்களின் பயன் மற்றும் பலன், அதை சார்ந்துள்ளவர்களின் நலன்களைப் பாதுகாப்பது என்று பல விடயங்களை மையப்படுத்தி, செவ்வாய்க்கிழமை உலக தேங்காய் தினமாக அனுசரிக்கப்பட்டது.

திட்டமிடப்படாத வளர்ச்சிப் பணிகள், போர்ச் சூழல் ஆகியவை கடந்த காலங்களிலும், தற்போது கடும் வறட்சி காரணமாகவும் இலங்கையில் தென்னையின் எதிர்காலம் பெரும் கேள்விக்குறியாக உள்ளது என்று கொழும்பு பல்கலைக் கழகப் பொருளாதாரப் பேராசிரியர் டாக்டர் மு. கணேசமூர்த்தி தெரிவித்தார்.

ஒரு காலத்தில் இலங்கையின் ஏற்றுமதி மற்றும் வருவாயில், தென்னையின் பங்கு கணிசமாக இருந்தது என்றும்- அது படிப்படியாக் குறைந்து, இன்று மிகவும் நலிவடைந்துள்ளது என்றும் அவர் கூறுகிறார்.

குறிப்பாக வடமேல் மாகாணத்தில் பெரும் எண்ணிக்கையிலான தென்னை மரங்கள் வளர்ச்சிப் பணிகளுக்காக வெட்டி வீழ்த்தப்பட்டன என்றும்- போர்க் காலத்தில் இருதரப்பாலும் ஏராளமான தென்னை மரங்கள் வெட்டி சாய்க்கப்பட்டன என்றும் கூறும் அவர், அதன்காரணமாக ஏற்பட்ட சமூகப் பொருளாதார இழப்பு ஈடு செய்ய முடியாதது என்றும் கூறுகிறார்.(வ)

# தனியார் பஸ் சாரதிகளின் சிறு போக்குவரத்து தவறுகள் தொடர்பிலான புதிய சட்டத்தை நீக்குக

### தனியார் போக்குவரத்துச் சங்கத்தின் தலைவர் வலியுறுத்து

கொழும்பு, செப்.5
தனியார் பஸ் சாரதிகள் இழைக்கும் சிறுபோக்குவரத்துத் தவறுகளுக்கு இதுவரை வழங்கப்பட்டு வந்த பொலிஸ் தண்டப்பத்திர முறை நீக்கப்பட்டு அவர்களுக்கு எதிராக நீதிமன்றங்களில் வழக்குத் தொடர்வதற்கான புதிய சட்ட திட்டம் உடனடியாக நீக்கப்படாவிட்டால் நாடளாவிய ரீதியில் பெரிய பணிப் புறக்கணிப்பில் ஈடுபடவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும் என்று தனியார் போக்குவரத்துச் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன திங்கட்கிழமை எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தனியார் பஸ் சங்கங்களுடன் கலந்தாலோசிக்காமல் இவ்வாறான முடிவொன்றை மேற்கொண்டமை பெரும் தவறாகும். அது தனியார் பஸ் சேவையை சீர்குலைக்க மேற்கொள்ளப்பட்ட முயற்சி.

அனுமதிப்பத்திரங்கள் இன்றி சேவையில் ஈடுபடும் பஸ் சாரதிகளை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துவதில் தவறில்லை. எனினும், சிறு சிறு குற்றங்களுக்கு அவர்களுக்குத் தண்டப்பத்திரங்களை வழங்காமல் நீதிமன்றங்களுக்கு இழுத்தடிப்பது நேரத்தையும், பணத்தையும் விரயமாக்கும். அத்துடன், இந்த நீதிமன்ற விவகாரத்தைத் தவிர்ப்பதற்கு இலஞ்சம் வழங்க வேண்டிய நிலை ஏற்படும்.

தனியார் பஸ் உரிமையாளர்கள் ஏற்கனவே பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகிறார்கள். தனியார் பஸ் போக்குவரத்து அமைச்சு, தேசிய போக்குவரத்து ஆணைக்குழு, போக்குவரத்து அதிகாரசபை எனப் பல்வேறு அமைப்புக்கள் இருந்த போதிலும் தனியார் பஸ் உரிமையாளர்களுக்கு மாற்றாந்தாய் கவனிப்பே கொடுக்கப்படுகிறது. வீதி அனுமதிப் பத்திரங்கள் இன்றி இன்று நூற்றுக்கணக்கான பஸ் சேவைகள் நடத்தப்படுகின்றன.

போக்குவரத்து ஆணைக்குழு தான்தோன்றித்தனமாகச் செயற்படுகின்றது. பஸ் கட்டணங்களை உயர்த்துவதற்கு அந்த ஆணைக்குழு அனுமதியளிக்கத் தேவையில்லை.

தனியார் பஸ் உரிமையாளர்கள் முகம்கொடுக்கும் பிரச்சினைகளைப் புரிந்து கொள்ளக் கூடியவர்கள் இந்த ஆணைக் குழுவில் இல்லை.

இவ்வாறு விளக்கமளித்தார் அவர். (வ)

## கஞ்சாவுடன் வயோதிபர் கைது

மட்டக்களப்பு, செப்.5
ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஐயன்கேணி பாரதிபுரம் பகுதியில் வைத்து செவ்வாய்க்கிழமை 64 வயதுடைய வயோதிபர் ஒருவரை கஞ்சாவுடன் தாம் கைது செய்ததாக ஏறாவூர் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தீப்தி விஜயவிக்ரம தெரிவித்தார்.

சந்தேகநபரிடமிருந்து விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த 572 கிராம் கஞ்சாவை கைப்பற்றியதாகத் தெரிவித்த பொலிஸ் பொறுப்பதிகாரி சந்தேகநபரை நேற்று முன்தினம் புதன்கிழமை நீதிமன்றத்தில் முன்னிலை செய்யவுள்ளதாகவும் கூறினார்.

சமீபகாலமாக ஏறாவூர் பொலிஸ் பிரிவில் தீவிரமான போதைப் பொருள் ஒழிப்பு நடவடிக்கைகளில் தாம் ஈடுபட்டுள்ளதாகவும் போதைப் பொருளோடு சம்பந்தப்பட்ட நபர்களை நீதிமன்றில் நிறுத்தி தண்டனை பெற்றுக் கொடுக்கப்படும் என்றும் ஏறாவூர் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மேலும் குறிப்பிட்டார். (வ)

## புதுக்குடியிருப்பில் நடமாடும் வங்கிச் சேவை இன்று

யாழ்ப்பாணம்.செப்.5
பிரதேச அபிவிருத்தி வங்கி கிளிநொச்சிக் கிளையின் ஏற்பாட்டில் நடமாடும் வங்கிச் சேவை இன்று வெள்ளிக்கிழமை புதுக்குடியிருப்பு பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் வங்கிக் கிளை அமைந்திருந்தாலும் அங்கிருந்து புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ள நிலையில் புதிய கணக்குகளை ஆரம்பித்தல் மற்றும் சிறுவர் மகளிருக்கான சேமிப்புக் கணக்குகள், கடன் வசதிக்கான ஆலோசனைகள் இந்த நடமாடும் சேவையில் வழங்கப்படவுள்ளன.

இன்று காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை நடைபெறவுள்ள இந்த நட மாடும் சேவையில் பகுதி மக்கள் பங்குபற்றி நன்மை பெறுமாறு வங்கி முகாமையாளர் கோ.நற் குணலிங்கம் தெரிவித்துள்ளார்.

இந்தமாத ஆரம்பத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த நடமாடும் சேவை தொடர்ந்து ஒவ்வொரு மாதமும் நடத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.(வ-14)

## மட்டக்களப்பில் மதுவுக்கு அடிமையாகி பாதிக்கப்பட்ட 150 பேருக்கு சிகிச்சை

மட்டக்களப்பு, செப்.5
மட்டக்களப்பு மாவட்டத்தில் மதுபாவனைக்கு அடிமையாகி உடல், உள நிலை மோசமாகப்பாதிக்கப்பட்ட 150 பேருக்கு இந்த வருடம் ஜனவரி மாதத்திலிருந்து ஓகஸ்ட் மாதம் வரை புனர்வாழ்வுடன் மருத்துவ சிகிச்சை அளித்ததாக மட்டக்களப்பு உளநலச் சேவைகள் நிலையத்தின் சிரேஷ்ட உள நல மருத்துவர் பி.ஜீடி.ரமேஸ் ஜெயக்குமார் தெரிவித்தார்.

இவ்வாறு பாதிக்கப்பட்ட அவர்களை ஆய்வின் மூலம் கண்டறிந்து, 2 வாரகாலத்துக்கு புனர்வாழ்வுடன், மருத்துவச் சிகிச்சை அளித்ததாகவும் அவர் கூறினார்.

இந்தச் சிகிச்சையின் பின்னர் அவர்கள் வீடுகளுக்குத் திரும்பியதும், ஏற்கெனவே பயிற்றுவிக்கப்பட்டு கிராமங்களில் பணியாற்றும் சேவை காப்பாளர்களால் தொடர்கண்காணிப்பு, தகுந்த வழிகாட்டல், ஆலோசனைக்கு உட்படுத்தப்படுவார்கள் என்றும் அவர் கூறினார்.

மதுபானத்துக்கு அடிமையாகி பாதிக்கப்பட்டவர்களுக்கு விசேடமாக மட்டக்களப்பு, மாவடிவேம்பு மருத்துவமனையுடன் இணைந்ததாக உருவாக்கப்பட்டுள்ள அரச 'ஆரோக்கியா' புனர்வாழ்வு மையத்தில் சிகிச்சையளிக்கப்படுகின்றது. அங்கு ஒரே தடவையில் 10 ஆண்களும் 2 பெண்களுமாக தங்கியிருந்து சிகிச்சை பெறமுடியும் என்றும் அவர் கூறினார்.

இலவசமாக இரத்தப் பரிசோதனை, மருத்துவ ஆலோசனை, நஞ்சகற்றல் செயற்பாடு, விற்றமின் மாத்திரைகள் வழங்குதல், நடத்தை மாற்ற சிகிச்சை, குடும்ப ஆதரவு சிகிச்சை ஆகியவற்றுடன் சமூக பங்களிப்பு பயிற்சிகள், நெருக்கீட்டு முகாமைத்துவம், ஆத்திரத் தணிப்பு உள்ளிட்ட பயிற்சிகள் இவ்வாறானவர்களுக்கு வழங்கப்படுவதாகவும் அவர் கூறினார். (வ)

## முன்னேஸ்வர ஆலயத் தேர் ஞாயிறன்று

யாழ்ப்பாணம், செப்.5
முன்னேஸ்வரம் ஆலயத் தேர்த்திருவிழா நாளை மறுதினம் நடைபெறவுள்ளது.

கடந்த மாதம் 12ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமான திருவிழா எதிர்வரும் 10ஆம் திகதி பூங்காவன உற்சவத்துடன் நிறைவடையவுள்ளது.

நாளை சனிக்கிழமை மாலை 6 மணிக்கு வேட்டைத் திருவிழாவும், நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுதினம் மறுநாள் நண்பகல் 12 மணிக்கு தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளது.

(வ)

# பனம்பொருள் உற்பத்தி குறித்த ஆலோசனை வழங்க இலங்கை வந்தார் ஜப்பான் பெண்

யாழ்ப்பாணம்.செப்.5
இலங்கையில் சர்வதேச தரத்தில் தரமான பனைசார் உற்பத்திப் பொருள்களை தயாரிக்கும் பயிற்சிகளையும் ஆலோசனைகளையும் வழங்குவதற்கென ஜப்பான் நாட்டிலிருந்து பெண் ஒருவர் இலங்கைக்கு வருகை தந்துள்ளார்.

தொடர்ந்து 2 வருடங்கள் இலங்கையில் தங்கியிருந்து தனது செயற்றிட்டங்களை உற்பத்தியாளர்களுக்கு வழங்கவுள்ளார்.

சந்தைப்படுத்தல், சர்வதேச தரத்தில் உற்பத்திகளை மேற்கொள்ளல் மற்றும் உற்பத்தி அதிகரிப்பு தொடர்பாக உற்பத்தியாளர்களை நேரடியாகச் சந்தித்து அவர்களுக்கான பயிற்சிகளையும் ஆலோசனைகளையும் வழங்கவுள்ளார்.

பனைசார் உற்பத்தியில் உற்பத்தியாளர்கள் ஆர்வம் காட்டுவதன் காரணமாகவும் வெளிநாடுகளில் பனைசார் உற்பத்திகளுக்கு மதிப்பு கிடைத்துள்ளதன் காரணமாகவும் இந்த செயற்றிட்டத்தை அவர் முன்னெடுத்துள்ளார்.

தற்போது உற்பத்தி செய்யப்படும் இடங்களை பார்வையிட்டு வருவதால் தொடர்ந்து எந்த வகையான பயிற்சிகளை வழங்குவது தொடர்பில் பனை அபிவிருத்தி சபையுடன் கலந்துரையாடவுள்ளார்.

சந்தைப்படுத்தல் துறையில் 14 வருடங்கள் அனுபவம் உடைய செல்வி. யோகொகவாஸ் தொண்டர் சேவைத் திட்டத்தில் பனை அபிவிருத்தி சபைக்கு இந்த பயிற்சித் திட்டத்தை வழங்க முன்வந்துள்ளார்.

(வ-14)

**தேவை**

வேலைகளுக்கு ஆள் தேவை.
பெண்கள் மட்டும் விரும்பத்தக்கது.
T.P: 0779280278

## கண்காட்சி இன்று

வடமராட்சி, செப்.5

பொலிகண்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை கல்விக் கண்காட்சி இன்று வெள்ளிக்கிழமை அதிபர் க.சண்முகராஜா தலைமையில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் வடமராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் அ.ஸ்ரீகரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (த-173)

**கட்டார் நாட்டின் முன்னணி நிறுவனத்தில் அதி உயர் சம்பளத்துடன் உடனடி வேலைவாய்ப்பு**

| | |
|---|---|
| Driver-Camco International School | Qr.1200 + Accommodation |
| Driver - Heavy (GCC valid licence) | Qr.2000 + OT |
| Garden Helper | Qr.1000 + OT (Age 30-55) |
| Furniture Carpenter | Qr.1300 + OT + Food |
| Super Market & Hospital Cleaner | Qr. 800 + OT |
| Meson | Qr.1300 + OT |
| Plumber | Qr.1300 + OT |

தங்குமிடம், மருத்துவம் என்பன முற்றிலும் இலவசம்.

இடம் : உதயன் விருந்தினர் விடுதி இல. 20, கன்னாதிட்டி ஒழுங்கை, காளிகோயில் வீதி, யாழ்ப்பாணம்
காலம் : எதிர்வரும் 7ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை
நேரம் : மு.ப. 9.00 - பி.ப 2.00 மணிவரை
ஆவணங்கள் : பாஸ்போர்ட், Photo, சுயவிபரக் கோவை.

உடன் தொடர்புகொள்ள: Lanka Voice (Jaffna) : 077 952 7575
Lanka Voice : Vavuniya, Mannar. 076 669 7789
Capital Recruitment International (Pvt) Ltd.
No. 130 3/1, Grand Pass, Colombo 14.
L/L No-2248

**ஆங்கிலத்திற்கு No.1 பயிற்சி மையம்**

A/L தோற்றிய மாணவர்களுக்கான விசேட பிரிவுகளுடன்

veta — Experts in English Training

ஆங்கிலம் பேச, எழுத, வாசிக்க, யாழில் பெருமளவு மாணவர்கள் தெரிவு செய்யும் ஒரே ஒரு முழுமையான ஆங்கிலக்கற்கைநெறி

Spoken English புதிய பிரிவுகள் ஆரம்பம்.



| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் |
|---|---|---|---|
| Sat, Sun 7.00 a.m. | Mon, Fri 9.30 a.m. | Mon, Wed 9.30 a.m. | Sat, Sun 3.30 a.m. |
| Tue, Thu 9.30 a.m. | Sat,Sun 3.30 Pm. | Sat, sun 2.30 pm. | Tue,Thu 8.00 p.m. |
| Mon, Fri 9.30 a.m. | | | |

சர்வதேச ஆங்கில பரீட்சைகள்

DMI COMPUTER EDUCATION — A1-Exam, B1-Exam — IELTS — DMI, British Council இன் அங்கீகரிக்கப்பட்ட IELTS பரீட்சை பதிவு மையமும் ஆகும்

DMI INTERNATIONAL ENGLISH COLLEGE

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் |
|---|---|---|---|
| No.113, கஸ்தூரியார் வீதி, Tel.: 021-222 4403 | M.M.V வீதி, Tel.:021-226 2470 | கண்டி வீதி, (HNB அருகில்) Tel.:021-227 0775 | No 130, கே.கே.எஸ். வீதி, (NSB வங்கி அருகில்) Tel.:021-224 1970 |

## மரண அறிவித்தல்

### ஸ்ரீபதி சர்மா கிருஷ்ணானந்தசர்மா

(விரிவுரையாளர் சமஸ்கிருதத்துறை யாழ். பல்கலைக்கழகம்,ஸ்ரீ கமலாம்பிகை சமேதகைலாய நாதஸ்வாமி ஆலய குரு)



துன்னாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் நல்லூர் சிவன் தோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட ஸ்ரீபதி சர்மா கிருஷ்ணானந்தசர்மா அவர்கள் நேற்று (04.09.2014) வியாழக்கிழமை இறைபடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஆயுள்வேத வைத்தியர் ஸ்ரீபதி சர்மா,லஷ்மி அம்மா தம்பதியரின் அன்பு மகனும், ரவிச்சந்திரிகா (முன்னாள் ஆசிரியை யாழ். வேம்படி மகளிர் கல்லூரி) அவர்களின் அன்புக் கணவரும், பிரம்மஸ்ரீ சுந்தரேஸ்வர ஐயர், மங்களகௌரி தம்பதியரின் மருமகனும், பத்மநாயகி அம்மா, பரமேஸ்வரி,சரஸ்வதி, சச்சிதானந்தசர்மா,அமுதாம்பாள், கமலாம்பாள் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.09.2014) பி.ப. 4.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று புதவுடல் தகனக் கிரியைக்காக கியன் காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ரவிச்சந்திரிகா கிருஷ்ணானந்தசர்மா (மனைவி)
மற்றும் சகோதர சகோதரிகள்.
0212263808

துன்னாலை வடக்கு,
கரவெட்டி

**சவுதி ராஜியத்தில் உள்ள முன்னணி நிறுவனம் ஒன்றில் அதியுயர் சம்பளத்துடன் உடனடி வேலைவாய்ப்பு**

| | | | |
|---|---|---|---|
| Finishing Carpenters | 33 | 1000 - 1500 + OT | |
| Electrician | 35 | 900 - 1400 + OT | |
| Plumbers | 36 | 900 - 1400 + OT | |
| Forman | 04 | 1900 - 2200 + OT | |
| Painters | 03 | 1000 - 1400 + OT | |
| Tiles setters (Meson) | 01 | 1000 - 1400 + OT | |
| Meson | 01 | 1000 - 1400 + OT | |
| Storekeeper ware house | 01 | 1400 - 1800 + OT | |
| Maintenance Helper | 10 | 800 - 950 + OT | |

இடம் : உதயன் விருந்தினர் விடுதி இல. 20, கன்னாதிட்டி ஒழுங்கை, காளிகோயில் வீதி, யாழ்ப்பாணம்
காலம் : எதிர்வரும் 7ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை
நேரம் : மு.ப. 9.00 - பி.ப 2.00 மணிவரை
ஆவணங்கள் : பாஸ்போர்ட், Photo, சுயவிபரக் கோவை.

தங்குமிடம், மருத்துவம் என்பன முற்றிலும் இலவசம்.

உடன் தொடர்புகொள்ள: Lanka Voice (Jaffna) : 077 952 7575
Lanka Voice : Vavuniya, Mannar. 076 669 7789
Arabian Gulf Enterprises
No. 72/26, Srisangaraja Mawatha, Colombo-10
Reg.No-969

**SPOKEN ENGLISH**

மூன்று மாத வாரநாள் பயிற்சிநெறி

இம்முறை A/L எழுதியோர்,இளைஞர்,யுவதிகள்,பல்கலைக்கழக மாணவர்கள், வெளிநாடு செல்வோர் இணைய முடியும்.

01.09.2014 இலிருந்து பதிவுசெய்யும் முதல் 100 பேருக்கு அனுமதிக்கட்டணம் 20 பாடப்புத்தகங்கள் (தமிழ்-ஆங்கிலம்) மற்றும் VIDEO DVD இலவசம்!!

வாரநாள் பிரிவுகள் (திங்கள்,புதன்) ஆரம்பம்
1.காலை 8.00-10.00 2.காலை 10.00-12.00

பதிவு செய்யவேண்டிய இறுதி திகதி 06.09.2014 சனி

SAAMSON Experts in English Training — 170, ஆஸ்பத்திரி வீதி, யாழ்நகர். 021 320 3313, 077 621 4567

**உதயன்** விளம்பரத் தொடர்புகளுக்கு advt@uthayan.com 0215671111

**GERMAN Institute**

German , Swiss நாடுகளுக்கான Deutsch மொழி வகுப்புகள் யாழ்ப்பாணத்தில் 7 வருடகாலமாக நடைபெறும் ஒரே ஒரு Institute. தொலைபேசியில் தொடர்பு கொண்டு வரவும்.
யாழ்ப்பாணம், ஆவரங்கால், சுன்னாகம்
Mrs.P.Kajenthini
T.P: 0771604823

**பொருளியற் கல்லூரி**
நாவலர் றோட், யாழ்ப்பாணம்

யாழ். நகரில்.....

பொருளியல்
S. மகேந்திரன்
சனி - ஞாயிறு
A/L - 2015 - 8.00 A.M
பேரினப் பொருளாதாரம்
A/L - 2016 - 10.00 A.M
சந்தைப் பொருளாதாரம்

ஆரம்பம்: 06.09.2014சனி

தனிப்பட்ட அனுமதிகள் வழங்கப்படும்
Note: இணுவில் - பொருளியற் கல்லூரி சித்தன்கேணி - BARATHY
இவ் நிறுவனங்களிலும் ஆசிரியரின் வகுப்புகள் நடைபெறுகின்றன.

**பொருளியற் கல்லூரி**
நாவலர் றோட், யாழ்ப்பாணம்

SPOKEN ENGLISH with GRAMMER

புதிய பிரிவு ஆரம்பம்
06.09.2014-சனி

பிரிவு I -11.00 A.M
N.நிஷாந்தன் Dip.in English

பிரிவு II -1.00 P.M
S.ஜெஜஷன் B.B.A.HRM. (SPL)

விரும்பிய பிரிவுகளில் அனுமதியினைப் பெற்றுக்கொள்ளவும்

**NEC**

பருத்தித்துறை வீதி,ஆனைப்பந்தி.
மணிக்கூட்டு வீதி,யாழ்நகர்.

A/L 2016
A/L 2015

கலை, வர்த்தக, தொழில்நுட்ப

புதிய பிரிவுகள் ஆரம்பம்:
06-09-2014 சனி காலை 9.00 மணி

அரசும் அலகில் இருந்து கற்பிக்கப்படுகின்றது.

அரிவிருந்தி உத்தியோகத்தர்களுக்கான விசேட திறன்காண் தடைப்பரீட்சை வகுப்புக்கள்

ஆரம்பம் ஞாயிறு (7/9) காலை 9.00 மணி ஒவ்வொரு ஞாயிறும் நடைபெறும்.
யாழ்ப்பாணக்கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு (யாழ். ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கிக்கு அருகில்)

**வேலையாள்கள் தேவை**

யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள பிரபல வர்த்தக நிலையம் ஒன்றுக்கு வேலையாள்கள் தேவை.
25-35 வயதுக்குட்பட்ட ஆண்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு: 077 779 7547

**போட்டிப் பரீட்சை விசேட கருத்தரங்குகள்**

27 ஆம், 28 ஆம், 4 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள நிர்வாக சேவை. (SLAS) பரீட்சைக்குரிய மாதிரி வினாத்தாள் கருத்தரங்குகள்.
பிரிவு I சனி, ஞாயிறு 1.00 மணி-5.00 மணிவரை.
பிரிவு II ஞாயிறு 8.30-4.30 மணிவரை.
பிரிவு III திங்-வியாழன் வரை மாலை 5.00-7.00 மணிவரை.

அரச முகாமைத்துவ உதவியாளர் பரீட்சைக்குரிய வகுப்பு ஒவ்வொரு ஞாயிறும் 2.00-5.00 மணிவரை நடைபெறும்.
ஆரம்பம்: (7/9) பி.ப. 2.00 மணி/T.P:075 416 4564

யாழ்ப்பாணக்கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு (யாழ். ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கிக்கு அருகில்)

Sep 27th,28th மற்றும் 4th திகதிகளில் நடைபெறவுள்ள SLAS நிர்வாக சேவை பரீட்சைக்கான கருத்தரங்குகள்
காலம்
06.09.2014 சனி
13.09.2014 சனி
19.09.2014 வெள்ளி
20.09.2014 சனி
காலை 8.30-5.00 மணிவரை

முந்திலும் எதிர்பார்க்கப்பட்ட சிங்கள மொழிமூல வினாத்தாள்கள் கலந்துரையாடப்படும்

விரிவுரையாளர்கள்
P.உமாசங்கர்
P.கமல்தாசன்

நாவலர் கல்வி நிலையம்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
0774696695

**தேவை**

வீட்டு வேலை செய்வதற்கு பணிப்பெண் தேவை
021 7912997

**காணி விற்பனை**

இல.17, இராமலிங்கம் வீதி (AGA Office இன் ஒரு பக்க எல்லையுடன் செல்லும் வீதி) சாவகச்சேரியில் அமைந்துள்ள ஒரு பரப்பு 4.76 குழி காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 871 9515

**மூக்குக் கண்ணாடி தவறவிட்டது**

பார்வைக் குறைபாடுள்ளவரின் மூக்குக் கண்ணாடி (சிவப்பு நிறம்) 15.09.2014 வெள்ளிக்கிழமை அதிகாலை 5.15 மணியளவில் பருத்தித்துறை சாவகச்சேரி வீதி, துன்னாலை காசிநாதர் வித்தியாசாலைக்கு முன்பாக தவற விடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து தந்து உதவும்படி மன்றாட்டமாகக் கேட்டுக் கொள்கின்றோம். (சன்மானம் வழங்கப்படும்.)
தொடர்பு: 077 658 6256/07

**MIS BIT CAMPUS**

தொழினுட்பக்கல்லூரி எதிரில்
Semester-1 ஆரம்பம்
சனிக்கிழமை காலை 9.00 மணி
2013 Best Result for semester 1 in Jaffna
# 26, Brown Road, Jaffna 077 6577359, 021 222 0288

Computer System
Information System
Intro.Mathematics
Comm.Skills
Web Application
Personal Computing

**வேலையாள்கள் தேவை**

யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய இடங்களில் இயங்கும் தனியார் நிறுவனம் ஒன்றுக்கு மேசன், தச்சு, பெயின்ரிங் வேலை தெரிந்தவர்கள் தேவை.

தொடர்பு: 078 736 1361

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 05.09.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.